வாசகர்களுக்கு இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இளவாலையின் பெருமைகளை
எடுத்துரைக்கவேண்டி மெல்ல திறக்கிறது
'வாலையூர் வாலிபரின்'
நேத்திரம்

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்

அரையாண்டு சஞ்சிகை | வீச்சு-1 27.12.2014 - 15.06.2015



இளவாலை
வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்
பயண சுவடுகள்
— ஒரு தொகுப்பு —

Happy New Year 2015

உண்டி கொடுத்தோர்
உயிர் கொடுத்தோரே

வித்துவான் ஆ. தா. ஆறுமுகம் B.A



தேசிய வீராங்கனை
"அனித்தா"
உடன் ஓர் நேர்காணல்

MERRY CHRISTMAS

விலை 200/=

வெளியீடு : இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

Lib(m)
12 JAN 2015
Vall...
RECEIVED

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் வெளியீடான

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்

வீச்சு 1, 27. 12. 2014

கலைமகள் படிப்பகம், பிரதானவீதி
இளவாலை

தொலைபேசி : 0750416493, 0750416476, 0773992478

இணையம் : www.ivvsangam.com

முகநூல் : www.Facebook.com/ivvsangam

நூலாசிரியர் : திரு. நா. சுகந்தன்
அமைப்பாளர்
(இளவாலை வருத்தப்படாதவாலிபர் சங்கம்)

காப்பாளர் : திரு. சி. ரிஷாந்தன்
தலைவர்
(இளவாலை வருத்தப்படாதவாலிபர் சங்கம்)

ஆலோசகர் : திரு. சு. சுதர்சன்
போஷகர்
(இளவாலை வருத்தப்படாதவாலிபர் சங்கம்)

அட்டைப்படம் : திரு. ந. கிரிஷாந்
உபதலைவர்
(இளவாலை வருத்தப்படாதவாலிபர் சங்கம்)

மலர்க்குழு : திரு. ச. லக்ஷன்
திரு. பொ. மதியழகன்
திரு. இ. சக்திக்குமரன்

அச்சுப்பதிப்பு : வைரஸ் பிறிண்டேர்ஸ்
இணுவில்.

விலை : ரூபா 200/=

நேத்திரத்தின் அடுத்த வீச்சு 15. 06. 2015

## நேத்திர வீச்சினுள்.......

**பெரியோர் சொல்லை மீறலாமா?...**
சிவயோகமதி கந்தவனம் B.A
பக்கம் 65

**சிறுநீரகப் பிரச்சினைகள் தொடர்பான ஓர் மருத்துவ ஆலோசனை**
வைத்தியகலாநிதி
திரு.த.பேரானந்தராஜா
பக்கம் 33

**தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**
ச.நகநந்தினி
ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்
பக்கம் 58

**உள்ளூராட்சி மன்றங்கள் - ஓர் பார்வை**
திரு.சு.சுதர்சன்
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை
பக்கம் 71

**தமிழ் காப்போம் - நாடகம்**
செபஸ்தி றொபின்சன்
பக்கம் 93

பரிசுப்புதிர்
பொங்கலன்று பரிசு

P53








# இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர் கோவில்

*Ilavalai Aanaivilunthan Vikkina Vinayakar Kovil*


ஆதீனகுரு
சிவாகம கிரியா தத்துவநிதி
சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக்குருக்கள்.
இளவாலை வடக்கு, இளவாலை.

Atheena Kurukkal
Siwahama Kriya Chathuwanithi
Siwasri Ramabalachchanthirakurukkal
Ilavalai North, Ilavalai.


## ஆசிச்செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது "நேத்திரம்" என்னும் அரையாண்டு சஞ்சிகையை வெளியீடு செய்ய இருக்கின்றது. இச் சஞ்சிகை வெளியீட்டிற்கு ஆசிச்செய்தி கூறுவதில் நான் பெரு உவகை அடைகின்றறேன்.

எமது கிரமாத்திலே இவ் வருத்தப்படாத வாலிபர் சங்கமானது பல நல்ல சமூக, கல்வி, கலாசார சேவைகளை மிகவும் துடிப்புடன் ஆற்றி வருகின்றனமை யாவரும் அறிந்ததே இவர்களின் இந் "நேத்திரம்" சஞ்சிகை வெளியீடானது மிகவும் ஆக்கபூர்வமானதும் அறிவுபூர்வமாதுமான ஒரு செயற்பாடும் மிகவும் வரவேற்கத்தக்க விடயமும் ஆகும்.

இன்றைய காலகட்டத்திலே நல்ல நூல்கள், சஞ்சிகைகளின் வெளியீடு அருகி மக்களிடையே வாசிப்புபழக்கமும் குறைவடைந்து வருவது மனவருத்தத்திற்குரியது. எனவே இச் சஞ்சிகை வெளியீடானது மக்களுக்கும், கல்வி சமூகத்திற்கும் நல்ல பயனுள்ள வகையில் அமையும் இச் சஞ்சிகையை வெளியிடும் குழுவினருக்கும், ஏனையோருக்கும் எல்லாம் வல்ல ஆணைவிழுந்தான் விநாயகப் பெருமானின் அருளாசி கிடைக்க வேண்டிய பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
சிவஸ்ரீ இராம.பாலச்சந்திரக்குருக்கள்
(இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகராலய ஆதீனகுரு)

**"REMAIN IN MY LOVE" (Jn 15:9b).**

✠



பங்குத்தந்தை,
புனித அன்னாள் ஆலயம்,
இளவாலை.

The Parish Priest,
St. Anne's Church,
J/ Ilavalai,
Sri Lanka.

---

# இளவாலைப் பங்குத்தந்தையின் ஆசியுரை

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியில் அவர்களால் வெளியிடப்படும் "நேத்திரம்" சஞ்சிகைக்கும், அவர்கள் இதுவரையாக முன்னெடுத்த முன்னுதாரணமான செயற்பாடுகளுக்குமாக வாழ்த்துக் கூறி இளையோரைப் பாராட்டுவதில் மனநிறைவடைகிறேன். சமூக நலன் கொண்டு அவர்கள் ஆற்றிய நற்பணிகள் பல.

மற்றைய வாலிபர்களுக்கு எடுத்துக்காட்டாக, நல்மதிப்பீடுகளுக்குக்குச் சாட்சியம் பகிர்கின்றவர்களாக அவர்கள் உள்ளமை குன்றிலிட்ட தீபமாய் அடையாளப்படுத்தப்படுகின்றது. "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" என்ற இயேசுவின் வார்த்தையை வாழ்வாக்குகின்றார்கள்.

இன்னும் பல நற்பணிகளை முன்னெடுத்து இளவாலைக் கிராமத்திற்கு வளமூட்ட இறையருள் வேண்டி உங்களை வாழ்த்துகின்றேன்.

உங்கள் பணியில் மனநிறைவுடன்,
அருட்பணி சா.யோ.கு. ஜெயறஞ்சன்
இளவாலைப் பங்குத்தந்தை

**PARISH PRIEST**
**St. Anne's Church**
**Ilavalai.**

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை

DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය,වලිකාමම් උතුර, තෙල්ලිපලෙයි

பிரதேச செயலர் / Divisional Secretary / ප්‍රාදේශීය ලේකම් – 0213217333
நிர்வாக உத்தியோகத்தர் / Administrative Office / පරිපාලන නිලධාරි – 021 2241726
கணக்காளர் / Accountant / ගණකාධිකාරි – 021 2241723
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் / Assistant Director of Planning / සහකාර සැලසුම් අධ්‍යක්ෂ – 021 41722

அலுவலகம் Office කාර්යාලය 021 2241726 தொலைநகல் Fax ෆැක්ස් අංකය 021 2241726 மின்னஞ்சல் Email ඊ-මේල් dstellippalai.@pre.sltnet.lk


எனது எண் / My No / මගේ අංකය – DS/VN/Message/2014
உமது இல / Youe No / ඔබේ අංකය –
திகதி / Date / දිනය – 15.12.2014

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

*02.11.2013* இல் ஆரம்பிக்கப்பட இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகத்தின் செயற்பாடுகள் அபரிமிதமானவை. இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அதன் சேவை, அர்ப்பணிப்பு உண்மையில் பராட்டுக்குரியது. விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சமூக விழிப்புணர்வு நாடகங்கள், வறியோர்க்கான உதவிகள், கல்விக் கருத்தரங்குகள், கலாசார அர்ப்பணிப்புச் செயற்பாடுகள் எனச் சமூகத்திற்குத் தேவையான விடயங்களைச் செய்து வருவது மனங் கொள்ளத்தக்கது.

இந்நிலையில் இச்சங்கம் தனது முதலாவது சஞ்சிகையாக "நேத்திரம்" என்ற பெயரில் கன்னி வெளியீடாக இச் சஞ்சிகை இளவாலைக் கிராமத்தின் மனங்கமழும் விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இம் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். தொடர்ந்து ஆறு மாத்திற்கு ஒரு தடவை வெளிவரவிருக்கும் இச் சஞ்சிகை செழுமை பெற்றுச் செல்லவும் இவ் வருத்தப்படாத இளைஞர் கழகம் மென்மேலும் தமது சேவையினைச் சிறப்புற ஆற்றவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி அமைக்கின்றேன்.

பிரதேச செயலாளர்,
வலி வடக்கு,
தெல்லிப்பளை.

K.SHRIMOHANAN
Divisional Secretary.
Divisional Secretariat.
Valikamam North.
Tellipalai.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை. (மல்லாகம்)
වලිකාමම් උතුරු ප්‍රාදේශීය සභාව කාංකසන්තුරේ (මල්ලාකම්)
Valikamam North Pradeshiya Sabha Kankesanthurai (Mallakam)

My No } Your No } Date }

# பிரதேசசபை தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் கன்னி முயற்சியாக உருவாகியுள்ள "நேத்திரம்" அரையாண்டு சஞ்சிகையின் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியும் புளங்காங்கிதமும் அடைகின்றேன்.

இளவாலையூரின் எழுத்தாளர்கள், கவிஞர்களின் ஆக்கங்களையும், இளவாலையூரின் பெருமைகள் போன்று நல்ல விடயங்களை அச்சேற்றி ஆவணப்படுத்தும் இக்கன்னி முயற்சி மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

துரதிஷ்டவசமாக நவீன விஞ்ஞான வளரச்சியின் காரணமாக நம் இளைய தலைமுறை, பாரம்பரிய பண்பாடுகளை மறந்து விலை மதிக்க முடியாத எமது பழம் பெரும் சொத்துக்களான இலக்கியம், வரலாறு, தமிழர் கலை கலாச்சாரம் என்பவற்றை மறந்து இன்ரநெற், எஸ்.எம்.எஸ் இல் கலாச்சாரத்தைச் சீரழிக்கும் விடயங்களை மட்டும் உள்வாங்கி பொழுதைக் கழிக்கும் இந்நாளில் இத்தகைய வெளியீடு நம் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு எடுத்தச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அரையாண்டு சஞ்சிகையாக வெளிவரும் இவ் வெளியீடு ஒரு சிறந்த ஆவணமாக வெளிவருவதற்கு அயராது உழைத்து ஊன்றுகோலாக இயங்கிய இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினருக்கு என் நன்றியும், பாராட்டுக்களும் உரித்தாகுக. இவர்கள் தம் முயற்சி - "ஆல் போல்" வேரூன்றி வளர்ச்சியடைய எனது நல்லாசிகள்.

திரு.சோ.சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசந்துறை (மல்லாகம்)

உ
சிவமயம்

# வருத்தப்படாத இளைஞர் கழகம்
## இளவாலை

IVV Sangam

SRI LANKA Youth

பதிவு இல : JF/TE/10 22/12/2014..

# தலைவரின் உள்ளத்தில் இருந்து




இளவாலை வருத்தப்படத வாலிபர் சங்கத்தின் தலைவராக இக் காலப்பகுதியில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கின்றது. காலமாற்றங்களிற்கு ஈடுகொடுத்து பல அரசியல் சூழல் மாற்றங்களை எதிர் கொண்டு பல்லின சமூக சூழலலொன்றில் பிற சமூகங்களுடன் உறவை பேணுவதுடன் தமிழர் தம் பண்பாட்டு அடையாளங்களை காத்து நிற்கின்ற வகையில் கலை இலக்கிய முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான கன்னி முயர்ச்சியாக இவ் வாலையூர் வாலிபரின் நேத்திரம் வெளிவருகின்றது.

பலபெரியவர்கள் வாழ்ந்து மறைந்த இளவாலை பதியினுடைய பெருமைகளை உலகிற்கு பறைசாற்ற பார்வை திறக்கின்றது வாலையூர் வாலிபரின் நேத்திரம். இலைமறைகாயாக இருந்த கவிஞ்ஞர்களினுடைய படைப்புக்களை தாங்கி மண்ணின் பெருமையை பாடுவது மட்டும் இன்றி மனிதர்களினுடைய சமூகம் கலை பண்பாடு என்பன மங்கிபோகாத வகையிலே அதனை காத்தல் வளர்த்தல் ஆகிய இரு பரிமானங்களைகைக் கொண்டுபார்வை இட போகின்றது. நிறைவாக மிககுறுகிய காலத்தில் இச் சஞ்சிகை தன் பார்வையை திறப்பதற்கு காரணமாக இருந்து எம்மோடு பல வழிகளிலும் கரம் கோர்த்து தோளோடு தோள் நின்று உழைத்த அனைவருக்கும் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவிப்பதில் மனநிறைவு கொள்கின்றேன்.

திரு.சி.ரிஷாந்தன்
தலைவர்,
இளைவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

# நூலாசிரியரிடமிருந்து......



'வாலையூர் வாலிபரின் நேத்திரம்' எனும் எமது அரையாண்டுச் சஞ்சிகை தொடரின் கன்னிப்படைப்பு இன்று உங்கள் கைகளில் தவழ்வதையிட்டு இந்த நூலின் ஆசிரியர் என்ற வகையில் நான் பெருமையடைகின்றேன்.

தடம்புரளும் இளைஞர் சமுதாயத்திடையே திடம் கொண்ட நோக்கோடு பயணித்துக் கொண்டிருக்கும் சங்கமென அகிலமே வாழ்த்து துதிக்கும் சங்கமாய் வளர்ந்திருக்கும் எமது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்; இளவாலை கிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்ப வேண்டியும் எம்மூர் வாழ் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் களமமைக்க வேண்டியும், முற்சங்கங்கள் தோன்றி தமிழ் வளர்த்தது போல இன்று இச்சங்கமும் தமிழ் வளர்க்க வேண்டுமென்ற அவாவுடனும் தன் 'நேத்திரங்களை' மெல்ல திறக்கிறது.

வாசிப்பு பழக்கமும், நூலகங்களும் அருகிப் போய் இணையதளம் எனும் ஊடக பழக்கவழக்கம் உருவாகி, மனிதனின் அகன்று விரிந்த அறிவு இன்று கணனி எனும் இயந்திரம் இல்லாது இயங்க முடியாத அளவு முடங்கிவிட்டது. இதனால் ஓலை சுவடுகளில் எழத்தாணி பதித்து முதன் முதலில் உலகுக்கு எழுத்தறிவித்த தமிழன் இன்று தன் பெருமைகளை பேசும் நூல்களையும் இழந்து கலாச்சாரங்களையும் மறந்து நாகரீகம் என்ற போர்வைக்குள் நசுக்கப்பட்டு கொண்டிருக்கிறான். நம் முன்னோர்கள் எழுதி வைத்த தமிழனின் பெருமைகளை உரைக்கும் நூல்களை வாசிக்க முடியாதவர்களாய் அவற்றை அறியாதவர்களாய் அந்நியனின் ஆடம்பரத்தை "ஆ" என வாய்பிளப்பவர்களாகி விட்டோம் தமிழராகிய நாம். செப்ப உரைப்பின் என்று தமிழனிடையே வாசிப்பு பழக்கம் அழிந்ததோ அன்று ஆரம்பமானது அவனின் கலாச்சாரத்துக்கான பிறழ்வு.

எனவே தான் குறைந்த பட்சம் எங்கள் கிராமத்தின் பெருமையை என்றாலும் எம்மவர்களுக்காக மீட்டி, கலைஞர்களுக்கு களம் அமைத்து, எங்கள் கிராமத்தமின் பெருமைகளாவது நாமறிந்து கொள்வதோடு இந்த சஞ்சிகை மூலமாக வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கலாம் என நம்புகின்றேன்.

இந்த சஞ்சிகையின் பயணம் அந்த இலக்கினை அடைந்து நேத்திரத்தின் அடுத்த பார்வை வீச்சு இன்னும் பலமானதாக அமைய இம்முறை சஞ்சிகையில் உள்ள தவறுகளை சுட்டிக் காட்டுங்கள் எனக் கேட்டுக் கொள்வதுடன் இன்னும் பல இளவாலையூர் கலைஞர்களின் ஆக்கங்கள், நேத்திரத்தின் பார்வை வீச்சினுள் அகபட்டு சஞ்சிகையின் பயணம் சிறக்க எல்லாம் வல்லஇறைவனை பிரார்த்திகின்றேன்.

பல மைல்கள் பயணம் செய்ய போகும் "நேத்திரம்" சஞ்சிகையின் பயணத்தில் முதலடியை எடுத்து வைத்தவன் என்ற பெருமைகளோடு,

நா.சுகந்தன்
அமைப்பாளர்,
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே

**வித்துவான் ஆ.தா.ஆறுமுகம்** B.A

இன்பத் தமிழ் மொழியின் பழமையான இலக்கியங்கள் நற்றிணை முதலான எட்டுத் தொகைகளும், திருமுருகாற்றுப்படை முதற் செய்யுளாக அமைந்த பத்துப்பாட்டுகளுமாகப் பதினெட்டு ஆகும். இவை சங்கமிருந்த புலவர்களாற் பாடப்பெற்றவையாதலின் சங்க இலக்கியங்கள் எனப் போற்றப்படும். மற்றெந்த உலகமொழியிலுங் காணப்பெறாத அகப்பொருள் புறப்பொருள்களை நூற்பொருளாகக் கொண்டவை. இ∴து இந்நூல்களின் தனிச்சிறப்பாகும். இவற்றின் உயர்ந்த பொருளமைதி குறித்துப் பாடிய புலவர்கள் சான்றோர்கள் எனப் போற்றப்பெற்றனர். இச்சான்றோர்களாற் பாடப்பெறுவது தமக்குக் கிடைக்கும் பெரும்பேறு என அக்கால மன்னர் கருதினர். ஏனெனில், எத்துணைப் பேரரசராயினும் பாடுதற்குத் தகுதியுடையவரையே புகழ்ந்தோ வாழ்த்தியோ பாடுவர். குறைபாடுடையோரைப் பாட மறுத்த நிகழ்வுகளும் உண்டு.

"என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றுங் கோலோன் ஆகுக.
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை"

– *புறம் 72., 10-16*



"தன்னை இழிவாகக் கதைத்த மன்னருக்குத் தக்க பாடம் படிப்பிக்காவிட்டால், 'எனது குடிமக்கள் கொடுங்கோலன் என்று தூற்றும் நிலைக்கு ஆளாவேனாகளு மேலும்,பெரும் புகழும் பேரறிவும் உடைய மாங்குடிமருதன் முதலான புலவர்கள் என்னைப் பாடாமல் ஒதுக்கிவிடுவார்களாக" ஏன மன்னன் வீரசபதங் கூறுமளவுக்குப் புலவர் சான்றாண்மை

மிக்கவர்களாக விளங்கினர். புலவராற் பாடப்பெறாமை பேரிழுக்காகும். அவ்விழுக்கு கோடுங்கோலன் எனத் தூற்றப்படுவதற்குச் சமமானது. இது பாண்டியன் தலையாலங் கானத்துச செருவென்ற நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினத்தை நோக்க இனிது விளங்கும். இன்னும், போர்முரசு வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்க நெடுந்தூரம் நடந்த களைப்பால் அப்போர்முரசு வைக்கும் புனிதமான கட்டிலிற் படுத்துறங்கிய புலவர் மோசிகீரனாரைக் கோபித்து வாளால் துண்டுபடுத்தாமல் களைப்பு நீங்கும்வரை நித்திரைசெய்ய உதவியாக, சாமரை வீசிய காவலன் செயல் நமது சிறுவருங் கற்றிருப்பர். அங்ஙனம் கவரி வீசியவன் சேரமான் தகடூர்எறிந்த பெருஞ்சேரல்இரும்பொறை. ஏன்பதும் கருத்திற் கொள்க. பிற்காலத்தில், இராஜராசச்சோழன் சிற்பக்கலைஞனுக்குத் துப்பற்படிகம் ஏந்தியதைச் சினிமாவிற் பார்த்திருப்பீர்கள். கலைஞருக்குப் பண்டைநாள் முதல் உயர்மரியாதை அளித்து வருவதை உணரலாம்..

'நெல்லும் உயிர்அன்றே, நீரும் உயிர்அன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'- (புறநானூறு) 186, என, சங்ககாலத்தில் குடிகள் மன்னன் குடைக்கீழ் இன்புற்று வாழ்ந்தனர்.. மேலும்,'இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத், தமியர் உண்டலும் இலரே'- (புறநானூறு182)என பிறர்க்கிட்டுத் தாம்உண்டு, பசிப்பிணி போக்கி மகிழ்ந்தனர். மன்னனும் தன்செங்கோல் கோடாது மக்களைக் காப்பதில் கண்ணாய் இருந்தனன். தம்முள் மாறுபட்டுப் போர்புரியும் மன்னர்க்குச் சங்கப்புலவர்கள் அறிவுரை கூறினர்ளூ சந்து (சமாதானம்)செய்து வாழவைத்தனர்ளூ இடித்தும் உரைத்தனர்ளூ வாழ்த்தினர். 'இந்த உலகம் நிலை இல்லாததுளூ எனினும், உலகம் நிலைக்கும் வரையிலாவது தம்பெயர். நிலைக்கச் செய்யவேண்டும்.' என்ற ஆசை எழுவது மறவராகிய

யாழ் குடாநாடு உட்பட தமிழர் வாழும் பிரதேசங்களில் குளம் என இறுதியாக வரும் ஓராயிரம் ஊர்ப்பெயர்கள் உள்ளன. ஆற்று நீர்வசதி இல்லாத யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழை வெள்ளம் வீணாகக் கடலுக்குப் போகும் இடங்களில் குளத்தோண்டி நீர்தேக்கி நெல்வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சினர். இளவாலை வயல்நல்ல எடுத்துக் காட்டாகும். இன்னும், சேந்தான்குளம் எம் கண்முன் நிழலாடலாம். தரவைக்குக் கிழக்கே மாரியில் வெள்ளந் தேங்கி நிற்கும் பெரியபள்ளமாக இன்று மிருக்கின்றமை அது முன்னர் நீர்ப் பாய்ச்சற் குளமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் அந்நியர் ஆட்சிக் காலதில் அழிந்த குளங்களில் இவ்வூரில் இருந்த அச்சிறுகுளமும் ஒன்றாகலாம்.

மன்னர்க்கு இயல்பேயாம். 'போர் உயிர் அழிவுக்குக் காரணமானது. அது மனிதரைக் காக்கவேண்டிய மன்னர்க்கு அடுக்காதசெயல்.,என, புலவர் குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் கூறும் அறிவுரை அவரைச் சான்றாண்மை மிக்கவர் எனத் தெளிய வைக்கின்றது.

அரசன் வெற்றிவீரனாகத் திகழவிரும்பினால் அவனுடைய போர்வீரர் உடல்வளம் மிக்கவராய் விளங்குதல் அவசியம்஡ உடல் வளம் பெறுதற்கு உணவுவளம் வேண்டும். உணவுவளம் பெருக்கும் வழியைத் தெளிவாகவும் சுருக்கமாகவுஞ் சொல்கிறார் குடபுலவியனார். நாட்டில் நீர் வளம் நிறைய இருக்கலாம். ஆனால் பயிருக்கு வேண்டும்போது, வேண்டும் அளவு நீர் கிடைத்தால் மட்டும் விளைவு உயரும். நெல் விளையும் வேளையில் இயற்கையின் தயவை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு மழை பொய்த்து வரண்டால்.....! பயிருக்கு வேண்டும்போது வேண்டும் அளவுநீர் வழங்குதலிலேதான் மனிதமுயற்சி இன்றியமையாதது ஆகின்றது. பொருத்தமான நீரைப் பொருத்தமான இடத்தில் (நிலம் நெளிமருங்கில) தேக்கிவைத்து வேண்டிய பருவத்தில் பாய்ச்சினால் விளைவு பெருகும். வானம்பார்த்த விளைநிலம் ஏக்கர் கணக்காக இருப்பின் உழுது பண்படுத்தல், அவச்சேதம் வராமற் காத்தல் என்பவற்றிற்குப் பெருஞ் சிரமமும் பொருட்செலவும் ஏற்படும்஡ முயற்சிக்குத் தக்க பலனைப் பெரிதுங் குறைக்கும். (புன்செய் விளைவு உதவாது என்று புலவர் கூறுவது கருத்திற் கொள்ளத்தகும்.) எனவே மலைப்பாங்கான நாடுகளிலே ஆற்றுநீர் பெருகி வரும் மலையும் பள்ளத்தாக்குமாகப் பொருத்தமாக அமைந்துள்ள இடங்களிற் குறுக்கே அணை கட்டி நீர்தேக்கி வை, இவ்வேலை பின்போடத்தக்கதன்று. உடனே செயற்படுத்த வேண்டிய ஒன்று. அவ்வாறு நீரைத்தேக்கி உணவுவளம் பெருக்கியோரே உண்டி கொடுத்தோர் ஆவர்஡ உயிர் கொடுத்தோரும் ஆவர் என்கின்றார்.

உயிர் கொடுத்தோர் என்ற சொல்லாட்சி கூர்ந்து நோக்கத்தக்கது நத்தை உடலிலும் உயிர் உளது. சிற்றெறும்பின் உடலிலும் அவ்வாறே. ஆதலாற் குடபுலவியனார் குறித்தது வெறும் உயிரை அன்று஡ உயிர்த் துடிப்பையே. உயிர்த்துடிப்பு நிறைந்த மக்கள் நாட்டில் வாழப்பெற்றால் செல்லும் உலகத்துச் செல்வமும் (சுவர்க்கம்) பெறலாம்஡ மற்றைய மன்னரை அடக்கி ஒப்பற்ற தனிப்பெரும் மன்னனும் ஆகலாம். இதனைப் புலவரின் வாக்கிலே பார்க்கலாம்.

.....செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும் 13
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி, — முருக்கி – நெரருக்கி
ஒருநீ ஆகல்வேண்டினும், சிறந்த — ஒருநீ – ஒப்பற்ற அரசன், சக்கரவர்த்தி
நல் இசை நிறுத்தல் வேண்டினும் மற்றதன் — இசை – புகழ்

தகுதி கேள், இனி மிகுதி யாள,
நீர்இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே,
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

புணரியோர்–நிலத்தில் நீரைச்சேமித்தோர்,

உடம்பும் உயிரும் படைத்திசினோரே, படைத்திசினோரே– நிலைநிறுத்தியவர்
வித்தி வான் நோக்கும் புன்புலம் கண்ணகல்
வைப்பிற்று ஆயினும்ஞ நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே, அதனால்

இறைவன்தாட்கு–தலைவனின் முயற்சிக்கு,

அடுபோர்ச் செழிய, இகழாது வல்லே வல்லே – விரைவில
நிலன்நெளி மருங்கின் நீரநிலை பெருகத்

நெளிமருங்கு – பள்ளத்தாக்குஞ

தட்டோர் அம்ம, இவண் தட்டோரே, தட்டோர்–(நீரை)தடுத்தோர்
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே – தட்டோரே– தளைத்தோர்,

புறம் 18 13-30

இந்நல்வழிகாட்டல் குடபுலவியனாரின் மதிநுட்ப விளைவாகவோ, பொறியியலறிவினாலோ எனக் கொள்ளவேண்டியதில்லை. புலவர்கள் பல நாடுகளுக்கும் செல்பவர்கள். முன்னைய மன்னர் பலர் அமைத்திருந்த குளங்களைப் பார்த்திருப்பார். பயனையும் உணர்ந்திருப்பார். அவற்றைப் பின்பற்றியே குளம் நிறுவும்படி அறிவுரைவழங்கினார் என்க. தமிழ் பயின்றோா எவரும பாரியைப்பற்றி அறிவர். பாரியைப்போல வரையாது வழங்குவது ஒன்று உண்டுஞ அதுவே மாரி என வழமையான கொடை உவமையை மாற்றி அமைக்குமாறு வாழ்ந்தான் அவன். "பாரி ஒருவனும் அல்லன். மாரியும் உண்டு உலகம் புரப்பதுவே" – புறம் - 107. பாரி மாமன்னனல்லன். ஆயினும் அவன் நிறுவிய குளங்களால் நாட்டில் வளம் பெருகிற்று. பெருகிய வளத்தை வாரி வழங்கினான். மூவேந்தருஞ் சதிசெய்து பாரியைப் போரிற் கொன்றுவிட்டனர். தந்தையையும் நாட்டையும் இழந்த பாரிமகளிரைப் பாரியின் உளங்கலந்த நண்பர் கபிலர், பாரி அமைத்து வளம் வளர்த்த குளம் ஒன்றுக்கு அயலிலே மலைஓரமாக பாரிமகளிரை அழைத்துக்கொண்டு நடந்து செல்கிறார்.அந்நாட்டு மக்களுக்கு உண்டியும் உயிரும் வழங்கிவந்த அக்குளத்தின் எதிர்காலங் குறித்து வருந்திப் பாடியபாடல் அக்குளத்தின் அமைப்பையும் அருமை பெருமையையும் அதனைப் பாரி பேணிய வகையினையும் இனிது விளக்கும்.

பாறையும் மலையும் பள்ளமும் பொருந்திய இடத்திற் பாரி அணைகட்டி இருக்கிறான் மேலே மலைகளிலிருந்து பாய்ந்துவரும் ஆற்றுநீர் அணைக் கட்டினாலே

தடையுண்டு தேங்கி உயர்ந்து அலையெறிந்து பரந்திருக்கின்றது. வளைவாகத் தேங்கி நிற்கும் தெளிந்த நீர் சூரிய ஒளியைத் திருப்பித் தெறிக்கின்றது. மலைவழியிற் செல்வோருக்கு வளைவாக அமைந்து ஒளி வீசிக்கொண்டிருக்கும் அக்குளம் அட்டமிச் சந்திரன் போற் காட்சி அளிக்கின்றது. இக்காட்சியைக் கபிலரின் கவிதை உள்ளம் பலநாளும் கண்டு களித்திருக்கும். இன்று, அவருடைய கண்ணுக்கு அக்குளம் அநாதையாக, அகதியாகவே தோன்றுகின்ற.து. குழந்தைகளைப்போல் பேணப்படவேண்டியவை குளங்கள். பாரியின் உயிர்கவர்ந்த சூழ்ச்சியாளர் அவனுடைய நாட்டு மக்களிலோ வளம் பெருக்குங் குளங்களிலோ நாட்டங் கொள்ளவேண்டிய தேவையில்லை. குளக்கட்டுக் காலத்துக்குக் காலம் மண் அணைத்தும் குறித்த இனப்புல் வளர்த்தும் பெருமரவேர் அணைக்கட்டினுள் நுழையாமலும் சீர் செய்யவேண்டும்ளூ பெருமழையினால் உடைந்துவிடவுங்கூடும். பராமரிப்பதற்கு ஒரு குழு (ஏரி வாரியம் நியமிக்கவேண்டும். வஞ்சனையாற் பாரியைக் கொன்ற மூவேந்தர் அவனுடைய நாட்டை வளம்படுத்துங் குளத்தைப் பேணுவாரா? இம்மன வேதனை கவிதையாக மலர்கிறது.

அறையும் பொறையும் மணந்த தலைய
அறை—பாறைளூ பொறை—பள்ளம், மணந்த— பொருந்திய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
எண்நாள் – எட்டாம்நாள்(அட்டமி)
தெண்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கொடுங்கரை—வளைந்தகரை கீள்வது—உடைதல்
கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரி தண்பறம்பு நாடே" புறம் -118

பண்டைய மன்னர் நிலம் நெளிமருங்கிற் குளங்கள் நிறுவியமையையும் அவற்றைப் பேணிப் பழுதடையாமற் பாதுகாத்தமையையும், முன்னைய செய்யுள்களால் அறிய முடிந்தது. இனி, அக்குளங்களிலிருந்து அளவாக நீர் வெளியேறச் செய்து வயலுக்கு நீர் பாய்ச்சியமைபற்றிக் காணலாம். நீரைக் கட்டுப்படுத்திப் பாயச்செய்தாலும், மழைக்காலத்தில் குளத்தில் நீர் மட்டம் உயர்ந்திருக்கும். மிகுந்த அமுக்கங் காரணமாக கால்வாயில் வேகமாக நீர்பாயும்.ளூ வாய்க்காலிலும் வேகமாக ஓடிப் புருவத்தைமேவிப் பாய்ந்து, கொஞ்சங் கொஞ்சமாகப் புருவத்தை அரித்து உடைத்துவிடும். கிணற்றுநீர் வாய்க்காலிலே உடைப்பெடுத்தால் நாம் என்ன செய்வோம். மண்வெட்டியினால் ஒரு பொழி மண்ணெடுத்து நீர் உடைத்துப் பாயும் இடத்திலே போட்டுத் தடுப்போம். மேலும், பலப்படுத்துவதற்காக இன்னொரு பொழி மண்ணைக் கூடுதலாகப் போடுவோம். வேலை இலகுவாக முடிந்துவிடும். ஆனால், அவ்வாறு வெகுவேகமாக ஓடிவரும் நீர் அரித்துவிட்ட உடைப்பிலே

போட்டால் நாம் திரும்புமுன்னரே போட்டமண் கரைய, உடைப்பு வழியாக நீர் வேகமாகப் பாயத் தொடங்கிவிடும். அதனால் நாம் நீரில் விரைவிற் கரையாத ஈரப்பற்றற்ற இறுகிய மண்ணை அல்லது அண்மையில் உள்ள ஏதாவதொரு திடப் பொருளை எடுத்து வைத்து அதன்மேல் மண்ணையும் போட்டு மூடித்தடுப்போம். குளப் பாய்ச்சல் நிகழும் வயற்பாங்கரில் காய்ந்த மண்ணைக் காண்டல் அரிது. நீர்வளம் மிக்க நாடாதலின் வயலிலும் வாய்க்காலிலும் மீனினம் பல நீந்தித் திரியும். காய்ந்த மண்ணைத் தேடி வினைகெடாமல் கைக்கெட்டும் அளவில் திரியும் வாளைமீனைப் பிடித்து உடைப்பிலே வைத்து அதன் மீது மண்போட்டு மூடிவிடுகின்றனராம்.

"…..தண்புனல் பரந்த பூசல்மண் மறுத்து
மீனின் செறுக்கும் யாணர்ப் யாணர்–புதுவருவாய்
பயன் திகழ் வைப்பின், பிறர் அகன் தலை நாடே" யாணர்–புதுவருவாய்
புறம் 7

"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் கோன் உயர்வான்"

என ஔவையார், வரப்பின் உயர்வு அரசனையும் உயர்த்தும் என்று இன்னும் ஒருபடி மேலே செல்கின்றார். வரம்பை உயர்த்தி நீரைத் தேக்க நீர்வளமும் உயரும்ஞ நெல் வளமும் பெருகும் குடிகளும் செழித்திருப்பர் வரியினாலும் ஏற்றுமதியாலும் அரசனும் ஓங்குவான் செங்கோலன் எனும் உயர்வும் பெறுவான் என்கின்றார். வரப்பு எனக் குறித்தது குளத்து வரம்பும் (அணைக்கட்டு) வயல்வரம்பும். அவரும் நீரணையை உயர்த்தி நீரைத் தேக்கிவைத்து வளம்பெறும் உத்தியையே புகட்டுகின்றார். பெருமழைக் காலத்தில் வெள்ளம் கட்டுப்பாடின்றிப் பெருகித் தன்னைக் கட்டுப்படுத்தி நிற்கும் வரம்பையே அழித்துவிடும். அப்போது வயலில் நீரே இன்றி ஈரப்பற்றுத்தான் மிஞ்சும். முன்னோர் ஆறுகளை இடைமறித்துச் சிற்றணை கட்டி அவ்வணையைக் கடந்து ஆறு பாயவும் சிறிதளவு நீர் தேங்கி நிற்கவுஞ் செய்து, அந்நீர்த் தேக்கத்தில் இருந்து கால்வாய்கள் ஊடாகத் தூரஇடத்துக் கழனிகளுக்கும் நீர்ப்பாய்ச்சினர் எனவும் அறியக்கிடக்கின்றது. சுருங்கை எனப்படும் நிலக்கீழ் வாய்க்காலும் அமைத்துள்ளனர்.

திருமாவளவன் எனப்பட்ட கரிகாற் சோழன் காவிரிப் பேராற்றிற் கல்லணைகட்டி, குடிமக்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதி செய்திருக்கிறான். ஆதலால், கரிகாற்பெருவளத்தான் எனச் சிறப்புப்பெயர் பெற்றான். 'பெருவளக் கரிகால்' (அகம்125) என்றே சிறப்பித்துப் பரணர் பாடியுள்ளார். அந்த அணைக்கட்டு இன்றும்

பயன்படுகிறது! கணவாய்களிலே அணைகட்டி நீர்த்தேக்கங்கள் நிறுவுவதே மரபு. ஆனாற் கரிகாலன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சமவெளியிலே அணைகட்டிய நுட்பத்தை இன்றைய பொறியியலாளரும் வியந்து பாராட்டுவர்! சோழமன்னர்அணைகள் கட்டிப் பலகால்வாய்கள் கிளைகளாக அமைத்துப் பெருமளவு நெல், கரும்பு பயிரிட்டனர். அதனாற் 'சோழநாடு சோறுடைத்து எனும் புகழ் பெற்றது. இத்தகைய வேளாண்மைத் தொழில்நுட்பம் அறிந்து பிறர்க்கெல்லாம் உண்டி கொடுத்து உயிருங் கொடுத்தோர் வேளிர் எனப் பெற்றனர் என ஆய்வாளர் கூறுவர்.

எமது நாட்டிலும் குளங்கள் அமைத்து நீர்ப்பாய்ச்சல் வசதி செய்வதை வன்னிப் பிரதேசம் முதலான இடங்களை ஆண்ட மன்னர்கள் தமது முதற்கடமையாகக் கொண்டனர். குளக்கோட்டன் எனும் பெயர்பெற்ற மன்னன் கோழிப்பறவை தூரத்துக்கு ஒரு குளம் அமைக்க வேண்டும் என்றுகூறிச் செயற்பட்டான் என்று முதியோர் கூறுவர். பின்னைய நாளில் அக்குளங்கள் பேணப்படாமையால் அழிந்துபோக இன்றுவரை ஊர்ப் பெயர்களாக பழமையை நினைவூட்டி நிலைத்து நிற்கின்றன. யாழ் குடாநாடு உட்பட தமிழர் வாழும் பிரதேசங்களில் குளம் என இறுதியாக வரும் ஓராயிரம் ஊர்ப்பெயர்கள் உள்ளன. ஆற்று நீர்வசதி இல்லாத யாழ்ப்பாணக் குடாநாட்டில் மழைவெள்ளம் வீணாகக் கடலுக்குப் போகும் இடங்களில் குளத்தோண்டி நீர்தேக்கி நெல்வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சினர். இளவாலை வயல்நல்ல எடுத்துக்காட்டாகும். இன்னும், சேந்தான்குளம் எம் கண்முன் நிழலாடலாம். தரவைக்குக் கிழக்கே மாரியில் வெள்ளந் தேங்கி நிற்கும் பெரியபள்ளமாக இன்றுமிருக்கின்றமை அது முன்னர் நீர்ப்பாய்ச்சற் குளமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்தும் அந்நியர் ஆட்சிக்காலதில் அழிந்த குளங்களில் இவ்வூரில் இருந்த அச்சிறுகுளமும் ஒன்றாகலாம்.

நம் முன்னோர் சிறுசிறு குளங்களாகப் பல அமைத்ததில் ஒரு சிந்தனைச் சிறப்பைக் காணலாம். பெருஞ் செலவிலும் பெருமுயற்சியிலும் பெருங்குளங்களை நிறுவுவதிலும் பார்க்கச் சிறுகுளங்கள் ஆங்காங்கே அமைப்பது பல வகையிலும் சிறந்தது. பேணுவதில் அதிக சிரமமும் இருக்காதுளூ நீர்ப்பாசன வசதியும் இலகுவாக அமையும். அன்றியும் பெருமழை காரணமாகக் குளக்கட்டு உடைந்தபோதும் பேரழிவு ஏற்படாது. இவ்வாறு பண்டைக்காலப் பண்பாட்டுத் தமிழன் வளம் பெருக்கி, உண்டியும் உயிருங் கொடுத்து வாழ்ந்து காட்டியமையைப் நினைந்து போற்றுவோம்.. இன்று நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக உறுஞ்சப்படுவதனால் கிணற்றுநீர் உவராகின்ற பேரபாயம் ஏற்பட்டுவருகிறது.

1. 'வருத்தப்படாத வலிபர் சங்கத்தினரே, இரசாயன உரம் போடுவதைக் குறைக்கச் சொல்லுங்கள்.. வளவுகளில் நுளம்பு வளராத குப்பைத் தொட்டி நிறுவத் தூண்டுங்கள், சிறுகண் அலுமினிய வலை மூடியைப் பயன்படுத்தலாம்.

2. 'வீட்டுக் கூரையில் விழும் மழைநீரைப் பீலிவழியாகத் தொட்டியிற் சேமித்து வளவுப் பயிர்களுக்குப் பாய்ச்சும், முறையை ஊக்குவியுங்கள,. இன்று பாரம் இல்லாத நீர்த்தொட்டிகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. சுவரை அடுத்து இரண்டு தூண் நிறுவித் தொட்டிவைக்கலாம். பெரியவீடுகளில் இரண்டு மூன்று தொட்டிகள் அமைக்கலாம்ளூ கிணற்றிலிருந்து இறைக்கும் செலவைக் குறைக்கலாம். வயலிற் பயிரை மூடிப் பெருவெள்ளந் தேங்கிநின்று குருத்துக் கக்கும் அழிவைக் குறைக்கலாம். நீங்கள் தனித்துச் சொன்னால் 'விளையாட்டுப் பெடியன்களின் கதை' எனப் புறந்தள்ளுவர், பெரியோர்களுடனும் கிராமாபிவிருத்திச் சங்கத்தாருடனும் இணைந்து செயற்படுத்துங்கள்..

3. மேலும், வெற்றிலைக் கொழுந்துக்கு ஒன்றைவிட்டொருநாள் இறைக்கும் முறையை மாற்றி இரண்டு விட்டொருநாள் இறைக்கத்தூண்டுங்கள். முருக்கமர நிழலில் வளரும் கொழுந்துக்குக் கடும் ஈரம் தேவையில்லை. புள்ளி விழும் நோய்க்குக் கடும் ஈரம் காரணமாகலாம். அவர்கள் பின்னடித்தால் ஒன்றைவிட்டும் இரண்டைவிட்டும் மாறிமாறி இறைக்கச் சொல்லுங்கள். இன்று விவசாயத்திணைக்களம் சிக்கன நீர்ப்பாய்ச்சல்முறை பல அறிமுகப்படுத்துகிறது. தொழில்நுட்பம் வளரும் இக்காலத்தில் பழைய முறைகளிலிருந்து நல்ல செயற்பாடுகளுக்கு மாற ஊக்கமளியுங்கள். சோதனைக்காகவேனும் செய்து பார்க்கச் சொல்லுங்கள். வடமாகாண நீர்ப்பாய்ச்சல் துறை மந்திரியாரை அழைத்து மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கூட்டங்கள் நடத்துகளூ



4. தெற்கு இளவாலையிலே போருக்கு முன்பு ஒருபெரிய 'காற்றாடி மின்பிறப்பாக்கி' செயற்பட்டது. அது பின்னர் செயலிழந்துவிட்டது. அதன் காரணத்தைக் கண்டறியுங்கள். இளவாலை வயலகளில், பனைமரச் சப்பறத்திற் பூட்டிய சிறுகாற்றாடி நீரியந்திரங்கள் பொருத்தி நீரிறைக்கத்தூண்டுங்கள்.


இவை ஒவ்வொன்றையும் செயற்படுத்த பெரியோரை உள்ளடக்கிய ஒவ்வொரு குழு நியமிக்கலாம். 'உண்டியும் உயிரும்' கொடுங்கள் இது உங்கள்

அடிப்படைக் கொள்கையாகட்டும். மற்றைய ஊர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டு இளவாலைக்குப் புகழ் தேடுங்கள்.

**வளர்க, வாழ்க வருத்தப்படாத வாலிபர் சங்கம்!**

மேலேயுள்ள கட்டுரையை எழுதியபோது மின்வலைத்தில் பின்வரும் செய்தியைக் கண்டேன். இதனைப்படித்தால் பழமைப் போக்கைக் கைவிடத் தயங்குவோரின் கண்களைத் திறக்கும் என நம்பி '*Seithy.com*'க்கும்இத்தளத்தை எடுத்து உதவிய இளங்கோவுக்கும் உங்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு இங்கே இணைக்கிறேன். இந்த இணையதளம் மிகச்சிறந்தது. நீங்களும் உங்கள் கணனிகளிலே தரவிறக்கம் செய்யுங்கள்.

மருத்துவத் தகவலும் உண்டு



உலகின் மிகப்பெரிய மலர்த் தோட்டங்களில் டுபாய்த்தோட்டமும் ஒன்றாகும். டுபாயில் பெரிய ஆறுகளோ தொடர்ச்சியான மழையோ இல்லை. என்றாலும், தளராத ஊக்கத்தோடுமுயன்று மரம், செடி, கொடிகளோடு தோட்டங்கள் உருவாக்கு கின்றனர். சென்ற ஆண்டு ஏறத்தாழ உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பூக்கள் கொண்டுவந்து72,000ச.அடி பரப்பில் 4.5கோடி பூக்கள் உள்ள(*MiracleGarden*) பெருந்தோட்டம் நிறுவியுள்ளனர் .விரைவில், வண்ணவண்ண வண்ணாத்திப் பூச்சித் தோட்டமும் (Butterfly Garden) ஆக்கப் போகிறார்கள்!

இதுபோல நாமும் ஏன் செய்ய முடியாது? முயன்றால் முடியும். நெப்போலியன் "'முடியாது' என்ற சொல்லை அகராதியிலிருந்தே நீக்கவேண்டும்" என்று சொன்னதை நினைவிற் கொள்க. பணம் வேண்டும் என்பதையும் உணர்வேன், விரலுக்குத் தக்க வீக்கம்.

# தமிழின் பெருமை

அஜந்தினி பாலகிருஸ்ணன்
கீரிமலை, இளவாலை

வீரநடைத் தமிழ் வென்றிடும் நற்றமிழ்
சார நயத்தமிழ் சான்றிடும் சொற்றமிழ்
ஈர நிறைத்தமிழ் இனித்திடும் இன்தமிழ்
கூரறிவுத் தமிழ் கொஞ்சிடும் நம் தமிழ்

கால நெடுங்கூரை கடந்திடும் பைந்தமிழ்
சீல முதற்றமிழ் செப்பிடும் செந்தமிழ்
மூல ஒலித்தமிழ் முந்திய முத்தமிழ்
கோல ஏழற்றமிழ் கொண்டிரும் நம்தமிழ்

தோயு கலைத்தமிழ் தொன்மை மிகு தமிழ்
ஆய கலைத்தமிழ் ஆயும் உயிர்தமிழ்
தூய நெறித்தமிழ் துலங்கு தெய்வத் தமிழ்
வாயும் இனித்திடும் வண்டமிழ் எம் தமிழ்

காவலர் போற்றிடும் கவினுறு மாந்தமிழ்
நாவலர் ஏற்றிடும் நல்ல நடைத்தமிழ்
பாவலர் பாடிடும் பாங்குடைப் பாந்தமிழ்
பூவலம் வந்து வேற் புண்ணிய பூந்தமிழ்

இதோ ஒரு மாஜிக்
13837 X உங்கள் வயது X 73 = ?
உங்களுக்குக் கிடைப்பது
அபூர்வமான விடை

# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பயணச் சுவடுகள்



ஓர் தொகுப்பு

ஊடகக்குழு,
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் இன்று தன்னுடைய முதலாவது ஆண்டினை இனிதே நிறைவு செய்து 2ம் ஆண்டில் கால்பதித்து பயணித்து கொண்டிருக்கிறது. நகைச்சுவை நோக்குடன் தென்னிந்திய திரைபடமான "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" எனும் திரைப்படத்தின் பெயரோடு சிறுகுழுவாக இணைந்து பாடல்களைப் பாடி, முகநூல் (Face book) இல் ஓர் பக்கம் ஆரம்பித்து உருவானது தான் இதன் பயணம்.

அந்த நேரத்தில் அக்குழுவிலிருந்து ஓர் ஆராக்கியமான எண்ணம் எதேர்ச்சியாக ஏற்பட்டது. அதாவது இளவாலை சித்திரமேழி சந்தியில் பாழடைந்து இருந்த பயணிகள் தரிப்பிட புனரமைப்பு. இதற்காக அந்த சிறுகுழுவில் இருந்த உறுப்பினர்களே தம்மாலான நிதிகளை வழங்கி அந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்தனர்.

அந்த கணத்தில் தான் கிராமத்தின் பார்வை மெல்ல சங்கத்தின் பக்கம் திரும்பியது. முகநூலில் சங்கப் பதிவுகளுக்கு விருப்புக்களும், வாழ்த்துக்களும் எகிறியது. பயணிகள் தரிப்பிடம் புனரமைக்க முதல் இருந்த உறுப்பினர் எண்ணிக்கையை விட புனரமைப்பின் பின் உறுப்பினர் எண்ணிக்கை பல மடங்காக வளர்ந்தது. அந்த பயணிகள் தரிப்பிடம் 2013ம் ஆண்டு தீபாவளி தினத்தன்று (02.11.2013) இனிதே திறக்கப்பட்டது. அப்போது கிடைக்கப் பெற்ற உற்சாகமும், வரவேற்பும் வாலிபரை மேலும் தெவிட்டிவிட ஊடகங்களும், பத்திரிகைகளும் சங்கத்தின் நாமத்தை உச்சரிக்க தொடங்க வீறுகொண்டது சங்கத்தின் பயணம்.

இது தான் சங்கத்தின் தொடக்கபுள்ளி இதன் பின் கலைமகள் படிப்பக புனரமைப்பு, கலைக்கூட செயற்பாடுகள் வறியவர்களுக்கான உதவி வழங்கும் திட்டங்கள், போரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான உதவி திட்டங்கள், கல்வி செயற்றிட்டங்கள், சமூகசேவைகள், விளையாட்டுதுறை சேவைகள், பண்டிகை விழா கொண்டாட்டங்கள் என பரந்து விரிந்தது சேவைகள். அந்த வகையில் சங்கத்தின் பயணச் சுவடுகளை இங்கு தொகுப்பு ஆக்குகின்றோம்.

## சமூக செயற்றிட்டங்கள்

- **பயணிகள் தரிப்பிட புனரமைப்பு** :- சங்கத்தின் முதலாவதும், சங்கத்தின் ஆரம்பத்திற்கு வித்திட்டதுமான செயற்றிட்டம்.

- **கலைமகள் படிப்பக புனரமைப்பு** :- 24 ஆண்டுகளாக பாழடைந்த பயனிழந்து நாவலடி சந்தி அருகே இருந்த கலைமகள் படிப்பகம் ஊர்மக்களின் சுமார் ஒரு இலட்சத்து இருபாதாயிரம் ரூபா செலவில் புனரமைத்து 2013ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி கோலகலமாக திறந்து வைக்கப்பட்டது. சங்கத்தின் மிக அதிகளவு நிதி செலவில் இடம் பெற்ற செயற்றிட்டமும் கிராமத்தில் சங்கத்துக்குரித்தான நிலையான நம்பிக்கையை உருவாக்கிய செயற்றிட்டமும் இதுவாகும்.

- **இரத்ததான முகாம்**
  தானத்தில் உயர்ந்த தானமாக கருதப்படும் இந்த தானத்தை இளவாலை வருதப்படாத வாலிபர் சங்கம் 6 மாதங்களுக்கு ஒரு முறை நடாத்துகின்றது. இதுவரை 3 முறை இரத்தான முகாம் நடாத்தப்பட்டு 143 குருதி கொடையாளர்களால் குருதி வழங்கப்பட்டு தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பட்டியலில் மிக அதிகளவிலான குருதி கொடையை 1 வருடத்தில் வழங்கிய அமைப்பாக முதலிடத்தை தனதாக்கியிருக்கிறது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்.

  *1வது இரத்ததான முகாம் :- 01.12.2013 (40 குருதி கொடையாளர்கள்)*
  *2வது இரத்ததான முகாம் :- 15.05.2014 (46 குருதி கொடையாளர்கள்)*
  *3வது இரத்ததான முகாம் :- 19.10.2014 – 1ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு (57 குருதி கொடையாளர்கள்)*

- **டெங்கு ஒழிப்புத் திட்டம்**

டெங்கு என்னும் கொடிய அரக்கனை இளவாலை கிராமத்தில் இருந்து முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இளவாலை வருதப்படாத வாலிபர் சங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டம் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டமாகும். இதுவரை சங்கத்தால் 2 முறை டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் நடாத்தப்பட்டது.

கிராமத்தவர்களின் வீடுகளில் டெங்கு நுளம்பு பெருக ஏதுவாக இருக்கும் பொருட்களை சேகரித்து பொதி செய்து வைக்குமாறு ஒலிபெருக்கி மூலமாக கிராமம் முழுவதும் அறிவித்தல் வழங்கி மறுநாள் சங்க உறுப்பினர்கள் வாகனங்களில் வீடுகள் தோறும் சென்று அப்பொதிகளை சேகரித்து உரிய முறைப்படி அப்புறப்படுத்தும் நடவடிக்கையும் மற்றும் பொது இடங்களில் டெங்கு பெருக

ஏதுவான காரணிகளை சங்க வாலிபர்கள் இணைந்து அழிப்பதுமே அச்செயற்றிட்டமாகும். இதன் போது சுவரொட்டி, துண்டுப்பிரசுரம் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இறுதியாக இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு செயற்றிட்டத்தில் கிராமத்தில் ஒரு முழுவாரத்தை டெங்கொழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை நடாத்தப்பட்டது. இதில் பாடசாலைகள், பொது இடங்கள், பிரதேச செயலகம் என்பவற்றில் "டெங்கு விழிப்புணர்வு' ஏற்படுத்தும் விழிப்புணர்வு தெருநாடகங்கள் முன்னெடுக்கப்பட்டது.

- **மருத்துவ முகாம்**

கிராமத்தவரின் வருத்தப்படாத வாழ்வுக்கு வழி அமைக்கும் முகமாக மருத்துவமுகாம் நடாத்தப்படுகிறது. இதுவரை 2முறை நடாத்தப்பட்டிருக்கிறது இம்முகாம். முதலாவது முறை கலைமகள் படிவகத்தில் பிரபல வைத்திய நிபுணர்களின் வருகையோடு நடாத்தப்பட்டது.

2வது முறையாக தொற்று நோய்களை ஆரம்பத்தில் இனங்காணும் நோக்குடன் Dr.திருபேரானந்தராஜா அவர்களின் ஆலாசனைகளின் கீழ் பிரபல வைத்திய நிபுணர்கள், மருத்துவபீட மாணவர்கள் ஆகியோரால் இம்மருத்துவமுகாம் நடாத்தப்பட்டது. இவற்றுக்கான அழைப்பு, அறிவுறுத்தல்கள் ஒலிபெருக்கி மூலமாகவும், சுவரொட்டிகள் மூலமாகவும் வழங்கப்பட்டது.

- **"பச்சைப்புரட்சி" மரம்நடுகை**

  "மரவளம் மழைதரும்" என்ற தொனிப் பொருளோடு இளவாலை கிராமத்தில் ஒரு வாரத்தில் 1001 மரக்கன்றுகள் நடுகை செய்தல் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஒரு முழுவாரம் மரம் நடுகை வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்காக சங்கத்தால் மரப்பண்ணைகளில் இருந்து மரக்கன்றுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு கிராமத்தவரின் வீடுகள் தோறும், சங்க உறுப்பினர் சென்று குறைந்த விலையில் மரக்கன்றுகளை விநியோகித்தனர். எதிர்பார்த்தது போல ஒரு வாரத்தில் இந்த "பச்சைபுரட்சி" செயற்றிட்டம் வெற்றி செயற்றிட்டமானது.

- **மாட்டு வண்டில் சவாரி**

  தமிழர் நம் வீரபாரம்பாயத்தை பறைசாற்றும் வகையிலும், எமது கிராமம், அயல் கிராமங்களில் இருக்கும் சவாரி பிரியர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த மாட்டு வண்டில் சவாரி போட்டிகள் நடாத்தப்பட்டன. இதுவரை இருமுறைகள் நடாத்தப்பட்ட இப்போட்டியில் முதன் முறையான போட்டி, இளவாலை கருகம்பனை சாவரிதிடலில் 20 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் திடலை புனரமைத்து நடாத்தப்பட்டது.

இரண்டாம் முறையான போட்டியை, ஒரு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பரிசில்களுடன் நீர்வேலி சவாரித்திடலில் கோலகலமாக நடாத்தினோம். இவற்றில் 65 மாட்டுவண்டி சோடிகள் பங்குகொண்டது குறிப்பிடத்தக்கது.

- **பாடசாலை யொன்றுக்கான சமயலறைக் கட்டம்**

வலித்தூண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையானது போரால் முழுமையாக சிதைவுற்று அரசினால் மீண்டும் ஓர் சிறிய கட்டட அமைப்புடன் இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் வெறுமனே 5 வகுப்பறைகள் மாத்திரமே உள்ள நிலையில் உலக உணவு திட்டத்தால் வழங்கி வரும் உணவினை சமைப்பதற்கு சமயலறை கட்டம் இல்லாமையால் வகுப்பறை ஒன்றே சமயலறையாக பயன்படுத்தப்பட்டது. இதனை முன்னிட்டு அப்பாடசாலையின் அதிபர் சங்கத்தை கேட்டுக் கொண்டதற்கமைய ரூபா 50000/= செலவில் சமயலறை கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

- **இரத்ததான ஊர்வலம்**

உலக இரத்தான தினம் இம்முறை இலங்கையில் கொண்டாடபட்டதையடுத்து, யாழ் மாவட்ட இரத்ததான ஒன்றியத்தால் குருதி கொடைகள் கௌரவிக்கும் நிகழ்வும், ஊர்திகள் மூலமாக கையெழுத்துக்கள் சேகரிக்கும் நிகழ்வும் இடம் பெற்றது. இதனை சிறப்பிக்கும் முகமாக இளவாலை வருத்தப்படாத வாலிவர் சங்கமும் It starCentre உம் இணைந்து காங்கேசன்துறை வீதியின் பிரதான சந்திகள் தோறும் இரத்த தானத்தை ஊக்கவிக்கும் தெருநாடகங்களும் நடாத்தப்பட்டது. இது பாரிய வரவேற்பை பெற்றது.

- **ஆயுள்வேத மருத்துவ முகாம்**

இளவாலை கிராமத்தவரின் வருத்தப்பாட வாழ்வுக்கு வழியமைக்கின்ற ஆயுள்வேத மருத்துவமுகாம் கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தில் நடாத்தப்பட்டது. இதில் அதிகளவிலான பொதுமக்கள் வருகை தந்து பயன் அடைந்தனர்.

- **அத்திபாரம் வெட்டிக் கொடுக்கப்பட்டது**

அரச சார்பற்ற நிறுவனங்களால் தற்போது வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் அந்த நிறுவனங்களால் அந்த வீட்டுத் திட்டத்திற்கு தேவையான முழுமையான நிதி வழங்கப்படுவதில்லை. எனவே அந்த வீட்டுத்திட்டத்திற்கு தேவையான மீதி நிதியை திரட்ட வசதியின்றி அக்குடும்பங்கள் எமது சங்கத்தை உதவியளிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கமைய இதுவரை மூன்று குடும்பங்களுக்கு அதாவது பிரான்பற்று பிரதேசத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கும் நவாலி பிரதேசத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கும் மற்றும் மாவிட்டபுரம் பிரதேசத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கும் அத்திபாரம் வெட்டிக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் அவர்களின் வீட்டுத்திட்டத்துக்கான அத்திவாரம் வெட்ட தேவையான 20, 000/= மிகுதபடுத்தி கொடுக்கப்பட்டது.

## "அரும்பு" செயற்றிட்டம்

- அறிவு இனி அரும்பும்" என்ற நம்பிக்கையுடனும், "அறிவு இனி அரும்பும்" என்ற வாழ்த்துக்களுடனும் எமது சங்கத்தால் இந்த கல்வி செயற்றிட்டத்தை முன்னெடுக்கின்றோம். அந்த வகையில் எமது "அரும்பு" கல்வி செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்கள் வருமாறு,

**தரம் 5 புலமை பரிசில் மாணவர்களுக்காக,**

- எமது கிராமத்தில் இருக்கும் 6 பாடசாலைகளை சேர்ந்த புலமைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களையும் உள்ளடக்கி தொடர் பரீட்சைகளாக 5 மாதிரிப் பரீட்சைகளை, யாழின் பிரபல ஆசிரியர்களால் தொகுக்கப்பட்ட வினாத்தாள்களுடன் நடாத்தி இறுதியாக பிரபல ஆசிரியர்கள் மூலமாக இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் நடாத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு தரம் 5 புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மற்றும் இவர்களுக்கு இளவாலை இலங்கை வங்கிக்கிளையில் வங்கி கணக்கும் ஆரம்பிக்கப்பட்டது.

**க.பொ.த. சாதரணதர மாணவர்களுக்கு**

- இளவாலை கிராமத்தை சேர்ந்த கல்விப் பொதுச் சாதாரண பரீட்சையில் தோற்ற உள்ள மாணவர்களுக்கு பிரபல ஆசிரியர்களை வளவாளர்களாக அழைத்து தமிழ், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கு இலவச கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

**கலைக்கூடம்**

- எமது சங்கம் ஆரம்பிக்க அடித்தளமாக அமைந்தததது இந்த கலைச் செயற்பாடுகள் என்பது தான் உண்மை. ஆரம்பத்தில் பல பாடல்கள் நகைச்சுவையாக வெளியாகின.

இவற்றில் சில பாடல்கள் பெரும் பெற்றியையும், வரவேற்பையும் பெற்றன. அவையாவன,

- "விடிந்தது காலை உதித்தது சூரியன்" சங்கத்தின் முதலாவது காணொளியுடன் கூடிய பாடல் இதுவாகும்.
- "ஈழத்தின் தலையது யாழ்ப்பாணமாம்" – சங்கத்தின் முதலாவது சமூக செயற்றிட்டமான பயணிகள் தரிப்பிட திறப்பு விழாவன்று உத்தியோக பூர்வமாக வெளிப்பட்டு வரவேற்பை பெற்றது.
- "நட்பெனும் வலை" – எமது சங்கத்தின் 1வது பிறந்த நாளன்று வெளியிடப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்று கொடுத்தது.

மேலும் எமது சங்கத்தின் கலைக்கூட பயணத்தில் அதி உச்சமாய் அமைந்தது இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் நடாத்தப்பட்ட "கோவலன் கண்ணகி வில்லிசை" நிகழ்வாகும். இவ்வில்லிசையே கலைக்கூடத்தின் முதலாவது அரங்க கலையாற்றுகையாகும்.

## உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம்

எமது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு போர்ச்சூழல் தமிழ் பேசும் உறவுகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் பலவகைகளில் பாதித்திருப்பது அனைவரும் அறிந்ததே. இது போக அவ்வப்போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களும் எமது உறவுகளை மேலும் கண்ணீர் சிந்த வைக்கின்றன.

எனவே நாமும் எமது சங்கத்தால் இயன்ற அளவு இந்த கண்ணீர் துடைக்கும் உன்னத பணிகளை செய்ய வேண்டும் எனும் உள்ளம் கொண்டு, எங்களால் திரட்ட முடிந்த நிதிகளை கொண்டு இந்த "உயர்த்தும் கரங்கள்" செய்றிட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இதன் மூலமாக வழங்கப்படும் உதவிகள் வெறுமனே அவர்களுக்கு உதவியாக மட்டும் அமையாது அவர்களின் வாழ்வில் ஓர் "உயர்வு" ஏற்ப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தால் உருவானதே "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டம் ஆகும். இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாவன,

- **பசுமாடு வழங்கல்**

  போரால் பாதிக்கப்பட்டு தந்தையை இழந்த முல்லைத்தீவு சுதந்திரபுரத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றிற்க்கும் இளவாலை கிராமத்தை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கும் தலா 20, 000/= பெறுமதி வாய்ந்த பசுமாடுக் கன்றும் வழங்கப்பட்டது.

**கற்றல் உபகரணங்கள் வழங்கல்**

- போரால் பாதிக்கப்பட்ட கரைதுறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட 25 மாணவர்களுக்கு தலா 3500/= ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- வலிதென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட 10 மாணவர்களுக்கு தலா2500/= ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- இளவாலை கிராமத்தை சேர்ந்த பாடசாலைகளில் கற்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 30 மாணவர்களுக்கு தலா 2000/= ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- காரைநகர் பிரதேசத்தை சேர்ந்த கண்பார்வை இழந்த தந்தையையும் 5 பிள்ளைகளையும் கொண்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 5000/= பெறுமதியான கல்வி உபகரணம் வழங்கப்பட்டது.

- இளவாலை மாரிசன்கூடல் சுப்பிரமணியம் பாடசாலையை சேர்ந்த மாணவர்களுக்காக ரூபா 10,000/= பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அப்பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க வழங்கப்பட்டது.
- தந்தையை இழந்த 3பிள்ளைகளைக் கொண்ட நகுலேஸ்வரப் பிரிவைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு ஒரு பிள்ளைக்கு தலா 2000/= பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- யா/சுன்னாகம் மகேஸ்வரி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுக்கான பரிசில்கள் அப்பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க வழங்கப்பட்டது.
- புனித ஹென்ரியரசர் கல்லூரியின் க.பொ.த சாதாரண தரத்தை சேர்ந்த, பெற்றோரை இழந்து பாட்டியாருடன் வாழும் மாணவன் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

ஏனையவை

1. **அரிசிப்பொதி சவால்** : தமிழ் C.N.N இணையத்தினால் நடாத்தப்பட்ட அரிசிப்பொதி சவாலை எதிர்கொள்ளும் நோக்குடனும் சங்கத்தின் முதலாமாண்டு நிறைவை முன்னிட்டும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முதலாமாண்டு மாணவர்களும் எமது சங்கமும் இணைந்து முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேச முகாமை சேர்ந்த 75 குடும்பங்களுக்கு தலா 2000/= பெறுமதியான உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டது. இதுவே அந்த நிறுவகம் நடாத்திய சவாலின் பெரிய சாதனையாக அமைந்தது.

2. **பதுளை மண்சரிவு நிவாரணப் பணி** : சமீபமாக பதுளை மாவட்டத்தில் கொஸ்லந்தை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் உறவுகளுக்கு உதவும் நோக்குடன் யாழ்மாவட்ட இளைஞர்கள் சம்மேளனமும், சுன்னாகம் ஐயனார் இளைஞர்கழகமும், சங்கமும் இணைந்து யாழ்மாவட்ட ரீதியாக உதவிப் பொருட்கள் மற்றும் நிதியை சேகரித்து, மண்சரிவினால் பாதிக்கப்பட்ட உறவுகள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்ட முகாமிற்கு நேரடியாக கொண்டு சென்று அவ் உதவிப் பொருட்களை கையளித்தனர்.

3. **மடிக்கணனி கையளிப்பு** :- போரின் பாதிப்பினால் கண்பார்வை இழந்து கணனி மூலமாக க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றி பல்கலைகழகத்துக்கு தெரிவான முல்லைத்தீவு பிரதேசத்தை சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவி ஒருவரின் பல்கலைக்கழக படிப்புக்கு 70,000/= பெறுமதியான மடிக்கணனி ஒன்று வழங்கப்பட்டது.

4. **கிணறு வெட்டுதலுக்கு நிதி வழங்கப்பட்டது** : முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட போரால் அங்வீனமடைந்த உறுப்பினர்களை கொண்ட குடும்பம் ஒன்றுக்கு அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய தேவையான நீர்வசதியின்மை காரணமாக பல மைல் தூரம் கடந்து சென்று நீர் பெற்று கொள்கின்றனர். இதனையடுத்து கரைத்துறைப்பற்கு பிரதேச செயலகம் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் 30000/= ரூபா நிதி கிணறு வெட்டுவதற்கு வழங்கப்பட்டது.

5. **விளையாட்டு வீரருக்கான உதவி** : இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியில் இருந்து தேசிய போட்டிக்கு தெரிவான அணியை சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட வீரர் ஒருவனுக்கு உதைபந்தாட்ட காலணி வழங்கப்பட்டது.

## பண்டிகை மற்றும் விழாக்கள்

- தீபாவளி

  இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதும் ஓர் தீபாவளி நாள் என்ற வகையில் இதுவரை 2 தீபாவளி கொண்டாடப்பட்டதுடன் இம்முறை தீபாவளி கொண்டாட்டம் சங்கத்தின் 1ம் ஆண்டு நிறைவுடன் இணைத்து கொண்டாடப்பட்டது.

- நத்தார் கொண்டாட்டம்

  மதபேதங்கள் கடந்து பயணித்து கொண்டிருக்கும் எமது சங்கம் கடந்த ஆண்டு நத்தார் தினத்தை முன்னிட்டு கிராமத்தவரின் வீடுகள் தோறும் சங்க உறுப்பினர்கள் நத்தார் தாத்தாக்களாக வேடமிட்டு, ஆடிப்பாடி புனிதர் யேசு பிறந்தார் என குதுகலத்துடன் கரோல் சுற்று சென்றனர்.

- **தைப்பொங்கல் விழா**

  எமது சங்கத்தின் விழாக்களின் வரிசையில் முதலிடம் வகிப்பதும், பிரமாண்டமாக கொண்டாடபட்டதும் இவ்விழா ஆகும். இதனை முன்னிட்டு வடமாகாண ரீதியாக கபடி போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, மற்றும் பட்டம் ஏற்றல் போட்டி, என்பன நடாத்தப்பட்டது. அத்துடன் தமிழர் நம் பாரம்பரியங்களை பறைசாற்றும் சறுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, தயிர்முட்டி அடித்தல் முதலான போட்டிகளும் நடாத்தப்பட்டு மேலும் பல கலைநிகழ்வுகளும் நடாத்தப்பட்டது.

- *சித்திரைத் திருவிழா*

தமிழரின் புதுவருடப் பிறப்பாக கருதப்படும் சித்திரரை புத்தாண்டை எமது சங்கம் கலை காலச்சார நிகழ்வுகளுடன் முன்னெடுத்தது. இதன் போது விசேட நிகழ்வாக யாழின் முன்னணிப் பேச்சாளர்கள் கலந்து கொண்ட விசேட விவாத அரங்கமும் மற்றும் இளவாலை கிராமத்தைச் சேர்ந்த கா.பொ.த பரீட்சையில் விசேட சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பும், இடம்பெற்றது.

- முதலாம் ஆண்டு நிறைவு விழா

கடந்த தீபாவளி தினத்தன்று (22.10.2014) இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரி மைதானத்தில் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கோலகலமாக கொண்டாடப்பட்டது.

இதன் போது இடம்பெற்ற சிறப்பு நிகழ்ச்சிகளாவன,

- "கருவி" மாற்று திறனாளிகள் அமைப்பின் விசேட இசை நிகழ்ச்சி மற்றும் விவாத அரங்கு.
- சங்கத்திற்கான புதிய இணையத்தளம் (www.ivvsangam.com) அங்குராற்பணம்
- "அரும்பு" கல்வி செயற்றிட்டத்தில் பங்கு கொண்டு தரம் -05 புலமை பரிசில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு
- இளவாலை கிராமத்தை சேர்ந்த தேசிய ரீதியில் சாதனை படைத்தவர்கள் கௌரவிப்பு.
- மேலும் பல கலைநிகழ்வுகள்

- மேதினம்

2014ம் ஆண்டின் மேதினத்தை முன்னிட்டு எமது சங்க உறுப்பினர்களால் "உழைப்பாளிகளே நாட்டின் முதுகெலும்புகள்" எனும் தொனிப் பொருளுடன் கீரிமலை நகுலேஸ்வர ஆலய முன்றலில் இருந்து கலைமகள் படிப்பகம் வரை உழைப்பாளிகளை பிரதிபலிக்கும் ஆயுதங்களுடனும், அவர்களை போற்றும் வாசகங்களுடனும் ஊர்வலம் நடாத்தப்பட்டது.

## நிதி திரட்டல் நடவடிக்கை

எமது சங்கத்தின் சேவைகளுக்கும், செயற்பாடுகளுக்கும், தேவையான நிதியை நாம் பல வகையில் திரட்டுகின்றோம். இவற்றில் பிரதானமாக "மண்ணின் மைந்தர்கள்" செயற்றிட்டம் காணப்படுகின்றது.

# எமது முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்பட்ட தேசிய சாதனை வீரர்கள்.




கோலூன்றி பாய்தலில்
தேசிய சாதனை 2014.




தேசிய உதைபந்தாட்ட
அணியில் தெரிவான வீரர்.




17 வயது பிரிவு உதைபந்தாட்டத்தில்
தேசிய அணியில் தெரிவானவர்.




தேசிய மட்ட கோலூன்றி
பாய்தலில் 2ம் இடம் 2014.

எமது "அரும்பு" கல்விச் செயற்றிட்டத்தில் பங்குபற்றி நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்பட்டோர்.



























▪ "மண்ணின் மைந்தர்கள்" செயற்றிட்டம்

எமது சங்கத்தின் ஆரோக்கியமானதும் உன்னதமானதுமான செயற்பாட்டை கண்டு எமது கிராமத்தை சேர்ந்த பல புலம்பெயர் உறவுகள் தம்மால் இயன்ற நிதியுதவியை வழங்கி வருகின்றன. இவ் நிதி உதவிகள் எமது சங்கத்தின் சேவைகளுக்கு வரபிரசாதமாகின்றது. எனவே இந்த காலத்தில் நல் உள்ளம் கொண்டு நல்லதை ஊக்குவிக்கும் உறவுகளுக்கு "மண்ணின் மைந்தர்கள்" எனும் கௌரவத்தை நாம் வழங்குகின்றோம்.

▪ "மாபெரும் இசை நிகழ்ச்சி"

போரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவும் நோக்குடன் மாபெரும் இசை நிகழ்ச்சி ஒன்றை கடந்த 14.02.2014 அன்று நடாத்தினோம். இதன் போது இந்த இசை நிகழ்வுக்கான நுழைவுச் சிட்டைகளை விற்பனை செய்து நிதியை திரட்டியிருந்தோம். இந்த இசை நிகழ்வை எமக்காக "சுருதி லயா" இசைக்குழுவினர் இலவசமாக வழங்கினர்.

▪ துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம

எமது சங்கத்தின் சேவைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் தேவையான நிதியை திரட்டும் நோக்குடன் இதுவரை 2 துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன.

அவையாவன,

- கருகம்பனை கவுணாவத்தை ஆலய வேள்விப் பொங்கல் விழாவின் போது,
- இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரியின் மாபெரும் உதைப்பந்தாட்ட தொடரின் போது

**ஏனையவை**

- எமது கிராமத்தை சேர்ந்தவர்களாலும் சங்கத்துக்கென பல நன்கொடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.
- இவை தவிர விழாக்களுக்கும், செயற்றிட்டங்களுக்கும் என பல நிறுவனங்கள் தமது அனுசரணைகளை வழங்கியிருக்கின்றன.
- மேலும் எமது சங்கத்துக்கென அண்மையில் மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ பா.கஜதீபன் அவர்களால் 50000/= ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் கையளிக்கப்பட்டன.

✍ எமது சங்கத்துக்கான வங்கி கணக்கு நடவடிக்கை யாவும் இலங்கை வங்கியில் இடம் பெறுவதுடன், எமது சங்கத்திற்கு நிதி நன்கொடை வழங்க விரும்புபவர்கள் இந்த இலங்கை வங்கி கணக்கில் பணம் வைப்பிட முடியும்.

## ஏனைய செயற்பாடுகள்

சிரமதானம் :-

- எமது கிராமத்தில் இருக்கும் கிறிஸ்தவ மற்றும் இந்து ஆலயங்களில் ஆலய உற்சவங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுகிணறுகள் சுத்திகரிப்பு :-

- எமது இளவாலை கிராமத்தை சேர்ந்த பொதுகிணறுகள் சுத்திகரிக்கப்பட்டதுடன் இளவாலை வைத்தியசாலையில் சிரமதானமும், கிணறுகள் சுத்திகரிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை :-

- தெல்லிப்பளை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட பாதினீயம் ஒழிப்பு நடவடிக்கைக்கு பிரதேச செயலரின் வேண்டு கோளுக்கு இணங்க எமது சங்கமும் கலந்து கொண்டு பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

தண்ணீர் பந்தல் :-

- இளவாலை கிராமத்தை சேர்ந்த பிரபல ஆலயங்களின் விசேட உற்சவ தினங்களில் எமது சங்க உறுப்பினர்களால் "தண்ணீர்ப் பந்தல்" நிறுவப்பட்டு அடியவர்களுக்கு தாகசாந்தி வழங்கப்படுகின்றது.

கொடும்பாவி எரிப்பு :-

- இளவாலை கிராமத்தில் சமீபமாக மழைவளம்குன்றி காணப்பட்டமையால், விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களின் நம்பிக்கையின் பிரகாரமும், அவர்களின் வேண்டு கோளுக்கு இணங்கவும் "கொடும்பாவி" கட்டி இழுக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

❖ இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலத்தில், குருநாகல் மாவட்ட மாணவர்களின் வருகையுடன் இடம்பெற்ற மாணவர் பரிமாற்ற நிகழ்வுக்கு பாடசாலை அதிபரின் வேண்டு கோளுக்கு இணங்க எமது சங்கத்தால் உணவு வசதி இலவசமாக செய்து கொடுக்கப்பட்டது.

பத்திரிகைகளில் நாம்...........


வருத்தப்படாத வாலிபர் சங்கம் தீவிரம்
மண்சரிவினால் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு உதவிப்பொருட்கள்
இணைந்து வழங்கிய யாழ்.இளைஞர்கள்
குருதிக்கொடை
45 பேர்
வழங்கினர்
வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால்
வீடு கட்டுவதற்கு அத்திபாரம் அமைப்பு
வாலிபர்
சங்கத்தின்
டெங்கு ஒழிப்பு
நடவடிக்கை
வறுமையில் வாழும் குடும்பத்திற்கு
வாலிபர் சங்கத்தால் உதவி
இலவச சித்த வைத்திய
மருத்துவ முகாம் இன்று
'பச்சைப் புரட்சித்' திட்டம்
இளவாலையில் ஆரம்பம்
வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும்
பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்
வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில்
சித்திரைப் புதுவருட நிகழ்வுகள்
இலவச மருத்துவ
முகாம் இன்று
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் தொற்றா நோய்களை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான மாபெரும் இலவச மருத் துவ முகாம் இன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இளவாலை ஆரம்ப

# சிறுநீரக பிரச்சினைகள் தொடர்பான மருத்துவ ஆலோசனைகள்

வைத்திய நிபுணர் திரு.த.பேரானந்தராஜா
சித்திரமேழி, இளவாலை.



இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 2 ஆயிரத்து 500 பேர் வரை நாட்பட்ட சிறுநீரக நோயினால் (Chronic Renal Failure) பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் சேர்கிறார்கள். சிறுநீரகம் (Kid – ney) செயலிழந்தால் அதனை சாதாரண மருந்துகள் மூலம் சீர்செய்ய முடியாது அதற்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அல்லது குருதி சுத்திகரிப்புச் சிகிச்சை போன்ற வற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

இவ்வாறு நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு தடவை குருதியை சுத்திகிப்பதற்கு சுமார் 6ஆயிரம் ரூபாவரை செலவாகும். வாரத்தில் குறைந்தது இரண்டு தடவையாவது இச்சிகிச்சையை மேற்கொள்ள வேண்டியிருக்கும் இச்சிகிச்சையை மேற்கொண்டவருக்கு குருதி நிறப் பொருளின் (Hae – moglobin) அளவைப் பேணுவத்கென செலவு வேறாக இருக்கும். குருதி சுத்திகரிப்புச் செய்து கொள்ளும் ஒருவருக்கு வருடாந்தம் 6 லட்சம் ரூபாவரை செலவாகும். அல்லது உறவினர் எவரேனுமுடைய சிறுநீரகத்தை (ஒரே குருதி வகையை உடைய) மாற்றீடு செய்து கொள்ளலாம். இதற்கு சுமார் 12 லட்சம் ரூபா செலவாகும். அதைவிட மாதாந்தம் உள்ளெடுக்க வேண்டிய மருந்துகளுக்கென 25 ஆயிரம் ரூபாவரை செலவாகும். இந்தச் செலவுகளை சாதாரண ஒரு குடிமகன் ஏற்றுக்கொள்வது மிகச்சிரமமே!

இலங்கையில் வருடாந்தம் பாதிக்கப்படும் 2500 பேருக்கும் குருதிச் சுத்திகரிப்பு (Haemo Dilaysis) சிகிச்சையை மேற்கொள்வதானால் வருடத்துக்கு 200 கோடி ரூபா (2பில்லியன் ரூபா) தேவைப்படுகிறது. இச்செலவு வரவு – செலவுத்திட்டத்தில் சுகாதாரத்துறைக்கொன ஒதுக்கப்படும் மொத்த நிதியின் ஏறாத்தாழ ஐந்தில் ஒரு பங்காகும்.

**சிறுநீரகததில 90 வீதம பழுதடையும வரை அறிகுறிகள வெளியே பெரியளவில தெரியாது**

அதனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் Chronioc Kidsay diteeal இணை அரச வைத்திய சாலைகளில் குணப்படுத்துவது சிரமமான

காரியம். ஆனால் தனியார் மருத்துவ மனைகளில் இச்சிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது. எனினும் சிறிது காலத்துக்கு Haemo Dialysis செய்து கொண்டு பின்னர் சிறுநீரக மாற்றுச் சிகிச்சையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் அரச வைத்திய சாலைகளிலும் சிகிச்சையினை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தினமும் எடுக்க வேண்டிய மருந்துகள், "டயலிசிஸ்" செய்வதற்கு முன்னரான குருதி பரிசோதனை டயனசிஸ் செய்து கொண்ட பின்னரான சோதனைகள், போக்குவரத்து ஏற்பாடு நோயாளிக்கான உதவியாள் என்றவாறு பெரும் செலவுகளும், அசௌகரியங்களும் ஏற்படும். இதனால் நோயாளியின் குடும்பம் நொந்து போய்விடும்.

## உரிய நேரத்தில் சிகிச்சை அவசியம்

எனவே, சிறுநீரகம் தொடர்பான நோய்களை உரிய நேரத்தில் கண்டறிந்து, சரியான சிகிச்சையை பெற்றுக்த கொள்ளுவதன் மூலம் ஏற்படவிருக்கின்ற பெரும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

சிறுநீரக நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உலகில் பல அமைப்புக்கள் செயற்படுகின்றன. இலங்கையிலும் சிறுநீரக மாற்றுக்கு உதவும் கழகம் Srilanka Association Of Nephrology and Transplantaion (SLANT) போன்ற அமைப்புக்கள் இயங்குகின்றன.

## சிறுநீரகங்களின் தொழிற்பாடுகள்

முதலில் சிறுநீரகங்கள் எவ் வாறான செயற்பாடுகளைப் புரிகின்றன என்பதனை நோக்குவோம். இதன் மூலம் சிறுநீரகங்கள் பழுதடைவதால் ஏற்படும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளலாம்.

## சிறுநீரகங்களின் முக்கிய தொழிற் பாடுகள்

சிறுநீரகங்கள் முக்கியமாக ஆறு தொழில்களைச் செய்கின்றன.

01. நாம் உண்ணும் உணவுகளில் இருந்து உருவாகின்ற யூரியா, கிரியாற்றினின் மற்றும் நைதரசன் கலந்த கழிவுப் பொருள்களை சிறுநீராக வெளியேற்றுதல். சாதாரணமாக ஒரு நாள் ஒன்றுக்கு 1.5l முதல் 2l வரையான சிறுநீரைக் கழிக்கின்றார்.
02. உடலில் நீரின் அளவையும் மற்றும் பொட்டாசியம், சோடியம் கல்சியம் போன்ற தாதுப்பொருட்களின் (Minerals) அளவையும் சமநிலையில் பேணுதல்.
03. உடலில் கார – அமிலம் தன்மையை (Acid – Visevalance) பேணுதல் சாதாரணமாக குருதியின் PH 7.4 ஆகும். இந்த Ph யினை பேணுவதில் சிறுநீரகம் சுவாசப்பை மற்றும் உடலில் உள்ள பிற அங்கங்கள் என சம்பந்தப்படுகின்றன. PH 7.2 இலும் குறைவடைந்தால் உயிர் ஆபத்தை ஏற்படுத்தலாம்.

04. உடலில் குருதி அமுக்கத்தை (Blood pressure) சீரான அளவில் பேணுதல் இதயம் சுருங்கும் போது குருதி குழாயில் உள்ள அழுத்தம் (Systoilicyressure) 120 – 140 ml. HG க்கு இதயம் தளர்வடையும் போது குருதிக் குழாயினுள் உள்ள அழுத்தத்தை Dias lolic pressure யினை 70 – 90ml HG இடையிலும் பேணுதல்.

இவ்விடயத்தில் சிறுநீரகத்தால் சுரக்கப்படும் ரெனின் (Renin) என்ற சுரப்பு Hormone முக்கிய பங்கை வகிக்கின்றது.

05. உடலில் உள்ள கல்சியத்தின் சமநிலையை பேணுவதில் சிறுநீரகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. எமது உடலில் 1Kg கல்சியம் வரை உள்ளது. அதில் 95% எலும்புகளிலும் மிகுதியானவை குருதியிலும் சில கலங்களிலும் உள்ளது.

எமது உடலில் அகத்துறிஞ்சப்படும் கல்சியம் தொழிற்பாட்டுக்குரிய நிலையை அடைய வேண்டும். இதற்குரிய நொதியங்களை (Hydro lase) சிறுநீரகம் சுரக்கின்றது.

06. செங்குருதிக்கலங்களில் (Red Blood corpusule) உள்ள மோக்குளோபினின் (Haemoglovin) உருவாக்கத்திற்கு தேவையான எரித்திரோ பெயிற்றின் (Erythropoietin) சுரப்பை சிறுநீரகங்கள் சுரக்கின்றன. என்பு மச்சைகளில் உருவாக்கப்படுகின்ற Hbகளே ஒட்சிசனை காவுவதே பங்காற்றுகின்றன. ஒருவருக்கு Hbயின் அளவு குறைவடைந்தால் அடிக்கடி களைப்பு, சோர்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இலங்கையிலே 10 – 15 வீதமான மக்களுக்கு சிறுநீரகப் பிரச்சினை உள்ளது. சிறுநீரக நோய்களில் உள்ள முக்கிய பிரச்சினை என்வெனில் சிறுநீரகத்தில் சுமார் 90 வீதம் பழுதடையும் வரை அறிகுறிகள் வெளித்தெரிவதில்லை. ஆக சிறுநீரக நோயாளி ஒருவர் வைத்தியசாலைக்கு வரும்போது அது பிந்திய நிலையாக இருக்கும். அந்த நோயாளியை மருந்துகளால் குணப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

எனவே இத்தகைய பிரச்சினை களை தவிர்த்துக்கொள்வது எப்படி என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

## வாழ்க்கை முறையில் சமநிலை பேணுவது அவசியம்.

இதற்கு எமது வாழ்க்கை முறையை சமநிலையில் பேணுவது அவசியம். அத்துடன் அறிகுறிகள் வெளிப்படாத போதே ஒழுங்கான இலகுவான மருத்துவப் பரிசோத னைகளை மேற்கொள்ள வேண்டும். சலப் பரிசோதனை, குருதிப் பரிசோதனை மற்றும் "ஸ்கானிங்" போன்றவற்றின் மூலம் சிறுநீரகப் பிரச்சினைகளை முன்கூட்டியே அறியலாம். எனவே மருத்துவப் பரிசோதனைகளை அனை வருக்கும் மேற்கொள்வது முடியாமல் போகலாம். எனவே எத்தகையோருக்கு

இந்தச் சோதனைகளை மேற்கொள்வது முக்கியமானது என்பதனையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிறுநீரகப் பிரச்சினைகருக்கும் உள்ளாவதற்கு அதிகம் சாத்தியம் உள்ள குழுவை (Hightrisk Group) இனங் காணுதல் முக்கியமானது. இதனை நாமே செய்து கொள்ளலாம். உடல் நிலை பழக்கவழக்கம் மற்றும் குடும்பத்தினரின் நோய்த்தாக்க விபரம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஒருவரை அதிக சாத்தியம் உள்ள குழுவிற்குள் அடங்குவதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும்.

நீரிழிவு (சலரோகம்) உள்ளவர் களுக்கு சிறுநீரகம் தொடர்பான பிரச்சி னைகள் அதிகளவு ஏற்பட வாய்ப்புண்டு. அந்த நோய் உள்ளவர்கள் ஒழுங்காக "கிளினிக்" சிகிச்சைக்கு செல்ல வேண்டும். மருந்துகளை ஒழங்காக உள்ளெடுக்க வேண்டும். உணவுகளில் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். சிறுநீர்ப் பரிசோதனை (குளுக்கோஸ் அளவு, அல்புமின்அளவு) குருதிப் பரிசோதனை (யூரியா அளவு, கிளியா ற்றின் அளவு) மற்றும் குருதியமுக்கம் என்பவற்றை அடிக்கடி சோதித்துக் கொள்ள வேண்டும்.

சிறுநீரிர் அல்புமின் (Allvumin) வெளியேறுவதனை சாதாரண பரிசோ தனை Herhtese மூலம் ஓரளவு அறிந்து கொள்ளலாம். பரிசோதனைக் குழாயில் 3/2 பங்கினை சிறுநீரால் நிரப்பிக் குழாயில் எஞ்சிய மேற் பகதியை ஒரு மெழுகுதிரி கொண்டு சூடாக்கி சிறிது நேரத்தின் பின் அவதானிக்கும் போது சிறநீர் தெளிவாக இருந்தால் புரதம் இல்லை. சிறிது மங்களாக இருந்தால் சிறிதளவு அல்புமின் வெளியேறுகின்றது. முட்டையின் வெள்ளக் கரு போன்று இருப்பின் புரதம் அதிகளவு வெளியேறு கின்றது. இந்தப் பரிசோதனையின் மூலம் புரதம் (அல்புமின்) வெளியேற்றத்தை அறிய வேண்டுமாயின் 1l சிறுநீரில் 300mg அளவில் அல்புமின் இருந்தால் மட்டுமே சாத்தியம். இந்த அளவைவிட குறைவான அளவி புரதம் வெளியே றுவதை கண்டறி யவேண்டுமாயின் (Micropalvimintst) செய்யப்பட வேண்டும்.

நீரிழிவு உள்ளவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவையேனும் மேற்படி பரிசோதனை செய்து கொள்வது நல்லது. சிறுநீரில் 20mg மேல் அல்புமின்



இருந்தால் எமது சிறுநீரகத்தில் பிரச்சினை உள்ளது. அது புரதத்தை இழக்கின்றது என்று தெரிந்து கொள்ளலாம். சிறுநீரில் அல்புமின் வெளியேற்றப்படுகின்ற பிரச்சினைக்கு மருந்துகள் பல உள்ளன. குறிப்பிட்ட

மருந்து வகைகளை பயன்படுத்துவதன் மூலம் சிறுநீரகம் பழுதடைவதை பிற்போடலாம். இதற்குரிய ஆலோசனை களை உரிய வைத்தியரி டமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதிகம் சாத்தியம் உள்ள குழுவில் அடுத்து உள்ளடக்கப் படுபவர்கள் உயர் குருதி அமுக்கம் (Hypr tension) உடையவர்களே இந்த வயதினராய் இருந்தாலும் இரத்த அழுத்தம் 140 / 90 ற்கு அதிகமாக இருந்தால் அது உயர்குருதி அமுக்க த்தால் பாதிக்கப்பட்டவர் ஆகிறார். அவர் தனது உணவுப் பழக்கவழக்கம் உடல் பயிற்சி, உயரத்திற்கேற்ப உடல் திணிவு போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

**உடல் திணிவை அறிய இலகு முறை.**

உடல் பருமன் அதிகம் உள்வர்களுக்கு சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் நிறைய உண்டு. உயரத்திற்கு ஏற்ப உடல் திணிவு உண்டா என்பதை அறிய பருமட்டான எளிய முறை ஒன்று உள்ளது. ஒருவர் தனது உயரத்தை cm அளந்து கொள்ள வேண்டும். அதிலிருந்து 100 றினை கழித்து மிகுதயே சம்பந்தப்பட்ட நபருக்கு இருக்க வேண்டிய உடற்திணிவு. (கிலோகிராம்) ஆகும்.



உதாரணமாக ஒருவருடைய உயரம் 180 cm அவருக்கு இருக்க வேண்டிய உடற்றிணிவு 80 கி.கி ஆகும்.

**சமச்சீரான வாழ்க்கை முறையை அமைப்பதோடு பரிசோத னைகளை உரிய தவணைகளில் செய்யுங்கள**

புகை பிடிக்கும் பழக்கமுடைய வர்களுக்கும் சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்படும். புகைபிடிப்பதை நிறுத்துவதே இதற்கு ஒரே வழி. ஒரு நாளுக்கு ஒரு சிகரெட் பிடிப்பதால் கூட சிறுநீரகப் பிரச்சினை மற்றும் சுவாசப்பைக் கோளாறுகள் என்பன ஏற்படக்கூடும்.

இது தவிர சில பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் சில தொழில்களைச் செய்பவர்களுக்கும் கூட சிறுநீரகப் பிரச்ச னைகள் ஏற்படுகின்றன. அநுராதபுரம், பொலநறுவை, வன்னி, மொனராகலை போன்ற பிரதேசங்களில் இத்தகைய நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இவை பெரும்பாலும் விவசாயம் செய்யப் படுகின்ற பிரதேசங்களாகும். இங்கு பாவிக்கப்படும் பலவகை கிருமி நாசினிகள் மற்றும் வளமாக்கிகளாலும் சேகரிக்கப்படும் தானியங்களில் ஏற்படும் பூஞ்சணங்களின் வளர்ச்சி (Fungus growth) காரணமாகவும் இப் பிரதேசங்களில் மக்கள், அதிகம் நச்சுப்

பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். சிறுநீர கத்தை இந்த நஞ்சுகள் தாக்குவதால் அப்பிரதேச மக்கள் சிறுநீரக நோய் களுக்கு இலவில் உள்ளாகும் வாய்ப்புண்டு.

சில மருந்து வகைகளை உட் கொள்ளுபவர்களும் சிறுநீரகப் பிரச் சனைக்கு ஆளாகும் சந்தர்ப்பம் உண்டு. நோவுக்கான மருந்துகள் (Nsaid – Vrusen, voltaariin, Aspirin, Panadool) போன்ற மருந்துகளை அதிகம் உள்ளெடுப் பவர்களும் சிறுநீரகப் பரிசோத னைகளை அடிக்கடி செய்து கொள்ள வேண்டும்.

### நாளென்றுக்கு 2.5l கொதித்து ஆறிய நீர் பருகுதல்.

கடினமான தண்ணீரை (Hard water) பருகுபவர்களுக்கு சிறுநீரகத்தில் கல் (Kidneystone) ஏற்படலாம். இது தொடர்பான பூரணமான தகவல்கள் இதுவரையில் இல்லை. ஆனால் கொதித்து ஆறிய தண்ணீரை பருகினால் பிரச்சினை இல்லை. நாளாந்தம் ஒருவர் 1.5l முதல் 2.5l வரையிலான கொதித்தாறிய தண்ணீரை பருகி வந்தால் அவருக்கு சிறுநீரகக் கல் உருவாக வாய்ப்பே இல்லை. பெண்கள் வெளியிடங்களுக்கு செல்லும் போது சிறுநீர் கழிப்பதன் சிரமம் காரணமாக தண்ணீர் குடிப்பதை குறைத்து விடுகி றார்கள். இதனால் சிறுநீர் செறிவாக் கப்பட்டு (Concencrate) அதன் காரணமாக "சிறுநீரகக்கல்" உருவாக வாய்ப்புண்டு. குடும்பத்தில் எவருக்காவது சிறுநீரகக்கல் வந்திருந்தால் ஏனைய அங்கத்தவர்கள் அது குறித்து கவனம் செலுத்துவது அவசியம்.

சில சிறுநீரகப் பிரச்சினைகள் பரம்பரையாகவே ஏற்படுகின்றன. உதார ணமாக Poly cysticpkidney என்ற நோய் நிலையைக் கூறலாம். இப் படியானவர்களில் சிறுநீரகம் பெரிதாக இருக்கும். உப்பகுதி நீர் சேர்ந்த சிறு குமிழகள் போல காணப்படும். இது போன்ற சில சிறுநீரகப் பிரச்சி னைகள் குடும்பத்தில் எவருக்காக இருப்பின் ஏனையவர்களுக்கும் அப் பிரச்சினைகள் எற்பட வாய்ப்புக்கள் அதிகம். எனவே அவர்கள் வைத்தியசாலைக்குச் சென்று தமது சிறுநீரகத்தை "ஸ்கான்" மூலம் மூலம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். 20 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பின் 6 மாதங்களக்கு ஒரு தடவை சிறுநீரகத்தைப் பரிசோதித்துக் கொள்வது சிறந்தது.

### 6மாதங்களுக்கு ஒரு தடவையாவது குருதி அழுத்தத்தைச் சோதிக்க வேண்டும்.

சிறுநீரக நோய்களுக்கு அதிக சாத்தியமுள்ள குழுவைச் (High Risk group) சேர்ந்தவர்கள் தங்கள் சிறுநீரகத்தின் நிலையை அறிந்து கொள்வதற்கு சுலபமான சில பரிசோதனைகள் உள்ளன. அதில் ஒன்று குருதி அமுக்கத்தை சோதித்துக் கொள்ளுதல்.

50 வயதுக்கு மேற்பட்டவர்கள் 6 மாதங்களுக்கு ஒரு தடவையானவது

குருதி அமுக்கத்தை சோதித்துக் கொள்வது அவசியம். குடும்பத்தில் எவருக்காவது உயர் குருதி அமுக்கம் (Hyper Tension) இருக்குமாயின் மற்றவர்களும் நடுத்தர வயதில் இருந்தே (80 வயது) குருதி அமுக்கத்தை சோதித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து பொருத்தமான உடற் பருமனை பேணுவதற்கு உடற் திணிவுச் சுட்டியினை (BMI – Body Mass Index) அறிந்து கொள்ள வேண்டும்.

உடற்திணிவுச் சுட்டி (BMI)

$$= \frac{\text{திணிவு (kg)}}{\text{உயரம் } m^2(m)}$$

இங்கு உடற்திணிவானது 25 இற்கு அதிகமாக இருப்பிக் அது கூடுதல் எடை என்று கருதப்படும். உடற்திணிவுப் பெறுமானம் 30 இனையும் விட அதிகமானால் அது பருத்த உடம்பு என்று கருதப்படும். இப்படியானவர்கள் அடிக்கடி 3 மாதத்துக்கு ஒரு தடவை குருதி அழுத்தத்தினை அளந்து கொள்வது அவசியம். குருதி அழுத்தம் அதிகரிக்கும் போது சிறுநீரகத்தில் பிரச்சினை ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

மற்றொரு சுலபமான வழி குருதியைப் பரிசோதித்துக் கொள் வதாகும். குருதியில் சீரம்கிறியற்றனின் Serum – Creatinine இன் அளவு 0.5mg /dl – 1.2 mg /dl ஆகும். Risk group இல் உள்ளவர்கள் 6 மாதத்துக்கு ஒரு தடவை "சீரம் கிறியற்றனின்" இனை சோதித்துக் கொள்ளலாம். அதன் அளவு அதிக ரிப்பின் சிறுநீரகத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று கருதலாம்.

ஆனால் இம்முறையில் ஒரு சிக்கல் உள்ளது. வயதானவர்களுக்கு கிறியற்றனின் உருவாகின்ற அளவு குறை வடைந்திருக்கும். இதனால் வயதான வர்களைப் பொறுத்தவரையில் "கிறியற்றனின்" அளவு அதிகரிக்க வில்லை என்பதைக் கொண்டு சிறுநீர கத்தில் பிரச்சினை இல்லை என்று கூறி விடமுயாது. அவர்களுக்கு வேற்று பரி சோதனையும் செய்ய வேண்டியிருக்கும். சிறுநீரை வடிக்கும் வீதத்தை கணிப்பதன் மூலமே வயதானவர்களுக்கு சிறு நீரகத்தில் பிரச்சினை உண்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியும். இரத்தத்தில் யூரியா (Bloof Urea) இரத்தத்தின் நைதரசன் (Blood Urea Nitrogen) மற்றும் குருதியிலுள்ள பொட்டாசியம் சோடியம் போன்றவற்றின் அளவுகளையும் இங்கு கணித்துக் கொள்ள வேண்டும்.

### ஆரம்பத்தில் இனங்காண .........

மேலே கூறப்பட்டவாறு சிறுநீரகப் பிரச்சினைக்கு உள்ளாவதற்கு அதிகம் சாத்தியமுள்ளவர்கள் ஒழுங்காக மருத்துவ சோதனைகளைச் செய்து கொள்வதன் மூலம் சிறுநீரகப் பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

சாதாரணமாக ஒரு நபரின் சிறுநீரகம், சிறுநீரை வடிக்கும் வீதம்

நிமிடத்துக்கு 120 மி.லீற்றர் ஆகும். இப்பெறுமானம் நிமிடத்துக்கு 90 மி.லீற்றருக்கு குறைவாக இருந்தால் அந்தக் குறிப்பிட்ட நபரின் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருத வேண்டும். நிமிடத்துக்கு 60 மில் லீற்றருக்குக் குறைவாக இருந்தால் சராசரி என்றும் நிமிடத்துக்கு 15 மி.லீற்றருக்கு குறைவானால் ஆபத் தானது என்றும் கருதப்படுகின்றது.

அடுத்ததாக சிறுநீரை அடிக்கடி சோதித்துக் கொள்ளுவதன் மூலம் சிறுநீரகத்தின் நிலையை அறிந்து கொள்ள முடியும். சிறுநீரில் புரதம், குருதிக் கலங்கள், சீதக் கலங்கள் போன்றன உண்டா என்று சோதித்தறிந்து உரிய சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறுநீரில் தொற்று என்பது பொதுவான பிரச்சினை. பெண்களில் இதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். சிறுநீரக அழற்றி என்பது யாழ்ப்பா ணத்தில் முக்கிய பிரச்சினை யாக உள்ளது. எம்மில் அதிகமானோர் சிறுநீருடன் இரத்தம் வெளியேறினால் தாங்களாகவே அது தொற்று என்று தீர்மானித்துக் கொண்டு நாட்டு வைத்தியம் செய்து கொண்டு அதனையே தொடர்வார்கள். உரிய பரிசோதனைகளைச் செய்து கொள் வதில்லை. இதனால் சிறுநீரக அழற்சி படிப்படியாக அதிகரித்து ஒரு கட்டத்தில் சில வருடங்களில் சிறுநீரகம் முற்றாக பழுடதடைந்து விடும்.

## சிறுநீரக அழற்சி

எனவே இதனை ஆரம்பத்திலேய இனங்கண்டு தகுந்த சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தொண்டை நோவு ஏற்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் சிறு நீருடன் குருதி வெளியேறுதல், கை, கால்களில் புண் உள்ளவர்களுக்குச் சிறுநீருடன் குருதி வெளியேறுதல், காய்ச்சல் ஏற்படாமல் எரிவு வராமல் சலத்துடன் குருதி வெளியேறுதல், சிறுநீர் நுரையாக கழிக்கப்படுதல், முகம் வீங்குதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அவை சிறுநீரகம் பாதிப்படைந்துள்ளது என்பதை காட்டுகின்றது.அது சிறுநீரக அழற்சியாக (Glomerulonephritis) இருக்கலாம். சிறுநீரக அழற்சிக்கு ஏராளமான காரணங்கள் கூறப்படுகின்றன. சகலவகை சிறுநீரகம் அழற்சிக்கும் சிகிச்சை உண்டு.

சிறுநீரக அழற்சி ஏற்பட்டுள் ளமையை இலகுவான பரிசோதனைகள் மூலம் அறிந்து கொள்ளலாம். சிறுநீரில் அல்புமின் உண்டா Pus Cells உண்டா, Red Cells உண்டா Dys morpic Red உண்டா CAST உண்டா, Red Cell CAST, Granular CAST என்று சோதித்துக் கொள்வதன் மூலம் சிறுநீரகத்தின் நிலையை தெரிந்து கொள்ளலாம்.

## உயர் இரத்த அழுத்தம் உடைய வர்களுக்கு

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு சிறுநீரகம் பாதிக் கப்படும். எனவே இரத்த அழுத்தத்

தினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

சோதனைகளை ஒழுங்காக மேற்கொள்வதுடன் உரிய மருந்து களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## சிறுவர்களுக்கு எற்படும் பிரச்சினை

சிறுவர்களில் V.U.R என்ற பிரச்சினை அநேகமாக அவதானிக் கப்படுகிறது. சிறுநீரகத்தில் உருவாகின்ற சிறுநீர், சிறுநீர்க்கான் வழியாக சிறுநீர்ப்பையில் சேர்க்கப்படும் சிறு நீர்ப்பையில் இருந்து சிறுநீர் வழி (Urethra) மூலம் சிறுநீர் வெளியேற்றப் படுகின்றது. சாதாரணமாக சிறுநீர் வெளியேறும் போது சிறுநீர்க்கான் சிறுநீர்ப்பை சந்திக்கும் இடத்தில் சுருல்கும் செயற்பாடு ஒன்று நிகழ்கிறது. இதனால் சிறுநீர் மீண்டும் சிறு நீர்கானினுள் செல்வதில்லை.

சிலரின் இந்தக் தொழிற்பாடு செயலிழந்துவிடும். இதனால் சிறுநீர் வெளியேறும் போது ஒரு பகுதி சிறுநீர் மேலே பின்நோக்க சிறுநீர்க்கானுள் சென்று விடுகிறது. இந்த அசாதாரண நிகழ்வு சிறுநீரகத்தை பாதிப்புக்குள் ளாக்குகின்றது.

இந்தப் பிரச்சினையை ஆரம்பத் திலேயே இனங்கண்டுகொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினை உள்ள சிறுவர்கள், சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறுவார்கள். இப்படியானவ்களை உடனடியாக உரிய வைத்தியரிடம் காட்டி சிகிச்சை பெற வேண்டும்.

**கண்டபடி நினைத்தபடி மருந்து உட்கொள்ளக் கூடாது.**

Analgesie Phropathy என்பதும் இப்போது பெரும் பிரச்சினையான உருவெடுத்து வருகின்றது. அதாவது வைத்திய ஆலோசனைகள் இன்றி கண்மூடித்தனமாக மருந்துகளை உள்ளெடுப்பது இப்போது அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. மருந்துகளை தகுந்த வைத்திய ஆலோசனை இன்றி ஒரு போதும் உபயோகிக்கக் கூடாது மீறி உபயோகிப்பதனால் பல பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றன.

சிறுநீரகத்தில் சிறுநீரகத்தி (Glomerulaur) என்ற அமைப்புக்கள் உள்ளன. இங்கு நிமிடத்துக்கு 120ml என்ற அளவில் சிறுநீர் வடிக்கப் படுகின்றது. ஆக ஒரு நாளில் ஏறாத்தழ ஏறத்தாழ 120 லீற்றர் சிறுநீர் பெறப்பட வேண்டும் ஆனால் இவ்வளவு சிறுநீர் கழிக்கப்படுவதில்லை. 99 சதவீத நீர் சிறுநீர்க் குழாய்களால் மீள அகத்துறுஞ்சப்படுகிறது.

வைத்திய ஆலோசனை இன்றிச் சில வகை மருந்துகளை உள்ளெடுப் பதால் சிறுநீர்க்குழாய்கள் பழுதடைந்து விடுகின்றன. இப்படியானவர்களில் சிறுநீர் அதிகளவில் வெளியேறும். இது Tubulo Interstitial Nephritis எனப்படும். இவர்களுக்கு குறிப்பிடத்தக்க அறிகுறிகள் வெளித் தெரியாது. குறிப்பிட்ட காலத்தில் சிறுநீரகம் முற்றாகப் பாதிக்கப்பட்டு விடும்.

மருந்துகளைக் கண்டபடி உள்ளெடுப்பதைத் தடுப்பதற்கு வைத்தி

யர்களினால் வழங்கப்பட்ட மருந்து விபர உறுதிச் சீட்டு இல்லாமல் கடைகளில் மருந்து வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். முக்கியமாக மக்கள் தான் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சில ஓமோன்களின் செயற்பாடு காரணமாக உடலின் கல்சியத்தின் அளவு அதிகரிக்கலாம். சில அறிகுறிகள் மூலம் அதனை இணங்கண்டு சோதிப்பதன் உறுதி செய்து கொள்ளலாம்.

"Chinese herb" என்பதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. சில மருந்துகளைச் சில பிரிவினர் தயாரித்து சந்தைக்கு விட்டுள்ளனர். இந்த மருந்துகளில் என்ன இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியுள்ளன என்பதுவும் மக்களுக்குத் தெரிவதில்லை. இப்படியான மருந்துகளை உள்ளெடுப்பதால் சிறுநீரகத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம்.

சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்படுவது தொடர்பில் அதன் ஆரம்ப அறிகுறிகளை எல்லோரும் தெரிந்து கொள்வது அவசியம். அப்போதுதான் சிறுநீரகத்தில் தீவிர பிரச்சினைகள் ஏற்பட்டு அது செயழிலக்கும் முன்னர் நாம் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- சிறுநீர் கழிக்கும் நேர இடைவெளிகளில் மாற்றம்
- சிறுநீருடன் குருதி வெளியேறல். சிறுநீர் சிவப்பாகவோ அல்லது தேயிலைச் சாயநிறத்திலோ வெளியேறல்.
- சிறுநீர் வெளியேறும் போது நுரைத்தல். சிறுநீரில் புரதம் அதிகளவில் வெளியேறின் அங்கு நுரை தோன்றும்.
- சிறுநீரகத்தில் பிரச்சினை ஏற்படும் போது மேலதீக தண்ணீர் உடலின் மிருதுவான இழையங்களில் சென்று தேங்கும். இதனால் கண்களைச் சுற்றியுள்ள பகுதிகள் (Peri Orbital Ocdema – Facial Puffiness) மற்றும் கால்களில் வீக்கம் ஏற்படலாம்.
- சடுதியாக நாரிப்பகுதியில் அல்லது நாரியிலருந்து கீழ் புறமாக வலி ஏற்படுதல்
- சிறுநீர் கழிக்கும்போது எரிவு ஏற்படல் இது சிறுநீர்த் தொற்றாகவும் இருக்கலாம்.
- பொதுவாக வயதான ஆண்களில் "Prostatism" என்ற பிரச்சினை ஏற்படுகிறது. அதாவது ஆண்களில் வயதாகும் போது சிறுநீர்ப்பையின் கீழ்ப்புறமாக உள்ள Prostate சுரப்பி வீக்கமடைகிறது. இதனால் சிறுநீர்வழி சிறுத்து பிரச்சினைகளை ஏற்படுத்தும்

இது பின்வரும் அறிகுறிகளை காட்டும்

- சிறுநீர், கழிக்கும் போது சிறுநீர் கழிவடையும் வேகம் அல்லது வீச்சுக் குறைவடைந்து காலடியிலே விழுதல்
- சிறுநீர்கழிக்க வேண்டும் என்ற அடக்க முடியாத – திடீரென ஏற்படும் - உணர்வு
- சிறுநீர் கழிப்பதால் தாமதமும், சிரமமும் (முக்குதல்) இருத்தல்.

- சிறுநீர் கழித்து முடிந்த பின்னரும் சில துளிகள் (Post voidal Dribling) விழுதல் அத்துடன் பூரணமாகச் சிறுநீர் கழிக்கவில்லையே என்ற உணர்வு ஏற்படுதல்

அத்தகைய உபாதைகள் உள்ளோர் வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது சிறந்தது இப்படியான அறிகுறிகளை கொண்டவர்கள் அவசியம் மருத்தவ ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறுநீரகம் செயழிலந்து கொண்டிருக்கும் போது குருதியில் கழிவுப் பொருள்கள் மற்றும் மேலதிக தண்ணீர் சேர்கிறது. இதனால் பின்வரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

- களைப்பு, கவனக்குறைவு
- எப்போதும் உட நலமின்மை போன்ற உணர்வு
- பசியின்மை
- வாந்தி, குமட்டல்
- சுவாசிப்பதில் சிரமம்

எமது வாழ்க்கை முறையை உகந்த விதத்தில் மேற்கொள்வதனால் சிறுநீரகத்தை ஆரோக்கியமானதாகப் பேணலாம்.

- நிறையப் பழங்களை, மரக்கறிகளை, தானிய வகைகளை, உணவில் சேர்த்தல்
- கொழுப்பு உணவுகள், உப்பு உணவுகளை அளவோடு உண்ணுதல்
- இனிப்புப் பானங்களுக்குப் பதிலாகப் போதுமான தண்ணீரை அருந்துதல்
- உடல் நிறையை உரிய அளவுக்குப் பேணுதல்
- இதயத் துடிப்பை அதிகரிக்கும் உடற் செயற்பாடுகளில் (நீச்சல், உடற்பயிற்சி) தினமும் 30 நிமிடமாவதும் ஈடுபடல்
- புகைத்தலை தவிர்த்தல்
- மதுபானம் தவிர்கப்பட வேண்டும்
- இரத்த அழுத்தத்தை அடிக்கடி சோதித்துக் கொள்ள வேண்டும்.
- மன அழுத்தத்தை போக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

சிறுநீரகப் பிரச்சினைகள் முற்றாகத் தவிர்க்க வேண்டுமாயின் ஒருவர் "பூரண இந்து" வாக வாழ்வதன் மூலம் அதனைச் சாத்தியப்படுத்தலாம். என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

**அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையை பாழாக்கி விடும். கடமையை பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.**
**-அப்துல் கலாம்**

*pravin tamilan*



# தமழ் இனமக்கள்...

சிசிந் துஜா
மயிலன்கூடல் இளவாலை.

எங்கே வந்தது?
யாரிற்கு வந்தது?
நாற்பத்தேழின் சுதந்திரம்....
பசியாலே செத்தவரும்
பட்டைக்கல் சுமந்தவரும்
உதைபட்டு உறங்கியவரும்
எங்க ஜனங்களே.....

வயிற்றிலே நெருப்பு
இடம் கேட்க
செவிப்புலனிற்கு இது கேட்க
கட்புலனிற்கு கானல்
தெரிந்து கொண்டே இருந்தது.

கார்காலம் தொடங்கப் போகிறது.
வெப்பம் கலந்த குளிராக இருந்தது

முள்ளிவாய்க்கால் கருப்பைக்குள்
பிணங்களாய் நிரப்பியது எம்மினம்
மண், நீர், வேர் எங்கும் மனிதர்களின்
குரதிச் சிதறல்களோடு
எஞ்சியவர்கள் புல்வெளிக்குள் - அத்தனையும்
எங்களையே உயிர்பறித்த இனவழிப்பு.....
துரோகங்களிற்குள்ளும் இருள்சூழப்பட்ட
வறுமைக்குள்ளும் இருந்து
வரலாறாய் முளைக்கும்
எம் தமிழன மக்கள்....



# சாத்திரம் பார்க்கும் கனடா

இளவாலை எஸ்.ஜெதீசன்

நேத்திரத்துக்காக ஒரு கட்டுரை வேண்டும் என தொலைபேசி ஊடாக எனக்கு வந்த கோரிக்கை அல்லது வேண்டுகோள் அலல்து அன்புத் தொல்லை எனது காதுகளில் சாத்திரத்துக்காக ஒரு கட்டுரை வேண்டும் என்றே முதலில் சம்பிரதாயமாகத் தொனித்தது. அதனால் எதுவித ஆத்திரமுமின்றி எதுவித காத்திரமுமின்றி கொஞ்ச நேரம் கனடாவை சாத்திரம் பார்ப்போமா!

வருங்காலம் நிகழ்காலம் கடந்தகாலம் என்பவை பற்றி நன்கு அறிந்து வாழ்வை வளமாக்கிக் கொள்ளலாம்.பிரபல சோதிட விற்பன்னர் கைரேகை ஜாதகம் முகநாடி மூலம் நடந்தவற்றையும் கூறுவார். நடக்க இருப்பதை பற்றியும் கூறுவார்.எனவே அவரை சந்திப்பது குறித்துச் சிந்தியுங்கள்.கனடாவில் கோடையில பெருவாரியாகக் காணபப்டும் இநத் வகையான விளம்பரங்கள் தமிழருக்கு மட்டுமே உரித்தானவையல்ல. எதிர்காலத்தை எதிர்பார்ப்பவர்கள் நிறைந்த நாட்டில் ஆருடம் பார்க்கும் ஆர்வலர்கள் அனைத்து மொழிகளிலும் உள்ளனர்.




வாழ்வுப்பாதை அகலமானதா? அல்லது அவலமானதா? என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் ஆவல் இன மத மொழி கோட்பாடுகளை கடந்து அனைவர்க்கும் பொதுவானது.

கல்யாணத்திற்கு பொருத்தம் பார்க்காத மேற்குலக நாகரீகம் அதிர்ஷ்ட லாப சீட்டு வாஙக்குவதற்கு நிமித்திகரை நாடிடும் விநோதம் ஊரறிந்த உண்மை. கனடாவின் நளைய நம்பிக்கைகள் பல வடிவங்களில் பல பெயர்களில் விதியை நம்பி வீணாகிப்போகும் மனிதருக்காக விழி விரித்து வழி நெடுக காட்சி தருகின்றன. பிறந்த குழந்தையின் தலை அமைப்பை வைத்து குறி சொல்லல் ஒரு வகை சாத்திரமாம். அதற்குப் பெயர் அம்னியோமென்ஸி.

தானியங்களை ஏதேர்சையாக சிந்தவிட்டு தானியங்கள் சிதறுண்ட பாங்கை வைத்தும் குறி சொல்பவர்கள் இங்குனர். அலெக்ஸ்ட்ரியோமென்ஸி என அவர்கள் அழைக்கப்படுவர். வேட்டைக்கு செலல் முன் ஓநாய்களின் நடமாட்டத்தை அவதானித்து ஆருடம் கூறினராம் அநாதியில் செவ்விந்தியர். அதுவே நவீனமயமாக்கப்பட்டு கணணியில் ஓநாய்களை ஓடவிட்டு லைக்கோன்தெரெபி என்ற பெயர் பலகை காணப்படும் இடங்கள் தற்பொழுது சொல்கின்றன. எரியும் தீச்சுடரின் அசையும் விதத்தை வைத்து சொல்லப்படுவது பைரோ மென்ஸி என்று அழைக்கப்படுகின்றது. பறவைகள் பறகக்கும் விதத்தை வைத்து என்ன சொல்லலாம் என ஏங்குகின்றீர்களா? அதற்கும் சோதிட விற்பன்னர் ஆர்னித்தோ மென்ஸி என்று பெயரிட்டுள்ளனர்

நூல் அல்லது கம்பிமுனையில் கட்டப்பட்ட சாவிக்கொத்தானது பக்கவாட்டில் ஆடும் விதத்தை வைத்து குறி சொல்வது கீடீஸ் கோப்பி. பளிங்கினால் செய்யப்பட்ட பந்தினை உற்றுநோக்குவதன் மூலம் பலன் சொல்வது ஸ்க்ரியோலஜி. நீர் கிண்ணத்தில்தொடர்ச்சியாக மூன்று கற்களை போட வைத்து அதனால் ஏற்படும் அலைகளை பார்ப்பது வெறும் வேடிக்கை விளையாட்டல்ல .ஹைட்ரோஸ் கோப்பி என்று நாமகரணம் சூட்டப்பட்டு அதுவும் சோதிடமாகின்றது.



காலையில் விழிக்கும் பொழுது காதில் விழுந்த முதல் வார்த்தையை அபப்டியே பதிவு செய்து அதன் மூலம் பலன் கூறுவது கொட்டாவி என்றா கூறுகின்றீர்கள்! அதுதான் இல்லை. அது க்ளிடோனிஸம். அது சோதிடம். வில்லிலிருந்து எய்த அம்புகள் பறக்கும் விதத்தையும் முடிவில் அவை குத்தி நிற்கும் நிலையையும் வைத்து சாத்திரம் பார்ப்பதும் செவ்விந்தியர்களிடமிருந்து வந்ததலல். பிலோமென்ஸி என்ற பெயரில் உலகம் இங்கு கொண்டு வந்தது. மனதில் தோன்றும் விநோதக் கணக்குகளை கூட்டிக்கழித்து சொலவ்து அரித்தோமென்ஸியைத் தவிர வேறென்றிலல்ல.

காற்று விசையால் இயங்கும் திசைகாட்டிக் கருவியின் உச்சியிலுள்ள சேவல் பொம்மையானது எந்தத் திசையை நோக்கித் திரும்பியுள்ளதோ அதை வைத்து யாராவது குறி சொன்னால் அவர்கள் விவசாயியாக இருக்க வேண்டும் என்றிலல்ல.அலெகஸோ ரோமான்டியா தெரிந்தவர்களாகவும் இருக்கலாம். கொதி நீரில் மெழுகைப் போட்டு அவை ஒரு கணத்தில் ஏற்படுத்தும் உருவங்களை வைத்து சாத்திரம் சொல்கின்றனர் சிரியோஸ் கோப்பியினர் ஆட்டின் தோல் எலும்புகளை நெருபபில் வாட்ட வரும் சிறு விரிசல்களை வைத்து ஸ்கேபுலோ மென்ஸி என்ற பெயருடன் ஆருடம் கூறுபவரும் இஙக் உள்ளனர்.

கனடாவிலோ அலல்து உலகின் இதர பகுதிகளிலோ நடைபெற்ற சம்பவம் ஒன்றினை ஒரு பந்தியில் கூறி அதற்கு சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்களை வெவ்வேறு பந்திகளில் தெரிவித்து எதனை ஏற்புடையதாக ஒருவர் ஏற்கிறாரோ அதற்கேற்ப பலன் கூறல் உளவியல் சோதிடம் எனப்படுகின்றது. மனித உடலில் காணப்படும் மச்சங்கள் மற்றும் தழும்புகள் ஆகியவற்றை வைத்து ஆருடம் கூறுவது தமிழர்க்கு ஒன்றும் புதிதானதல்ல. எவ்வித மாறுதலுமின்றி அது கூட இங்கு மெட்டோபோஸ் என்ற பெயரில் சோதிடமாகின்றது. தமிழர்க்கு பரிச்சயமான காண்டம் பார்ப்பது அல்லது நாடி வாக்கிய ஜோதிடம் இங்கும் சந்தைப்படுத்தப் படுகின்றது. அவற்றின் ஆதார ஓலைச்சுவடிகள் இநதிய மொழிகளில் இருபப்தாலும் சரளமான ஆங்கில அறிவு அவற்றை வாசிப்பவர்களுக்கு இல்லாததிருப்பதாலும் ஏனைய மொழி பேசுவோரிடம் அவை விலை போவதில்லை. கனடாவில் முன்ணணிக்கு வந்து கொண்டிருக்கும் பெங் சூயி என்ற சீன வாஸ்து சாத்திரம் பறறி தெரிந்தோ தெரியாமலோ தமிழர்கள் அதன் சில சம்பிரதாயங்களை கடைபபிடிக்கின்றனர்.


பிரதான வாசலைத் திறந்தவுடன் மாடிப்படிகள் இருப்பின் ஐந்து குழல் கொண்ட குழல் மணியை *(wind chime)* வாசலின் பின்புறம் நன்மை தரும் என்ற நம்பிக்கையில்கட்டிவிடுகின்றனர். பிரதான வாசலின வெளியேயும் உள்ளேயும் சப்பாத்து செருபப் வைபப்தை தவிர்க்கின்றனர். பிரதான வாசலின் அருகே குளியலறை கழிவறை இருக்கக்காதவாறு கவனிக்கின்றனர். பிரதான வாசலின் அருகே ஒருபொழுதும் வெற்றுப் பாத்திரத்தை வைபப்தில்லை. பிரதான வாசலுக்கும் ஜன்னலக்ளுக்கும் புறமுதுகு காட்டி உட்கார்ந்திருப்பதில்லை. சமையலறைக்குள் குளிர் சாதனபபெட்டியும் அடுப்பும் நேரெதிராக அமைபப்தில்லை. படுக்கை அறையில் தொலைக்காட்சிப்பெட்டி வைக்கக் கூடாது. கட்டிலுக்கு பின்புறமோ அலல்து பகக்வாட்டிலோ நிலைக்கண்ணாடி பொருத்தக்கூடாது என்பதை தெரிந்து வைத்துள்ளார்கள்.

பலரது வீட்டிலும் சிலரது வாழ்விலும் நீங்கா இடம் பிடித்து அதிர்ஷ்டத்தின் உன்னத அடையாளமாக மாறிவிட்ட சிரிக்கும் புத்தர் சமீப காலமாக எல்லைகளைத் தாண்டி உலகெங்கும் பிரபலமாகி வருகின்றார். சிரிக்கும் புத்தர் வீட்டில் இருந்தால் நல்வாழ்வு மகிழ்ச்சி செல்வம் வளம் குதூகலம் திருப்த்தனலாபம் சிரிப்பு சிறப்பு நிறைவு போன்ற பலவும் வீட்டிலிருக்கும் எனவும் சிரிக்கும் புத்தரின் தொப்பையை தடவினால் அதிஷ்டமும் செலவ்மும் பெருகும் எனவும் எதிர்பார்க்கும் தமிழர்களும் பெருகின்றார்கள்.

ம்ம்.... திறந்த கூணடிலிருந்து கிளி நளினமாய் மெள்ள நடை பயின்று வெளியே வந்து அடுக்கபப்ட்ட சீட்டுகளை அங்குமிங்கும் புரட்டி அதிலிருந்து ஒரு சீட்டை அலகினால் கவ்வி சோதிடன் கையில் கொடுக்க நல்ல காலம் எபபோ வரும் என அவன் கூற 'வெள்ளை' உள்ளங்கள் அதனை கேட்கும் காலம் என்றாவது கனடாவிற்கும் பறந்து வரும்!

# தேசிய வீராங்கனையுடன் ஓர் செவ்வி

நேர்காணல் : நா.சுகந்தன்
நூலாசிரியர், அமைப்பாளர்
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்



எமது இளவாலை கிராமத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் அனித்தா என்னும் மகாஜனக் கல்லூரியின் மாணவி அண்மையில் இடம் பெற்ற அகில இலங்கை பாடசாலைகளிடையேயான மெய்வல்லுநர் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தலில் 19 வயது பிரிவில் பங்குபற்றி 3.32 என்னும் உயரத்தை கடந்து ஏற்கனவே அனோமா கருணாகரன் என்பவரால் நிலை நாட்டப்பட்ட சாதனையை சமன் செய்து தமிழருக்கும், வடமாகாணத்துக்கும் பெருமையை பெற்று கொடுத்திருக்கிறார்.

எனவே இப்பெரும் சாதனையை நிலைநாட்டி எமது மண்ணுக்கு புகழீட்டி கொடுத்த தேசிய வீராங்கனை அனித்தா அவர்களுடன் ஓர் நேர்காணல் "நேத்திரம்" சஞ்சிகைக்காக .........

**கேள்வி** : வணக்கம் அனித்தா! "தேசிய வீராங்கனை" எனும் அடை மொழியை பெற்று விட்டீர்கள். இது குறித்து உங்களுக்கு முன்னதே ஒரு கனவு இருந்ததா?

**பதில்** : அது குறித்து ஓர் எண்ணம் என்னிடத்தில் இருந்தது தான். ஆனால் இம்முறை அது சாத்தியம் ஆகும் என நான் எதிர்பார்க்க வில்லை ஆனால். எனது பயிற்று விப்பாளர் திரு.சுரேஸ் Sir அவர்களும் மூத்த வீரங்கனை காவேரி அக்காவும் இம்முறை இந்த சாதனை நீ நிகழ்த்துவாய். என ஊக்கமளித்து பிறகு நான் தனித்து நின்று 3.20m இனை முதலாவது முயற்சியிலேயே கடந் தேன். அப் போது, "இது வரை 3.31m என்பது தான் தேசிய சாதனையாக பதி யப்பட்டிருக்கிறது. எனவே நீ 3.32m பாய்ந் தால் அது தேசிய சாதனை யாக இருக்கும்" என்றார் சுபாஸ் Sir எனவே 3.32m இனை இலக்காக கொண்டு பாய்ந் தேன். என்ன ஆச்சரி யம் முதலாவது முயற்சி யிலேயே என்னால் அந்த உயரத்தை பாய முடிந்தது.

அறிவுரைகளும் வழங்கினார்கள். அதனால் என்னுள் ஒரு தன்னம்பிக்கை தோன்றியது.

கேள்வி : இறுதிப் போட்டியில் உங்களின் மன நிலை எப்படி இருந்தது.

பதில் : அந்த போட்டியில் அனைவருக்கும் 2.20m ஆரம்ப உயரமாக வழங்கப்பட்டது. ஏனைய அனைவரும் அதனை தமது தொடக்க இலக்காக கொண்டு பாய ஆரம்பித்தனர். ஆனால் நான் பயிற்சியின் போது 3.00m இற்கும் அதிகமான உயரத்தை பாய்ந்தமையால் அவர்கள் வழங்கிய ஆரம்ப உயரத்திற்கு (2.20 m) "Pass" கொடுத்தேன். எனது முதலாவது முயற்சியை 3.00m இலே ஆரம்பித்தேன். ஆனால் 3.00m உயரத்தை முதலாவது முறை பாயும் போது தடுக்கி விட்டடேன். அந்த கணம் எனக்கு ஓர் பயத்தை கொடுத்தது. இருந்தாலும் திட நம்பிக்கையுடன் பாய்ந்து அந்த உயரத்தை கடந்து விட்டேன்.

கேள்வி : இறுதிப் போட்டியின் களம் மிக சவாலாக இருந்ததா? இல்லை இலகுவா அமைந்ததா?

பதில் : நிச்சயமாக சவாலாகவும், அதே நேரம் சுவாரசியமாகவும் இருந்ததை உணர்ந்தேன். இதை நான் நிச்சயமாக விபரமாக சொல்ல வேண்டும். இதன் போது இடம் பெற்ற சுவாரஸ்யத்தை அனேகர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதாவது நான் 3.10m இனை கடந்து அடுத்து இலக்கினை நிர்ணயித்த போது எச்.கே.தர்மரத்ண என்பவரே எனக்கு களத்தில் சவாலாக காட்சி கொடுத்தார். ஆனால் அவர் 3.15m ஐ தாண்ட முடியதாவராக போட்டியில் இருந்து நீங்கினார்.



All island Meet 2014

பிறகு நான் தனித்து நின்று 3.20m இனை முதலாவது கடந்தேன்.

அப்போது, "இதுவரை 3.31m என்பது தான் தேசிய சாதணையாக பதியப்பட்டிருக்கிறது. எனவே நீ 3.32m பாய்ந்தால் அது தேசிய சாதணையாக இருக்கும்' என்றார் சுபாஸ் Sir எனவே 3.32m இனை இலக்காக கொண்டு பாய்ந்தேன். என்ன ஆச்சரியம் முதலாவது முயற்சியிலேயே என்னால் அந்த உயரத்தை பாய முடிந்தது. எனது Sir ஆனந்தத்துக்கும் எனது ஆனந்தத்துக்கும் அளவேயில்லை! அப்பொழுது ஒலி பெருக்கி மூலமாக யாழ் மாணவி ஒருவர் தேசிய சாதனையை முறியடித்தார்! என உத்தியோக பூர்வமாக அறிவித்தனர். அப்போது அரங்கில் இருந்த 3.35m இனை குறிவைத்தேன். ஆனால் என்னால் அது முடியாமல் போனது. ஆனாலும் நான் புதிய தேசிய சாதனையை படைத்து விட்டேன். என்ற பூரிப்பில் இருக்க எனக்கான அந்த பேரதிர்ச்சி காத்திருந்தது. ஆம் அப்பொழுது மீண்டும் ஓர் திருத்தப்பட்ட அறிவிப்பு ஒலிபெருக்கியில் வழங்கப்பட்டது. "தேசிய சாதனை முறியடிக்கப்படவில்லை, சமப்படுத்தப்பட்டது" என்பது தான் அது அப்பொழுது நான் சற்று துவண்டுபோனேன். (அனித்தாவின் குரல்மெல்ல கரகரத்தது)

**நான் புதிய தேசிய சாதனையை படைத்து விட்டேன். என்ற பூரிப் பில் இருக்க எனக் கான அந்த பேரதிர்ச்சி காத்திருந்தது.**

**கேள்வி** : அந்த கணத்தை எப்படி உணர்ந்தீர்கள்? தேசிய சாதனையை சமப்படுத்திய மகிழ்ச்சியை புதிய சாதனை படைக்க முடியாமல் போனது உங்களை தாக்கியதா?

**பதில்** : (சற்றும் தாமதிக்காது) இல்லவே இல்லை. சிறு கீறல் மனதை துளைத்தது உண்மைதான். ஆனால் எனக்கு இன்னும் காலம் இருக்கின்றது என்பதனால் என்னை நானே தேற்றிக் கொண்டேன். அதற்கான ஆறுதலை அந்த கணத்தில் பயிற்றுநர் சுபாஸ் Sir அவர்களும் ஏனையவர்களும் கொடுத்தனர். அடுத்து நடைபெற உள்ள போட்டிகளில் நிச்சயம் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**கேள்வி** : கோலூன்றிப் பாய்தலுக்கான வசதி வாய்ப்புக்கள் உங்களுக்கு போதுமானதாக அமைந்ததா? உங்களது பாடசாலையில் அந்த வசதிகள் போதியனவா?

பதில் : எமது பாடசாலையில் (மகாஜனக் கல்லூரியில்) உள்ள கோல் ஓரளவு தரம் வாய்ந்தது. ஆனால் கோலூன்றி பாய்தலுக்கு பயன்படுத்தும் தரம் வாய்ந்த மெத்தைகள் இல்லை.

உயரம் பாய்தலுக்கு பயன்படுத்தும் மெத்தைகளையே எனது பயிற்றுவிப்பாளர் சேர்த்து வைத்துள்ளார். இதனால் பயிற்சியின் போது ஒருமுறை விழுந்து முதுகில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் இப்போது முன்போலின்றி சற்று பயத்துடனேயே பயிற்சியில் ஈடுபட முடிகிறது. எனவே இதற்கான தரம் வாய்ந்த மெத்தைகள் வழங்கப்பட்டால். மன உறுதியுடன் சிறந்த பயிற்சி பெற எதுவாக அமையும். எனவே இத்தகைய மெத்தையை யாராவது வேண்டி தந்தால். என்னை போல இன்னும் பல சாதனையாளர்களை மகாஜனா உருவாக்கும் என உறுதியளிக்கின்றேன்.

கேள்வி : நீங்கள் ஒரு பெண் என்ற வகையில் விளையாட்டுத் துறையில் பிரவேசிப் பதற்கு ஏதாவது சிக்கல்களை சந்தித் தீர்களா? எப்படியான சிக்கல்கள்?



பதில் : (சிரிக்கிறார்) நான் விளையாட்டுத் துறைக்கு பிரவேசிப் பதற்கு எந்த வகையிலான சிக்கலினையும் எதிர் நோக்கவில்லை. காரணம் நான் சிறு வயதிலிருந்து விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றேன்.

கேள்வி : எங்கள் கிராமம் (இளவாலை) நீங்கள் இந்த சாதனையை பெறுவதற்கு ஏதேனும் ஓர் வகையில் காரணமாக அமைந்ததா? ஊக்குவிப்பு வழங்கியதா?

பதில் : இல்லை, எனது கிராமத்து வருதப்படாத வாலிபர் சங்கம் தான் என்னை சாதனையாளர் என்று கௌரவித்து ஊக்கப்படுத்தியது. இதற்காக அவர்களுக்கு நன்றியினை தெரிவிக் கின்றேன்.

கேள்வி : இளவாலை பொறுத்த வரையில் இன்னமும் பொது மைதானம் என்ற ஒன்று இல்லை. இதை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்?

பதில் : எமது கிராமத்தின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு இது ஒரு தடையாக இருக்கின்றது. ஒரு பொது மைதானம் அமையும் பட்சம் அது எமது கிராமத்திக்கு வரப்பிரசாதமாக அமையும் என எதிர் பார்க் கின் றேன். இதன் மூலம் எமது கிராமம் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை படைக்க முடியும்.

கேள்வி : நீங்கள் இந்த சாதனையை பெற்று கொள்வதில் எதிர் கொண்ட சவால்கள் என்ன?

பதில் : (சற்றுயோசிக்கிறார-பின்) பயிற்சி முடிவடைந்து வரும் போதும் செல்லும் போது பலர் கேளிகளையும், விமர்சனங்களையும் செய்வதுண்டு. இதை எல்லாம் நான் சிறு கவலைப்பட்டாலும் இதை விட எனது குறிக்கோள் மேலாக இருந்தமையால் அவற்றை எல்லாம் விலக்கி செல்கின்றேன். விளையாட்டு சீருடை அணிவதிலும் பல சவால்கள் அது எனது பாடசாலையிலும் சரி எனது கிராமத்திலும் சரி அதனை இழிவாக பேசுவார்.

கேள்வி : விளையாட்டுத் துறையில் நீங்கள் அதிகமாக நேரத்தை செல விடுவது உங்கள் கல்வியை பாதிப்பதா நினைக்கிறீர்களா?

பதில் : (சிறுபுன்னகையுடன்) எனது பயிற்சி கல்விக்கு பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. காரணம் நான் காலையில் 6.30 - 8.30 வரையும் மாலையில் 4.00- 6.00 or 6.30 வரையில் தான் பயிற்சிகளில் ஈடுபடுகின் றேன். மிகுதியான நேரத் தில் கல் வியினை மேற்கொள்கின்றேன். ஏனைய நேரத்தை கல்விக்காகவும் ஒதுக்கு



கணனி தொழில்நுட்பத்துடனான அனைத்துவிதமான
பிறிண்டிங் வேலைகளுக்கும்
வைரஸ் பிறிண்டேர்ஸ்
கே.கே. எஸ். வீதி, இணுவில் தொ.இல : 021 224 1815
Email: virus23vip@gmail.com



# ஈஸ்வரா கூல் ஸ்பொட்
# ESWARA COOL SPOT

யாழ் மண்ணின் முன்னணி நிறுவனங்களினால்

தயாரிக்கப்பட்ட



-தீன்சுவைப் பொருட்கள்

-தட்டு வடை




-முறுக்கு




-மிகசர்

-பகோடா







-எள்ளுருண்டை

-குளிர்பான வகைகள்

போன்றவற்றை ஒரே கூரையின் கீழ்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

0758281960
0775408960

நகுலேஸ்வரம் ஆலயம் முன்பாக
கீரிமலை



புதிய காந்தி

# கல்வி நிலையம்

தரம் 6 முதல் O/L வரை

பல ஆண்டுகளையும் தாண்டி அனுபவம் மிக்க ஆசிரியர் குழாமினால் திறமையான கல்வி செயற்பாடு.



அனுமதிக்கு முந்துங்கள்

0750416476

பிரதான வீதி, இளவாலை

# ஐங்கரன் ஐஸ் கிறீம்
# IYNKARAN ICE-CREAM

சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட ஐங்கரன் ஐஸ் கிறீம் உங்கள் வீடுகளில் நடக்கும் நிகழ்வுகளுக்கு உங்கள் வீடு தேடி கொண்டு வந்து தரப்படும்.



ஐஸ் பழம்
ஐஸ் சொக்
ஐஸ் கப்
கோண் ஐஸ் கிறீம்
ஸ்பெசல் ஐஸ் கிறீம்



கற்பக்குளை கந்தரோடை,
சுன்னாகம்.

0779352707
0779362404

E-mail: lynkaranicehouse@gmail.com

# NEW MATHS ACADEMY

வைத்தியசாலை முன்பாக இளவாலை. தொ.இல 0778081120

- தரம் 1 முதல் O/L வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- பிரபல ஆசிரியர்களால் தரம் 4,5 இற்கான புலமைபரிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
  (ஆசிரியர்கள்:- திரு தயானந்தன்,திரு வதனன்)
- தரம் 9,10,11 வகுப்பிற்கான கடந்தகால பரீட்சை வினாத்தாள் மீட்டல் வகுப்புக்கள்.
- A/L மாணவர்களுக்கான கணக்கீட்டு வகுப்புக்கள்.

**அனுமதிக்கு முந்துங்கள்**

WITH BEST COMPLIMENTS FROM

# Lovely NetCafe

**High Speed Browsing & High Quality Video Call**



*Phone Accessories and sales, stationary,*
*Local Call, Net Call, Fax, E-mail,*
*Photocopy, Laminating, Ice-Cream,*
*Fancy Items and Soda Items*



*We can meet all your needs under one roof.*

Skype ID:lovelynet.com

E-mail ID:lovelynetilavalai2011@gmail.com

**Main Street,Ilavalai** T.P:075 498 6038,021 221 1900

கிறேன். ஆகவே எனது கல்வியில் எந்த விதமான பாதிப்பும் ஏற்படுத்தவில்லை.

**கேள்வி** : ஒரு தமிழர் என்ற வகையில் தேசிய போட்டியில் பங்கு பற்றி சாதனை பெற்றமை சவாலாக அமைந்ததா?

**பதில்**

- மொழிப்பிரச்சினை
- எனது வயது பிரிவில் பங்கு பற்றிய ஒரே ஒரு தமிழ்ப் பெண் அதனால் ஒரு பயம் இருந்தது.
- அங்கிருப்பவர்கள் வசதி படைத்தவர்கள் அவர்கள் மத்தியில் போட்டியிட்டு வெற்றி பெறுவது என்பது மிகவும் கஷ்டம் அதாவது எங்களுக்கு போதியில் கோல் வசதி இல்லை. அதோடு ஒழுங்கான மெத்தை வசதி இல்லை. அப்படி இருக்கையில் அங்கு போட்டிக்கு செல்ல சிறு தயக்கம் காணப்பட்டது.

**கேள்வி** : இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் விளையாட்டு துறையில் எப்படியான சேவைகளை முன்னெடுக்க வேண்டும் என கருதுகிறீர்கள்?

**பதில்** : எமது கிராமத்தில் ஒரு பொது மைதானம் அமைத்து எமது கிராமத்து வீரர்களுக்கு ஒரு பாதுகாப்பான பயிற்சியினை வழங்கி பயிற்சியாளர்கள் விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி விளையாட்டுத்துறையில் ஆர்வமானவர்களை ஊக்குவியுங்கள். மற்றும் போட்டிகளை நடாத்துங்கள்.

**கேள்வி** : உங்களது இந்த வளர்ச்சிக்கு காரணமென யாரை குறிப்பிடுவீர்கள்?

**பதில்** : எனது முதலாவது பயிற்றுவிப்பாளர் கமலமோகன் Sir, ரமணன் Sir, தற்போதைய பயிற்றுனர் சுபாஸ் Sir, அதிபர் திரு.ம.மணிசேகரம் Sir, மற்றும் ஆசிரியர்கள், சகமாணவர்கள், என்னுடன் விளையாட்டில் ஈடுபடும் என் நண்பர்கள் மற்றும் எனது பெற்றோர்கள்.

**கேள்வி** : உங்களைப் போல வளரும் வீரர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்** : விளையாட்டில் ஒரு விருப்பம் இருக்க வேண்டும். அதோடு ஒழுக்கமும் விடா முயற்சியும் ஒழுங்கான பயிற்சியும் தன்னம்பிக்கையும் இருப்பதன் மூலம் பல வெற்றியினை பெற முடியும். So All the best வாழ்க்கையில் நல்ல நிலையினை அடைய வாழ்த்துக்கள்.

கேள்வி : உங்களது எதிர்கால இலக்கு எப்படி இருக்கும்?

பதில் : சர்வதேச போட்டிகளில் பங்கு பற்றி சாதனை படைத்து இலங்கைக்கு புகளீட்டி கொடுப்பதே எனது இலக்கு.

எமது சஞ்சிகைக்காக இந்த நேரத்தை வழங்கிய அனித்தாவுக்கு நன்றி தெரிவிப்பதுடன் எமது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் முதலாமாண்டு விழாவில் தேசிய வீராங்கனை என அனித்தா அவர்கள் கௌரவிக்கப்பட்டு கௌரவ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# நவக்கிரக வழிபாடு

திரு சு. கிஷோக்குமார்
காடிவளை இளவாலை
சிரேஷ்ட உறுப்பினர், இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்.



நவக்கிரக தம்பதிகள்

- சூரியன் : கங்கை, சாயா
- சந்திரன் : றோகினி
- செவ்வாய் : சக்தி, தேவி
- புதன் : ஞானசக்திதேவி
- வியாழன் : தாராதேவி
- சுக்கிரன் : சுபகீர்த்தி
- சனி : நீலாதேவி
- ராகு : சமஹீதா
- கேது : சித்திரலேகா

நவக்கிரக வழிபாட்டின் பலன்கள்

01. சூரியன் : சகலகாரிய சித்தி, வசீகரம்
02. சந்திரன் : தடை நீங்கும், முன்னேற்றம்
03. செவ்வாய் : எதிரிகளை ஜெயித்தல்
04. புதன் : சகலசாஸ்திர ஞானம் உண்டாகும் கலைகளிலே தேர்ச்சி, புகழ் உண்டாகும்.
05. வியாழன் : சகலசம்பத்தும் உண்டாகும். கல்வியில் சிறந்து விளங்கலாம்
06. வெள்ளி : திருமணம் ஆகாதவர்க்கு திருமணம் நடைபெறும் திருமணத் தடங்கல் நீங்கும்.
சௌபாக்கியம் உண்டாகும் குழந்தையில்லாதவருக்கு மகப்பேறு உண்டாகும்.
07. சனி : தீராத வியாதிகள் தீரும் கடன் ஒழியும், ஆபத்து நீங்கும்.
08. ராகு : செவ்வாய் கிழமைகளில் ராகு காலப்பூசை செய்தால் காரிய சித்தி உண்டாகும்.
09. கேது : தரித்திரம் நீங்கும் வியாதி தீரும் பீடைகளை நிவர்த்தியாகும்.

### நவக்கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருட்களாவன

| | | | |
|---|---|---|---|
| ✠ | சூரியன் | : | சக்கரைப் பொங்கல் (சூடானது) |
| ✠ | சந்திரன் | : | பால் பாயாசம் (ஆறியது) |
| ✠ | செவ்வாய் | : | கற்கண்டுப் பொங்கல், பொங்கல் |
| ✠ | புதன் | : | புளியோதரை (புளிச்சாதம்) |
| ✠ | குரு | : | தயிர்ச்சாதம் |
| ✠ | சுக்கிரன் | : | நெய்ப்பொங்கல் |
| ✠ | சனி | : | எள் சாதம் |
| ✠ | ராகு | : | உழுந்துச்சாதம் |
| ✠ | கேது | : | சித்திரான்னம் |

### நவக்கிரங்களுக்கான தோத்திரங்கள்

✠ **சூரியன்** : சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரிய போற்றி சந்திரா போற்றி
வீரியா போற்றி வினைக் களைவாய்

**பயன்** : வீட்டில் செல்வம் பெருகும்

✠ **சந்திரன்** : எங்கள் குறை எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

**பயன்** : நோயற்ற வாழ்வு பெருகும் எல்லா நலன்களும் பெருகும்.

✠ **செவ்வாய்** : சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு!

**பலன்** : எல்லோரலும் வேண்டப்பட்டு சந்தோ'ம் பெருகும்

✠ **புதன்** : இதமுறு வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னாடி போற்றி
பதந்த ருள்வாய் பண்ணொலி யாசனே
உதவியே யாளும் உத்தமா போற்றி!

**பலன** : நல்லவற்றையே பேசி - நல்லறிவு பெருகும்

✠ **குரு** : குணமிக வியாழக் குரு பகவனே
மணமுளவாழ்வு மகிழ்வுடனருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி சடாட்சித் தருள்வாய்?

**பலன்** : செல்வம் பெருகும், துன்பங்கள் மறையும்.

✠ **சுக்கிரன்** : சுக்கிர மூர்த்தி சுபசுக மீவாய்
வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே?

**பலன்** : எல்லா நன்மைகளும் பெருகி நவக்கிரக "ஸ்ங்களின் அருளைப் பெறலாம்.

✠ **சனி** : சங்கடந் தீர்க்கும் சனி பகவானை
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாக நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா?

**பலன்** : கடன்கள் நீங்கி செல்வம் செழிக்கும்.

✠ **ராகு** : அரவெனும் இராக்கு ஐயனே போற்றி
இரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அணைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி!

**பலன்** : விரோதிகள் அழிந்து எல்லா காரியங்களிலும் வெற்றிகிட்டும்

✠ **கேது** : கேதுத் தேவே கீர்த்தித்திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரகூறி

**பலன்** : எல்லாத் துன்பங்களும் நீங்கி சுகவாழ்வு வாழலாம்.

# தமிழ் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் ஆங்கில மொழியை கற்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

ச.நகநந்தினி
ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை
(புனித ஹென்றியரசர் கல்லூரி)

இது நவீன கணனியுகம். நாம் இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலைக் கடந்து உட்புகுந்து உல்லாசமாக உலாவுகின்றோம். மின்சாரம், தொலைபேசி, தொலைக் காட்சி, தொலைநகல், கணனி, மின்னஞ்சல், இணையம் போன்றவற்றின் பாவனையால் செல்வந்த நாடுகளில் மட்டுமின்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கிராமப் புறங்களிலும் மக்களின் வாழ்க்கை வசதிகள் பல்கிப் பெருகி விட்டன. ஆம்! அன்று பரந்து விரிந்து கிடந்த உலகம் இன்று நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் மிக நெருங்கி அகமகிழ்ந்து நிற்கின்றன. நாடு, இனம், மொழி, மதம் என்ற கூறுபாடுகளால் வேறுபட்டு வாழும் உலக மனிதர்கள் அனைவரையும் ஒன்றியப்படுத்தும் ஒரு பாலமாக விளங்கும் ஆங்கில மொழியை, இணைப்பு மொழி (Link Language) என்று சருவதேசமும் போற்றிப் புகழுவது நியாயமானதாகும்.

பிரித்தானிய நாட்டை பிறப்பிடமாகவும் வளர்ப்பிடமாகவும் கொண்ட ஆங்கிலமொழி உலகின் பெரும்பாலான பகுதிகளில் பிரித்தானியர் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் அந்த நாடுகளில் எல்லாம் பிரித்தானியரால் பரப்பப்பட்டது. இங்ஙனம் இலங்கையிலும் பரப்பப்பட்ட ஆங்கில மொழி. இலங்கை 1948 இல் சுதந்திரமடைந்த பின்பும் பாடசாலைகளில் ஒரு பாடமாக புகட்டப்பட்டு வருகின்றது. இலங்கையில் ஆங்கில மொழி மூலம் புகட்டப்பட்ட கல்வி தாய் மொழி மூலம் புகட்டப்பட்ட ஆரம்பத்தில் இருந்து ஆங்கில மொழியின் செல்வாக்கு மாணவர்கள் மத்தியில் மங்கத் தொடங்கியது. அநேகமான தமிழ் மாணவர்கள் க.பொ.த (உயர்தரம்) வரை ஆங்கில மொழியை புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு கணிதம், விஞ்ஞானம், கணக்கியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து ஆர்வத்துடன் கற்பதை நாம் அவதானிக்க முடிகிறது. பல்கலைக்கழகத்தினுள் புகுந்த பின்போ அல்லது தொழிவாய்ப்பைத் தேடியலையும் பொழுதே தான் ஆங்கில அறிவின் தேவைப்பாட்டை உணர்ந்து

பச்சாதாகப்படுகின்றனர். சில பெற்றோர் மட்டுமே தம் பிள்ளைகளுக்கு இளமையிலிருந்தே ஆங்கில மொழியைப் புகட்டுவதில் அதிக ஆர்வத்தைக் கொண்டிருக்கின்றனர். இந்த கணிணி யுகத்திலே விஞ்ஞானமய நாடுகளின் நவீன விஞ்ஞான, மருத்துவ தொழில் நுட்ப அறிவை எமது மாணவர்கள் உள்வாங்கிக் கொள்ள விரும்பினால் நிச்சயம் ஆங்கில மொழியைக் கற்றேயாக வேண்டும். சமூக மேம் பாட்டிற்கும் ஆங்கில மொழி அறிவு இன்றியமையாததாகும்.

ஆங்கில மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணுவது ஆங்கில மொழியை தமிழ் மாணவர்கள் கற்றுக் கொள்ள சற்று துணைபுரியும் என்பது எனது அபிப்பிராயம் ஆகும். தமிழ்மொழியில் ஒவ்வொரு ஓசைக்கும் ஒவ்வொரு எழுத்தென 247 ஓசைகளுக்கும் 247 எழுத்துக்களை உள்ளமை தமிழ்மொழியின் தனிச்சிறப் பெனலாம். ஆங்கில மொழியைப் பொறுத்த மட்டில் 40க்கும் அதிகமான ஓசைகள் உள்ளபோதும் 26 எழுத்துக்கள் மட்டுமே உள்ளமை பிரச்சினையாகும். நாற்பதுக்கும் அதிகமான ஓசைகளை குறிப்பதற்கு 26 எழுத்துக்களை எங்ஙனம் போதுமானதாகும். எனவே தான் A, C, G போன்ற சில எழுத்துக்கள் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட ஓசைகளை குறிப்பதற்கு பிரயோகிக்கப் படுகின்றன. ய என்ற எழுத்தை அ, ஆ, எ, அய் ஆகிய ஓசைகளைக் குறிப்பதற்கு பிரயோகிக்கின்றோம். (உதாரணம் 1. at 2. arm. ஆ 3. again – v accident – ma;) இங்ஙனம் ஆங்கில மொழியில் ஓசைகளின் எண்ணிக்கைக்கு சமமான அளவு எழுத்துக்கள் இல்லாமை. அம்மொழியைக் கற்கும் தமிழ் மாணவர்களின் மனங்களை பெருங் குழப்பத்தில் ஆழ்த்துவது முற்றிலும் உண்மை. இதனால் ஆங்கிலத்தை சிக்கல் நிறைந்த மொழியொன்று தமிழ் மாணவர்கள் புறந்தள்ள முனைகின்றனர்.

மேலும் ஆங்கில மொழியில் சிறிய எழுத்துக்கள் (Small Letters) பெரிய எழுத்துக்கள் (Capital Letters) என இருபத்தாறு எழுத்துக்களும் இரு மடங்காகின்றன. இதுவம் தமிழ் மாணவர்களைத் திகிலடைய வைக்கின்றன. ஏனெனில் தமிழ்மொழியில் சிறிய எழுத்துக்கள் பெரிய எழுத்துக்கள் என்ற வேறுபாடுகள் இல்லை. சில சொற்களில் ஒரு எழுத்து ஒலிக்கப்படாது தவிர்க்கப்படும் வழக்கத்தை (Silent letter) ஆங்கிலமொழியில் கண்டு தமிழ் மாணவர்கள் திகைப்படைகின்றனர். (உதாரணம் Knife) தமிழ் மொழியில் எழுத்துக்குளம் ஓசைகளுக்கும் இடையே சீரானதொரு தொடர்பு இருப்பதால் சிறுவர்களால் அம்மொழியை சரியாக எழுதவும் வாசிக்கவும் முடியும். ஆங்கிலத்தில் எழுத்துக்கள் போதுமான எண்ணிக்கை இல்லாமையால் சிறுவர்கள் ஆங்கிலத்தை சரியான எழுதவோ வாசிக்கவோ முடியாது திணறுகின்றனர். ஆங்கில மொழியில் எழுத்துக்களுக்கும் ஓசைகளுக்கும் இடையே சீரானதொரு தொடர்பு இல்லாமையால் தமிழ் மாணவர்கள் சொல்லொணாத சிரமங்

களை கற்றல் செயற்பாட்டில் எதிர் கொள்கின்றனர் என்பது கசப்பான உண்மையாகும். (உதாரணம் ஞரயல) என்ற சொல்லை குவே என்று உச்சரிக்காது கீ என்று தான் உச்சரிக்க வேண்டுமாம். ஆங்கில மொழியில் காணப்படும் யிாயளவசழிாந (-) என்ற அடையாளப் பாவிப்பு தமிழ் மாணவர் களின் மூளைகளைக் கலக்கும் ஒரு விடயமாகும். ஊமைப் பொருளைக் குறிக்கும் போது என்ற அடையாளத்தை பிரயோகிக்கின்றோம். (உதாரணம் Rams book) ஒரு சொல்லில் ஒரு எழுத்தை எழுதாது தவிர்க்கும் சந்தர்ப்பங்களிலும் அவ்வெழுத்து வரவேண்டிய இடத்திற்கு மேலே என்ற அடையாளத்தைப் பிரயோகிக்கின்றோம். (உதாரணம் I'm).

ஆங்கில மொழியைக் கற்கும் செயற்பாட்டில் உச்சரிப்புக்கலை ஒரு தனி அலகு எனக் குறிப்பிடலாம். தமிழ் மாணவர்கள் உச்சரிப்புக் கலையிர் கடும் பயிற்சியை விடா முயற்சியுடன் மேற்கொள்ள வேண்டிய தொரு நிலையில் உள்ளனர். பிரித்தானியா பயங்கரமான குளிர் நிலவும் ஒரு நாடாகும். கடுங்குளிர் வாயினூடாகச் சென்று தொண்டையை தாக்கிவிடும் என்ற பீதியினால் ஆங்கிலேயர் தமது உதடுகள் இரண்டையும் மிக மிகச் சிறியதொரு இடைவெளி ஏற்படும் வண்ணம் இலேசாக மூடியவாறு மூக்கினூடாக காற்றை வெளியேற்றி ஆங்கில மொழியைப் பேசுவது வழக்கம். அதிக வெப்பமான எமது நாட்டில் வாழும் தமிழ் மாணவர்களும் ஆங்கிலேயரைப் போன்று உதடுகளை மிக மிகச் சிறிய இடைவெளி ஏற்படும் வண்ணம் இலேசாக மூடி மூக்கினால் காற்றை வெளியேற்றி பேசப் பழகுதல் சற்று சிரமமானதுதான்.

தமிழ் மொழி சீரான தொரு இலக்கண வரம்பினைக் கொண்டது. இலக்கண விதிகள் தெரிந்திருந்தால் ஒரு மாணவனால் தமிழ்மொழியை சரியாக எழுத முடியும். ஆங்கில மொழி சீரானதொரு இலக்கண வரம்பினைக் கொண்ட நல்ல ஆங்கிலத்தில் ஒருமை பன்மை பின் S ஐச் சேர்த்து பன்மை அமைக்கின்றோம். (உதாரணம் Boy – Boys) சில ஆங்கில ஒருமைப் பெயரின் பின் es ஐச் சேர்த்து பன்மை அமைக்கின்றோம். (bench – benches) ஆங்கில ஒருமைப் பெயரின் ஈற்றெழுத்தை நீக்க pies ஐச் சேர்த்து ன்மை அமைக்கின்றோம். (Baby – banies) news என்பது ஒருமைப் பெயராகவும் பாவிக்கப்படுகின்றது. சில ஆங்கிலச் சொற்களுக்கு ஒருமையும் பன்மையும் ஒரே சொல் (Furniture – furniture) சில ஆங்கில ஒருமைப் பெயரின் இடையில் வரும் உயிர் எழுத்தை மாற்றி பன்மை



அடைகின்றோம். (உதாரணம் Man – Men) இதனால் தமிழ் மாணவர்கள் ஆங்கில மொழியில் ஒருமை பன்மை பதங்களை மனதிலே மனனஞ் செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

தமிழ் இலக்கணத்தில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று பிரிவுகளைக் காண்கின்றோம். ஆங்கில இலக்கணத்தில் இம் மூன்று காலங்களும் நான்கு உப பிரிவுகளாக பின்வருமாறு வகுக்கப் பட்டுள்ளன.

| | Present | Past | Future |
|---|---|---|---|
| 01. | Simple | Simple | Simple |
| 02. | Continuous | Contiunous | Continuous |
| 03. | Perfect | Perfect | Perfest |
| 04. | Perfect continuous | Perfect continuous | ............... |

தமிழ் இலக்கணத்தில் வினைச் சொல்லின் முக்காலங்களையும் அமைக்கும் விதி தெளிவானதும் வரையறையானதும் என்பதால் மாணவன் சுலபமாக கற்றுக் கொள்கின்றான். த், ட், ற் இறந்த கால இடைநிலையாகவும் கின்று, கிறு நிகழ்கால இடை நிலையாகவும் ப், வ், எதிர்கால இடை நிலையாகவும் வருவதனால் மாணவர் வினைச் சொல்லின் காலத்தை வெகு சுலபமாக இனங் காணுகின்றனர். ஆங்கில மொழியில் வினைச் சொற்கள் ஒவ்வொன் றினதும் Present, Past, Pastparticiple வடிவங்களை தமிழ் மாணவர்கள் மனப் பதிவ செய்து கொள்ள வேண்டிய துரதி'டம் காணப்ப டுகின்றது. எதிர்கால வினை வடிவத்தை அமைப்பதற்கு மட்டும் (Will / Shall Verb) என்ற சீரானதொரு விதிமுறை உண்டு. சில வினைச் சொற்களுக்கு Present, Past, Past Participle மூன்றும் ஒரே சொல்லாக வரும் புதுமையை ஆங்கில மொழியில் காண்கின்றோம். (உதாரணம் Cut – Cut – Cut)

தமிழ் இலக்கணத்தில் ஒரே ஒரு செயப்படுபொருள் மட்டும் வருகின்றது. ஆங்கில மொழியில் DIrect Object, indirect object என வெவ்வேறான இரு செயப்படுபொருள் காணப்படுவது முண்டு (உதாரணம்

He taught science subject verb objest

He taught me science

Subject verb indirest direct

Subject verb object object

ஆங்கிலமொழியை நன்கு கற்றவரையும் preposition மனக்குழப்பம் அடையச் செய்கின்றது. இரு பொருள்களுக்கிடையேயுள்ள தொடர்பை சுட்டி நிற்பதே preposition ஆகும். உதாரணம் We live at Ilavalai Noun.

தமிழ்மொழியில் எழுவாய் செயப்படு பொருள் பயனிலை என்ற சொல் லொழுங்கில் வசனம் அமைக்கின்றோம்.

ஆங்கில மொழியிலோ Suject verb object என்ற சொல்லொழுங்கில் வசனம் அமைக்கின்றோம். தமிழ் மாணவர்கள் பலர் Suject object verb என்ற தவறான சொல்லொழுங்கில் ஆங்கிலமொழியில் வசனம் அமைப்பை திருத்திக் கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் தமிழ் மாணவர்கள் ஆங்கிலம் தமிழ் அகராதியின் உறுதுணையுடன் ஒரு தகுதியான ஆங்கில ஆசிரியரின் வழிகாட்டலில் ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் ஆங்கிலத்தில் கேட்டுக் கிரகித்தலும் வாசித்து கிரகித்தலும் சுலபமாக பயிலக் கூடிய திறன்களாகும். மேற்கூறிய இரு திறன்களிலும் கடும் முயற்சியுடன் பயிற்சி பெறுவதன் மூலம் எழுதுதல், பேசதல் ஆகிய திறன்களையும் காலப்போக்கில் படிப்படியாக வளர்த்துக் கொள்ள முடியும். தமிழ் மாணவர்கள் தளராத மனதுடன் ஆங்கில மொழித் திறன்களைப் பயின்று தொழிற்துறையில் நன்கு பிரகாசிப்பார்களாக.



# இளவாலை கிராமத்தில் கடற்றொழில்....

திரு. ம. குணரட்ணம்
போயிட்டி, இளவாலை



எமது இளவாலை கிராமத்தை பெறுத்த வரையில் விவசாயம், மற்றும் கடற்றொழில் என்பன பிரதான தொழிலாக காணப்படுகின்றன. இருந்தும் விவசாய குடும்பங்களின் எண்ணிக்கையை காட்டிலும் மீனவ குடும்பங்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது.

இளவாலை கிராமத்தின் இரு எல்லை பகுதிகள் கடற்பகுதிகளாக காணப்படுகின்ற போதிலும், குசுமான்துரை, சேந்தாங்குளம், வலித்தூண்டல் என்பவையே பிரதான மீன்பிடி வாடிகளாக காணப்படுகின்றன. இதில் வலிதூண்டல் பகுதியில் வீச்சு வலை மூலமாகவே மீன்பிடிக்கப்படுகின்றது. இதில் அதிகளவு தூரம் மீனவர்கள் கடலுக்குள் செல்வதில்லை. கரையோர பகுதிகளிலேயே வீச்சு மரம் மூலமாக மீன்பிடிக்கின்றனர்.

ஆரம்ப காலங்களில் கட்டுமரம், பாய்மரம் என்பவையே பயன்படுத்தப்பட்ட போதும் தற்போது இவற்றின் பயன்பாடு முற்றாக ஒழிந்து மோட்டார் படகு மூலமாகவே மீனவர்கள் கடலுக்கு செல்லுகின்றனர். அந்த வகையில் இந்த கடற்றொழில் என்பதும் தற்போது பல இலட்சங்கள் முதலிட வேண்டிய தொழிலாகமாறி இருக்கின்றது. அதே நேரம் அபாயம் நிறைந்த தொழிலாகவும் இது காணப்படுகின்றது. அதாவது புயல், மழை, காற்று என்பன ஏற்படுமிடத்து உயிராபத்தை ஏற்படுத்துவதாகவும், பல இலட்சம் முதலீடு செய்த உபகரணங்கள் நீரில் மூழ்கி போகும் அவலத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது.

எமது கிராமத்தை பொறுத்த வரையில் அதிகளவு பிடிக்கப்படும் மீனினங்களாக சூடை, பாறை, விளை, என்பவற்றை குறிப்பிட முடியும். அவை சூடை வலை, விளைமீன் தூண்டல் எனும் முறைகளால் பிடிக்கப்படுகின்றன. இவ்வாறு பிடிக்கப்படும் மீனினங்கள் விற்பனை செய்வதற்காக வெளிநாட்டு அமைப்புக்களால் இரு இடங்களில் சந்தை கட்டடம் அமைத்து

கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது குசமான்துறை மற்றும் சேந்தாங்குளம் மீன்பிடி பகுதிகளுக்கு அண்மையிலேயே இந்த சந்தை கட்டிடம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரவு 10 மணியளவில் தொழிலுக்கு செல்லும் தொழிலாளர் காலை 7.00 மணியளவில் கரை திரும்பி குறித்த மீன்பிடி வாடிகளில் வைத்து சில்லறை வியாபாரிகளுக்கு ஏலம் கூவி மீன்களை வழங்குவர். இருப்பினும் தற்பொழுது குளிரூட்டிகள் மூலம் கொழும்புக்கு மீனினங்களை ஏற்றும் மொத்த வியாபாரிகள் அதிக விலைகளில் மீனிங்களை வாங்குவதால் அதிக மீனவர்கள் அந்த மொத்த வியாபாரிகளுக்கு மீன்களை விற்பதை விரும்புகின்றனர்.

அந்த வகையில் பெருந் தொழிலாகி இருக்கும் இந்த கடற்றொழிலுக்கு சங்கம், சமாசம், சம்மேளனம் என்பவை இருக்கின்றன. இந்த சங்கங்களில் பதிவு செய்தவர்களே மீன்பிடிக்கவும் அனுமதியுடையவர்கள்.

எமது இளவாலை கிராமத்தை பெறுத்த வரையில் மூன்று மீன்பிடிச் சங்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன மாரீசன்கூடல் கடற்தொழிலாளர் சங்கம், பேயிட்டிசீந்தி பந்தல் கடற்றொழிலாளர் சங்கம், சேந்தாங்குளம், கடற்றொழிலாளர் சங்கம் என்பன ஆகும். இந்த சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமான சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

எத்தனையோ குடும்பங்களுக்கு உணவளிக்கும் தொழிலாகவும், சமயங்களில் உயிரெடுக்கம் தொழிலாகவும் காணப்படுகின்ற இத்தகைய கடற்றொழில் செய்கின்ற குடும்பங்களை கொண்ட எமது கிராமம் இலங்கையளவிலேயே குறிப்பிடத்தக்க ஓர் மீன்பிடி கிராமமாகும்.

பெண்கள் அழகு???

சிங்கத்தில் அழகு...ஆண் சிங்கம்!
யானையில் அழகு...ஆண் யானை!!
மயிலில் அழகு...ஆண் மயில்!!!
மனித இனத்தில் மட்டும்—ஏன்
பெண் அழகு????
ஆண்கள் வர்ணிப்பதால்



# பெரியோர் சொல்லை மீறலாமா?

**சிவயோகமதி கந்தவனம் B.A**

பெரியோர்கள் நலந்தரும் அறிவுரைகளைச் சொல்வதால் 'பெரியோர் சொல்லை மீறாதே' என பண்டைநாள் முதல் வழக்கில் விளங்கி வருகின்றது. இங்கு பெரியோர் என்பது சான்றோரையும் வயதால் பெரியவரையுங் குறிக்கும். சான்றோர் அநுபவசாலிகளாகவும் முதிர்ந்த கல்வி அறிவு உடையராகவும், புத்திஜீவிகளாகவும் இருந்தனர். அதனால் அவர்கள் வாக்கைத் தேவ வாக்காக மதித்தனர். எது எப்படி இருப்பினும் அவர்கள் சொல்வது அபிப்பிராயமாக வரும் போது யோசிக்க வேண்டியது அவசியமாகிறது. புத்திமதி வேறுஞ அபிப்பிராயம் வேறு. அபிப்பிராயத்தைப் பொறுத்தவரை அது சொந்த (தனிப்பட்ட) விடயம் ஆறறிவு படைத்த மனிதன், அதுவும் பகுத்தறிவு எனப்படும் ஆறாவது விசேஷ அறிவைப் பெற்ற மனிதன் பிறரது அபிப்பிராயத்தை ஆராயாது அப்படியே ஏற்றல் அறிவுடைமை அன்றுஞ அது மடமையிலும் மடமை. குழந்தைப் பருவத்தில் இருந்தே 'தாய் சொல்லைத் தட்டாதே', 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை', பெரியோர் வார்த்தை அமிர்தம்', 'குரு வார்த்தையைப் போற்று' 'தந்தை, தாய், குரு, தெய்வம்' போன்ற புத்திமதி சார்ந்த பொன் மொழிகள் எமது நெஞ்சத்திற் பதிக்கப்பட்டுள்ளன. அவ்வார்த்தைகளில் ஊறிய எம்மனம் பெரியோர் சொல்வதை மீறிச் செயற்பட அஞ்சுவது இயல்பு. கடவுள் வாக்குப் போன்ற பெரியோர் வாக்கை மீறலாமா என மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்பவர்களும் இருக்கிறார்கள்தான். ஆதலால் பெரியோர் கூறுவது எதுவாய் இருப்பினும் முதலில் அடக்கமாகக் காது கொடுத்து உள்வாங்க வேண்டும். அவர்கள் நன்மை பயக்கும்



என நினைந்து கூறும் அக்கருத்துக் குந்த கமாய் அமையுமெனின் மீறலாம்ஞ எதிர்ப்புக் காட்டாது விளக்கங் கூறி மீறுவதில் தப்பு எதுவும் இல்லை. நன்மை பயப்பனவற்றை மீறுவதுதான் மிக மிகத்தவறு.

எமது பண்பாட்டில் எல்லா வற்றுக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. பொய் சொல்லல் ஆகாதெனக் கண்டிப்பர். ஆயினும், பொய்ம்மைக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. வள்ளுவப் பெருந்தகையும் உணர்த்திய வழி அது. பொய்ம்மைக்கென ஒரு தனி அதிகாரம் வகுக்காது வாய்ம்மை எனும் அதிகாரத்தால் பொய்ம்மையை அகற்றிய வள்ளுவர்,

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"-

(திருக்குறள் 292)

என்று நன்மை பயக்கக் கூறும் பொய், பொய்யாகாதுஞ அது மெய்க்குச் சமன் எனக் கொண்டார். வள்ளுவன் காட்டிய வழிப்படி நாமும் எடுத்த காரியம் குற்றமற்ற நன்மை தரும் எனக் கண்டால் பெரியோர் சொல்லையும் மீறிச் செயற்படுவதில் தவறு இல்லைஞ இ∴. து மீறல் ஆகாதுஞ விதி விலக்கின் பாற்பட்டு உலகம் ஏற்றுக் கொள்ளும் மீறல் ஆகும்.

இராமாயணத்தில் பரதன் தாய் சொல்லை மீறுகிறான். ஏதற்காக? தந்தைக்குப் பின் முடி உரிமை மூத்த மகனுக்கு என்னும் குலமரபையும், சாஸ்திர தர்மத்தையும் காக்கும் கடப்பாடு கருதித் தாய்சொல் தட்டுகிறான். தட்டியது மட்டுமன்றித் தாயைக் கண்டிக்கிறான். தாய் அரசாட்சி ஆசையினால் அரச தர்மத்தை மீறிவிட்டதாக அவன் எண்ணி விட்டான. பாரதக்கதையில் இந்திரன் மாறுவேடத்தில் வந்து கர்ணனிடம் கவசகுண்டலங் கேட்டபோது பிதாவும் கடவுளுமாகிய சூரியன் 'கொடாதே' எனத் தடுக்கவும் அச்சொல்லை மீறி, யாசித்து வந்தவனுக்கு இல்லை என்னாது கொடுப்பதே தர்மம் என்று கொடுத்தான், கொடுத்ததன் பலனாகப் போரில் அம்பு துளைத்தும் உயிர் போகாதிருக்க மாறு வேடத்தில் வந்த மாயக் கண்ணனுக்குத் தனது தருமத்தையே தாரைவார்த்தான். மகாபலிச்சக்கர வர்த்தியும் குருநாதராகிய சுக்கிராச்சாரியார் எச்சரித்தபோதும் அவ் வெச்சரிக்கையை மீறி, இல்லை யென்னாது வழங்கும் தன் பண்பைப் பேண, வாமனருக்கு மூன்றடி நிலம் தானங் கொடுக்கத் துணிந்து பலியா கிறான். இம்மூன்று நிகழ்வுகளிலும் மாதா, பிதா, குரு, தெய்வ வார்த்தைகள் மீறலாக இருப்பினும் தருமநெறி கருதி மீறப்பட்டதால் விதி விலக்காகின்றன. நன்மை கருதிய மீறல்களை உலகம் ஏற்கும் என்பதற்கு இவர்கள் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எதற்கும் அடுத்தவர் அபிப் பிராயங்களைத் வேதவாக்காக நம்பி, ஆராயாது சார்ந்திருத்தல்

மண்குதிரை (குதிர்-ஐ), குதிர் என்பது ஆற்றில் உள்ள மணற்றிடல். குதிர் பேச்சுவழக்கில் குதிரை ஆனது.)

நம்பி ஆற்றில் இறங்கியதுபோலாகும். சொந்த விடயங்களுக்குச் சுயபுத்தி வேண்டும். பிறர் அபிப்பிராயங்களையும் புறந் தள்ளாது செவி மடுத்து, அறிவு எனும் உரைகல்லில் உரசி ஆய்ந்து அனுகூலமாயின் ஏற்பது அறிவுடைமையாகும். அவர் சொல்கிறபடி நான் ஆட வேண்டுமா என்னும் ஆங்காரத்தில் நிராகரித்தல் பெருந்தவறு. சொல்வது எல்லாவற்றுக்கும் தலையாட்டிப் பொம்மை ஆகித், தான் சிந்தியாது பிறர் சொல்வதை நம்பி ஏற்று நடப்பது மிகப்பெருந் தவறு. அடுத்தவர் கருத்தை ஆராயாது அப்படியே ஏற்றதால் கெட்டவர்கள் பலர். தமிழ்ப் பண்பாபட்டின் கண்ணாடிகளான இராமாயணம், பாரதக் கதைகள் பெரியோர்களை மதித்து அவர் சொற்படி வாழ்வதாலும், செவி சாய்க்காது மீறுவதாலும் ஏற்படும் **இன்ப துன்பங்களை** எடுத்துக் காட்டுகின்றன. மாபெரும் யுத்தம் நடந்ததுக்கும் இவை இரண்டுமே காரணம் என்றுங் கூறலாம்.

இராமாயணத்தில் இராமன்மேல் அளவிலா அன்பு பூண்ட சிற்றன்னை கைகேயி, தன்னை மனம் மாற்றக் கூனி கூறிய வஞ்சகக் கூற்றை ஆராயாது, அப்படியே ஏற்றாள்.அதன் விளைவு இராமன் காடேகியதும், மாட்சிமை மிக்க மன்னன் தசரதன் மாண்டதும், கைகேயி உட்பட அரசியர் விதவையரானதும், கைகேயியும் சரித்திரந் தூற்றும் கொடியவள் ஆனதும்ஆ கைகேயி சிறிது மூளைக்கு வேலை கொடுத்திருப்பாளே ஆயின் சதிப் பேச்சென்பது புரிந்திருக்கும். ‘இராமனும் சிற்றன்னையின் கூற்றை ஆராயாது, தாய் தந்தையர் சொல்லைத் தேவவாக்காக ஏற்றுப் பணிந்து காடேகினான்ஆ பல அவலங்களைச் சந்தித்தான். வனத்திலே சீதை பொன்மானைப் பிடித்துத் தரும்படி கேட்டவுடன் அவளை மகிழ்விப்பதற்காகப் புறப்பட்டான் அந்த மானின் முகத்தில் அரக்கர் சாடை தெரிவதாக இலக்குமணன் கூறித் தடுத்தனன். ஆயினும் அவன் கூற்றை அசட்டைசெய்து இராமன் சென்றான். இலக்குமணன் சொன்னதையும் பொன்மானின் சாயலையும் அசாதாரணமாக, கிட்டவும் எட்டவும் ஓடுவதையும் சற்று ஆராய்ந்திருந்தால், சீதையைப் பிரியும்நிலை ஏற்பட்டிருக்காது. கண்ணுறக்கமின்றி இரவு பகலாகக் காவற் கடமை புரிந்த காவலன் இலக்குமணன் கூறியதைச் சீதை ஏற்றிருந்தால், இராவணனாற் கவரப் பெற்றுச் சிறைப்படும் இழிநிலை நேர்ந்திராது. இராம இராவண யுத்தமே




நடந்திராது எனலாம். இராவணன் சீதையைக் கவர்ந்ததால் சிவபக்தன் எனும் நற்பெயருக்கும் இழுக்கைத் தேடினான். பின்னரும் விபீ'ணனதும் கும்பகர்ணனதும் கருத்துகளுக்குச்

செவிசாய்க்காது போர் புரிந்ததால் வீரத்தையும் பத்துத் தலைகளையும், இழந்தான். இராமனும் வண்ணான் சொன்னதற்காக, தாய்மை எய்தியிருந்த சீதையைக் காட்டுக்கு அனுப்பிய அவப் பெயர் சுமக்கும் அவலமுந் வந்திருக்காது.

பாரதக்கதையை எடுத்துக் கொண்டால், துரியோதனன். பின் விளைவை ஆராயாது மாமனான சகுனி யின் சொற்படி தான்தோன்றியாய் நடந்து, தமது குருகுலம் வேரோடு அழியக் காரணன் ஆனான். குரு துரோணர், பேரன் பீஷ்மர், தந்தை திருதராட்டிரன், சிறியதந்தை விதுரன், கண்ணபிரான் ஆதிய பெரியோர் புத்திமதிகளை பேராசை வயப்பட்டு மீறியதால் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொண்டான். பிஷ்மர் கர்ணனுக்கு, 'பாண்டவரோடு ஐக்கியமானாற் போரை நிறுத்தமுடியும். துரியோதனன் உன் சொல் தட்டமாட்டான்' எனப் போதித்தும் அறிவுரையை ஏற்காததால் தோற்றது மட்டுமன்றி குரு குலமே அழிந்தது.

பாண்டவர்கள் ஐவரும் தௌமியர், துருவாசர், வியாசர் ஆகிய முனிவர்களதும் கண்ணபிரானதும் சொற்கேட்டு அறவழி நடந்தபடியால் அறத்துக்கும் வீரத்துக்கும் உலகம் போற்றும் உத்தமர் ஆயினர். இவை இதிகாசங்கள் உணர்த்தும் உண்மைகள்.

பழக்க வழக்கங்கள் பற்றிய புத்திமதிகள் சொல்வது பெரியோர், பெற்றோர் கடமைஞு அவற்றை உதாசீனஞ் செய்யாது கேட்பது பிள்ளைகள் கடமை. வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமாயின் பெரியோர் களது வழிகாட்டல் அவசியந் தேவை. ஔவைப் பாட்டியின் 'பெரியாரைத் துணைக் கொள்' என்னும் அறிவுரையும் வள்ளுவரின் 'பெரியோரைத் துணைக் கோடல்' என்னும் அதிகாரம் புகட்டும் பத்துக் குறள்களின் வழிகாட்டலும் வாழ்க்கை வெற்றிக்குப் படிகளாகும். பெரியோர் வகுத்த முதுமொழிகள் எல்லாம் நல்ல வண்ணம் வாழவைக்கும் பொன்மொழிகள். நேர்ப்பாதையில் இட்டுச் செல்வது பெரியோரது வழி காட்டலும் புத்திமதிகளும் என்பதை ஒருபோதும் மறக்கலாகாது அவைகள் வெள்ளைப் பிரம்புக்கு நிகரானவை. ஒருபோதும் தான் தோன்றித் தனமாக வாழலாகாது

இன்றைய மாணவர் நிலைபற்றியும் சிந்திக்கத்தகும். முன்னேற வழிவகுக்கும் துறைகள் பல இருக்கின்றன. இருந்தபோதும் பெற்றோர் மருத்துவம், பொறியியல், கணக்கியல் துறைகளிலேயே கண்ணாய் இருக்கின் றார்கள். பிள்ளையின் விருப்பத்தைக் கருத்திற் கொள்ளாது தாம் விரும்பிய துறையிற் சேருமாறு வற்புறுத்தும் பெற்றோரும் உண்டு. அது பெற்றார் கல்வியால் விளைந்த அறிவுமன்றுஞு வயதாற் பெற்ற அநுபவமுமன்று. ஆசைதான் காரணம். மற்றவர்களைப் பார்த்துத், தாமும் அவ்வாறு சிறந்து வாழவேண்டும் என்ற பெற்றோரின் வேணவாவால்தான் பிள்ளைகள் பெற்றோரின் சொல்லுக்காகவும், விருப்பத்துக்காகவும் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தமக்கு

நாட்டம் இல்லாத துறைகளில், சேருகின்றனர். கடினம் என உணரும் பாடநெறிகளில் ஒருபோதும் சேரல் ஆகாது. படிப்பது பிள்ளைகளளூ பெற்றோர் அல்லர். விருப்பம் இன்றி எப்படிப்பையும் மூளைக்குள் திணிக்க முடியாது. ஈடுபாடில்லாத பாடநெறியை எடுத்தால் நல்ல பெறுபேற்றைப் பெறுதலும் அரிது. மேலும், பலதுறை களுக்குப் பாயும் கட்டமும் ஏற்படும். இறுதியில் எப்படியோ தேறி ஏதோ கிடைத்த வேலை ஒன்றில் பிடித்ததோ பிடிக்கவில்லையோ விரக்தியுடன் வாழ்நாள் முழுவதும் போராடும் நிலை உருவாகும். எனவே, மாணவர்கள் படிப்பு விடயத்தில் அடுத்தவர் மூளையில் தோன்றிய கருத்துக்கு அடிமையாகிப் பலிக்கடா ஆகக் கூடாது. பெற்றோர் காட்டிய துறையிற் பிரகாசிக்க முடியாதெனப் புலப்பட்டால் அவர் களுக்கு நிலைமையை விளக் கலாம். அதற்குப் பிறர் ஒருவரின் துணை யையும் நாடலாம். ஆற்றலை மீறிய செயல் அதல பாதாளத்தில் வீழ்த்தி விடும். தமது ஆற்றலை அறியாது பிறரின் ஊக்குவிப்பால் செயற்படத் தொடங்கி, அச்செயல் முடிவடைவதற்கு முன்னே கெட்டவர் பலர் உண்டு என்று பின்வருங் குறள் வாயிலாக 9 முக்காலமும் உணர்ந்த முழுஞானியான வள்ளுவர் புத்தி புகட்டுகின்றார்.

"உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்"

– திருக்குறள் 473

உயர் கல்விக்குத் தேர்வான பிள்ளை நிச்சயமாகத் தன் ஆற்றல் நன்றாகவே தெரிந்திருக்கும். அதனால், பிள்ளை விரும்பிய துறைக்குப் பெற்றார் தடைகல் ஆகக்கூடாது. விஞ்ஞான வளர்ச்சி அடைந்த இக்காலப் பிள்ளைகளின் அனுபவங்களும் அறிவும் ஆற்றலுஞ் சொல்லுந்தரமன்று. அவர்களது படிப்பும் முன்னை யோர்போல் கிளிப்பிள்ளைப் படிப்பன்று. மழலைப் பள்ளியிலேயே ஏன்? எவ்வாறு? ஏதற்காக? என்னுங் கேள்வியுடன், செயற `பாட்டுடன், ஆய்வுடன், சிந்திக்கும் ஆற்றலுடன் அவர்கள் கல்வி, அறிவு பூர்வமாக வளர்கிறது. அவர்கள் பல்கலைக் கழகத்திற் கால் பதிக்கும் போது எதையும் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் மிக்கவராய் அறிவு முதிர்ந்தவர்க ளாகியிருப்பர். பெற்றோரிலும் பார்க்க அறிவாளிகளாக இருக்கவுங் கூடும். குருவை விஞ்சிய சீ'யனாகவே சிலர் உருவாகியும் இருக்கலாம். உதார ணத்துக்கு ஸ்ரீ இராகவேந்திரா - அவரது இயற்பெயர் வேங்கடநாதனை எடுக்கலாம். குருவால் விளக்க முடியாது தத்தளித்த பகுதியை மிக இலகுவாக விளக்கி வியக்கவைத்த சம்பவம் அவர் வரலாற்றில் உளது. ஆரம்ப இடைநிலைக் கல்வியில் பெற்றோர் தம் ஆசைக்கு அடிக்கல் நாட்டலாம். ஆனால், மேல் நிலைக் கல்வியில் பெற்றோர் அந்தப் பாடத்தை எடுளூ இந்தப்பாடத்தை விடு அந்தத் துறைதான் நல்லது எனத் தலையிட்டு வற்புறுத்தலாகாது. அவர்களை வெறும் 'றோபோ' ஆக்காது, பிள்ளை விரும்பிய துறையிற் செல்லவிடுவது, பிள்ளையின் உயர்வுக்கு வழிகோலும்.

புனித ஹென்ரியரசர் கல்லூரி
விடுதி மாணவர்கள்

# அரவணைக்கும் கரங்கள்

யுத்தங்கள் பலகண்டு சத்தங்கள் ஓய்ந்திடவே
பாசக்கரத்தால் அரவணைத்தாள் எம் விடுதி அன்னை
நேசம் என்னும் கூண்டுக்குள் ஆயிரத்தில் ஒருவனாக
படிப்பு என்னும் கூண்டுக்குள்ள என்னை வைத்து
பாடங்கள் பல சொல்லித் தந்தீரே .....

காலங்கள் பல கடந்து விடுதியில் பல மாற்றங்கள் நடந்திட
மாறிமாறி வந்தனர் அருட்சகோதரர்கள்
எம்கல்வி ஒழுக்கத்தை வளர்த்திட
சிதறடிந்த வாழ்வினை ஆரோக்கிமாக நடந்திட

சிந்தனைகள் பல கூறி சிதறாமல் எமைக்காத்திட
ஒடோடி வந்தனர் பிறான்ஸிஸ்கன் அருட்சகோதரர்கள்
மாற்றங்கள் பல கண்டு விளையாட்டில் - எம்மை
வளர்தவர்கள் அருட் சகோதரர்களே.

மண் தொட்ட எங்கள் அனைவரையும்
சிகரம் தொடுபவர்களாக்கிடவே - சின்னஞ்
சிறிய நெஞ்சத்தில் பாசங்கள் பல பொழிந்து
சிதரடிந்தவர்களை சிதையாமல் காத்தவர்கள்

மாரி மழையினிலே போர்வையாக எம்மைக் காத்து
தாய் தந்தையர்களாக எம்மை பேணியவர்கள்
பாரினிலே நாம் உயர்வடைந்து
பட்டப்படிப்பு நாம் படிக்க - ஓடி வந்து
உதவி புரிந்தாள் எம்விடுதி அன்னை.

வாழ்க அன்னையே வளர்க எம் விடுதி

# உள்ளூராட்சி மன்றங்கள் ஓர் பார்வை

சு. சுதர்ஜன்
செயளாலர்
ஊர்காவற்றுறை பிரதேசசபை,
போஷகர் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்.


அதிகாரபரவலாக்கலின் மிக அடிப்படையான அதிகாரம் நிறைந்த சட்டத்தின் வாயிலாக பிரசவிக்கப்பட்ட ஜனநாயகப் பண்புகள் நிறைந்த மக்களால் தெரிவுசெய்யப்படும் சபையையும் சபையின் கீழ் இயங்கும் நிர்வாக இயந்திரத்தையும் கொண்ட வரிகளை விதித்து வரவுசெலவு திட்டத்தை தயாரித்து சிறந்த தீர்மானங்களுடன் மக்களுக்கான அடிப்படை தேவைகளுடன் உள்ளக அபிவிருத்திக்கும் தேசிய அபிவிருத்தியின் பங்காளர்களாகவும் திகழ்கின்ற சபைகளாக உள்ளூராட்சி சபைகள் விளங்குகின்றதெனில் அது மிகையாகாது.

இலங்கை வரலாற்றில் பண்டுகாபய மன்னனின் ஆட்சி முதல் இன்று வரை கிராமமட்ட நிர்வாக முறைமை ஒன்று ஏதோ ஒரு வடிவில் இயங்கிவந்துள்ளது என்பது வரலாற்றுச் சான்று கிராமங்களினூடாகவே தேசிய அபிவிருத்தி அல்லது கீழ் இருந்து மேல் நோக்கிய திட்டமிடல் எனும் நவீன கருப்பொருளுக்கு செயல்வடிவம் கொடுக்கின்ற மக்களுடன் மிக நெருங்கிய தொடர்பையும் பங்களிப்பையும் கொண்டு இயங்கும் உள்ளூராட்சி சபைகள் பற்றிய தெளிவானபார்வை அல்லது விளக்கம் பொதுமக்களுக்கும், ஏனைய அமைப்புக்களுக்கும் இருக்கின்றதா? என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு விடயமாகும். பொதுமக்களுக்கு உள்ளூராட்சி பற்றிய விழிப்புணர்வை வழங்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை, என்ற மூன்று அதிகார சபைகளையும் உள்ளடக்கியே நாம் உள்ளூராட்சி மன்றங்கள் என பொதுவாக அழைக்கின்றோம். மாநகரசபை கட்டளைச் சட்டம், நகரசபை கட்டளைச் சட்டம், பிரதேச சபைகள், சட்டம் ஆகியவற்றின் வாயிலாக நிலப்பரப்பு, சனத்தொகை, வருமான மூலகங்களுக்கான சாத்தியத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு இச்சபைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. உள்ளூர் அதிகார சபைகளுக்கு தேர்தல் மூலம் தெரிவு



செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாக சபை ஒன்று உருவாக்கப்படும் அச்சபையே நிறைவேற்று அதிகாரம் கொண்ட சபையாக விளங்கும். இச்சபை மாநகரசபைகளில் கௌரவ முதல்வர், நகரசபையில் கௌரவ நகரபிதா பிரதேச சபையில் கௌரவ தவிசாளர் தலைமையில் அமைக்கப்படும். இச் சபையின் பிரதான பணியாக விடயப்பரப்பிற்குள் பிரேரணைகள், முன்மொழிவுகள் திட்டங்கள், செயற்பாடுகள் விவாதித்து வாத பிரதிவாதங்களின் அடிப்படையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதாக அமையும். அடுத்ததாக இவ் உள்ளூர் அதிகார சபைகளின் நிர்வாக இயந்திரத்தை கூறலாம். சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் ஊழியப் படையணியாக இது காணப்படும். இவ் நிர்வாகமானது சட்டத்தாலும் தவிசாளரால் எழுத்து மூலம் வழங்கப்பட்ட கடமைகள் கையளித்தலிற்கு அமைய செயலாளரினாள் நிர்வகிக்கப்படும் இதற்கு மேலதீகமாக பொது மக்களின் பங்களிப்பு ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் சட்டத்தால் வேண்டப்படுகின்றது. அதாவது சபையானது வினைத்திறனுடன் வினை பயனுடனும் செயற்படவும் நல்லாட்சியின் பண்புகளை வெளிக்கெணரவும் அப் பண்புகளான வெளிப்படைத்தன்மை கணக்களி தகமை போன்றவற்றுக்கு வலுச்சேர்க்கவும் இச்சபைகள் தேற்றுவிக்கப்பட்டதன் உண்மையான நோக்கத்தை உறுதியாக அடையும் மூலமாகவும் உபகுழுக்கள் ஆலோசனை குழுக்கள், என்றவாறு பல்வேறு குழுக்கள் இச்சபைகளால் உருவாக்கப்படும். அல்லது உருவாக்கப்பட வேண்டும். இக் குழுக்களில் பொது மக்களின் அல்லது துணைசார் நிபுணர்களில் பங்களிப்பு வரவேற்கப்படும் ஒரு விடயமாகும். இதன் மூலம் உள்ளூர் அதிகார சபைகள் பொதுச்சபை, நிர்வாகம், பொதுமக்கள் என்ற பங்குதாரர்களால் முன்னெடுக்கப்படும் அல்லது முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு அமைப்பாகும். என்பது தெளிவு




பின்னூட்டி - பொதுமக்கள்


இவ் உள்ளூர் அதிகார சபைகள் தமக்கு வேண்டிய நிதியினை சட்டத்தால் விதந்துரைக்கப்பட்ட வழிகளின் ஊடாக சேர்க்கின்றன. பிரதான சட்டத்தை மீறாத வகையில் (அரசியலமைப்பு) உபவிதிகளை உருவாக்கி நிறைவேற்றுவதன் மூலம் இன்னோரின் வருமான வழிகள் இச்சபைக்கு திறந்து விடப்படுகின்றன. மேலும் இச்சபையின் சேவைகளுக்கான கட்டணங்களைப் பெற்றுக் கொள்வதன் ஊடகவும் வாடகை, குத்தகை வருமானங்களையும் தமது சொந்த வருமான வகைக்குள் உள்ளடக்குகின்றது. காலத்துக்கு காலம் மத்திய அரசு மற்றும் மாகாண அரசால் வழங்கப்படும் மானியம், கடன் நன்கொடைகளையும் இச்சபைகள் பெற்றுவருகின்றன.

துணைவிதிகள் எனும் போது உள்ளூராட்சி மன்றசட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்காத ஆனால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் கடமைகளையும் செவ்வனே அமுலாக்கும் பொருட்டு உள்ளூராட்சி சபைகளால் ஆக்கப்படும் சட்டமாகும்.

கட்டிடங்கள், கைத்தொழில்கள் நீர்தொடர்பான விடயங்கள், துப்பரவேற்பாடுகள், பாதைகள் காணியும் ஆதனமும் வர்த்தக நிலையங்கள் சஞ்சிகைகள், உணவு கையாளும் நிலையங்கள் நடமாடும் வியாபாரம், அதி'டலாப சீட்டுக்கள், பண்ணைகள், குழியல் இடங்கள், படகுதுறைகள் போன்ற பலடசின் கணக்கான விடயங்களை வழிப்படுத்தவும் வருமானத்தை உழைக்கவும் இவ் அதிகார சபைகளுக்கு சட்டரீதியான கடமை உண்டு என்பது மிக முக்கிய விடயமாகும். இதனை பெதுமக்கள் அறிந்திருக்க வேண்டியது பிரஜைகள் என்றவகையில் முக்கிய அம்சமாகும்.



இவ்வாறு திரட்டப்படும் நிதியானது சபையால் தயாரிக்கப்படும் வரவுசெலவு திட்டத்தில் வருமானங்களாக காட்டப்படும். இந்நிதி இச்சபைகள் பின்வரும் விடயங்களுக்கு செலவுகளாக மாற்றப்படும்.




திரட்டப்படும் வருமானத்தில் பெரும்பகுதி மீள் எழும் செலவுகளுக்கு செல்வதால் வருமானம் உறுதிப்படுத்தப்படாத சபைகளால் அபிவிருத்தி செயற்பாடுகளை அதிகளவு முன்னெடுப்பதில் பின்னடைவுகள் சந்திப்பது தவிர்க்க முடியாததாகின்றது. ஆயினும் மொத்தவருமானத்தில் 20% ற்கு குறையாது அபிவிருத்தி தேவைக்காக (மூலதன) ஒதுக்குவது சிறந்த வரவு செயற்திட்ட பண்பாகும்

வருடஇறுதில் நிறைவேற்றப்படும் வரவு செலவு திட்டமே இச்சபையின் கட்டுப்பாட்டு கருவியாகும். இத்திட்டத்தின் வழிகாட்டலிலேயே அவ் வருடம் முழுவதும்சபை செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தெரிவுசெய்த அங்கத்தவர்களை கொண்டசபையானது மிக முக்கியமான பெறுப்புக்களை வகிக்கின்றது.

### மநாகரபிதா / தவிசார்களின் கடமையும் பொறுப்பும்


01. சபை கூட்டத்திற்கு தலமை தாங்குதல்
02. கொள்கை வகுப்பிற்கு தலமை தாங்குதல்
03. பிரதான நிறைவேற்றுனராக இருத்தல்
04. சபைக்கும் நிறுவனத்திற்கும் இணைப்பை ஏற்படுத்தல்
05. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக இருத்தல்
06. நிதி நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு கூறல்
07. பொதுமக்களுக்கு பொறுப்பு கூறல்

08. பிரதேச நிகழ்வுகளில் பங்கெடுத்தல்
09. சபையை திறந்து தீர்மானமெடுக்க நெறிப்படுத்தல்
10. முன்மாதிரியான தரம் மதிப்பு மிக்க தலைமைத்துவத்தை பெற்றுக்கொடுத்தல்
11. பணியாட் தொகுதியை நெறிப்படுத்தி மேற்பார்வை செய்தல்
12. சபை நிதி, சொத்து மற்றும் வளங்களை முகாமை செய்தல்
13. பொதுமக்களின் முறைப்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்

**உள்ளூராட்சி உறுப்பினர்களின் வகிபாகம்.**

01. தீர்மானங்களுக்கு கூட்டுபொறுப்பு ஏற்றல்
02. சிற்ற தீர்மானங்களை எடுக்க உதவுதல்
03. வருடாந்த வரவு செலவு திட்டம், அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் ஆகியவற்றில் பங்கெடுத்தல்
04. குழுக்கூட்டங்கள் சபை கூட்டங்களில் பங்கெடுத்து அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கல்
05. பொது மக்களுக்கு பெறுப்பு கூறல்
06. பிரதேச நன்மதிப்பு தரம் பேணும் வகையில் முன் மாதிரியாக இருத்தல்

உள்ளூராட்சி மன்றங்கள் தமக்குரிய அதிகாரங்களை கொண்டு பல்வேறுபட்ட பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுகின்றன.



தெருக்கள் எனும் வகையில்

01. புதிய தெருக்களை தீர்மானித்தல்
02. பயன்படுத்தக்கூடிய தெருக்களை பரமாரித்தல்
03. தெருக்களின் அடுவில் நிர்மானங்களை முறைப்படுத்தல்
04. தெரு எல்லையை வரையறுத்தல்
05. தெரு, தொத்தரவு சேதம், தடைகளை நீக்குதல்

பொது சுகாதாரத்தின் கீழ்

01. திண்ம கழிவு அகற்றல்
02. பெது மலசல கூட பராமரிப்பு
03. உணவுக்கையாள்கை பாதுகாப்பு
04. தாய் சேய்நலன்
05. நோய் தொற்று தடுத்தல்
06. சுகாதாரத்திற்கு ஒவ்வொரு கட்டிடங்களை அகற்றுதல்

இக் குறித்த பணியை செவ்வனே மேற்கொள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கு சபை தவிசாளர் கடமைகளை கையளித்தல் வேண்டும். என்பன முக்கிய விடயமாகும்.

பொது பயன்பாட்டின் கீழ்

01. குடிநீர் வழங்கல்
02. பொது இடங்களை ஒளியூட்டல்
03. சந்தைகளை உருவாக்கல் பராமரித்தல்
04. பூங்காக்களை அமைத்தல்
05. மயானங்களை நிர்மாணித்தல் பேணுதல் என்றவாறு அமையும்

வேறு விடயங்களான விடயப்பரப்பில்

01. நலநோன்பு
02. வறுமை கோட்டிற்கு உட்பட்டேருக்கு உதவுதல்
03. இடருக்குட்பட்டோரை ஆற்றுப்படுத்தல்
04. நூலக சேவை என்றாவறு தொடர்கின்றன.

மேற்சொன்ன விடயங்களில. தெருக்கள், பெதுபயன்பாட்டுசேவை, பொது சுகாதாரம் என்பவை கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணியாகும்.

நலன்புரி சேவை, கல்வி சமய கலாசார பணிகள் சபைகளின் நிதியினையும் முன்சொன்ன பணிகளின் முன்னேற்றத்தை கொண்டு நிறைவேற்றுவது சபையின் தீர்மாணத்தை பொறுத்தாகும்.

இறுதியாக பொதுமக்கள் உள்ளூராட்சி சபைகளுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றார்கள் என்பதையும் அவர்களுக்கான கடமைபொறுப்புக்கள் யாது என்பதனையும் ஆராயும் போது உள்ளூராட்சி மன்றங்களையும் பொது மக்கள் சபையே என்று கூறினால் அது மிகையாகாது. பொதுமக்களால் தெரிவு சொய்யப்படும் தவிசாளர், சபை பங்கு வகிப்துடன் ஏற்கனவோ கூறியது போல் உப குழுக்கள், ஆலோசணை சபையில் பொதுமக்கள் அம்சம் வகுக்க வசதி உள்ளதுடன் நவீன மக்களின் பங்களிப்பு எனும் கருப்பொருள் ஊடாக சமூக கண்கானிப்பு குழுக்களில் பங்கெடுப்பதும் வரவு செலவு திட்ட பார்வையின் போது தமது அபிப்பிரயங்களை தெரிவிக்கவும் தற்போது வசதிகள் உள்ளன. ஆயினும் நடைமுறையில் பொதுமக்கள் பங்களிப்பு என்பது மிக குறைந்தளவிலேயே காணப்படுவது. அவதானத்துக்குரியது. உள்ளூராட்சி மன்றம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் பெதுமக்களுடன் இறுகிய நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தி அவற்றின் அபிலாசைகளை அவர்களிடம் இருந்து பெற்று நிறைவேற்றுவதற்காகும். கிராம அபிவிருத்தியில் பொதுமக்கள் பங்களிப்பு இன்மையால் பல்வேறு பின்னடைவுகள் ஏற்படுவதை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது பொதுமக்கள் தமது சேவைகளை பெறுவதற்காக மட்டும் உள்ளூராட்சி மன்றங்களிற்கு வருகை தருகிறார்கள். அச்சேவைகளை பெறும் வழிமுறைகள், அணுகுமுறைகள், தொடர்பில் இன்றும் விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது. என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

சிக்கிட்டான் சித்தப்பு



"HENRY MISHEL-AMERICAN"

முதல்முறையாக கல்வியில் பரிட்சை முறையைக் கொண்டு வந்து பல கோடிக்கணக்கான மாணவர்களின் நிம்மதியைக் கெடுத்த மாபாதகன் இவ(ர்)ன்தான்··

கருவறை முதல் கல்லறை வரை சகலதேவைப்பாட்டிற்கும் மத்திய நிலையமாக உள்ளூராட்சிசபைகள் விளங்குகின்றன. பெதுமக்கள் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டியது வரவேற்கத்தக்கது.

01. தங்கள் முறைப்பாடுகள் கோரிக்கை தொடர்பில் சபைக்கு தெரிவிக்கலாம். அதற்கான பதிலை எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ளலாம்.

02. தமக்கு தேவையான தகவல்களை பொதுசன தொடர்பு அதிகாரி (PRO) வைஅணுகி அல்லது உரிய தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

03. ஆண்டின் தொடக்கத்தில் துவிச்சக்கர வண்டி உரிமம், வியாபார உரிமம் பெற்றுக்கொள்வதை கட்டாய கடமையாக மாற்றி கொள்ளவேண்டும்.

04. சோலைவரி, ஏக்கர்வரி போன்றவற்றை உரிய காலத்தில் செலுத்துவதை கடைப்பிடித்தல்.

05. கட்டிடங்கள் அமைக்க முன்னர் உரிய அனுமதியை பெறுவதன் மூலம் சட்டரீதியான பாதுகாப்பை பெறுவதுடன் ஏற்படும் இழப்புக்களுக்கு நட்டஈடு கோரவும் சுகாதாரத்தை கடைப்பிடிக்கவும் வசதி ஏற்படுமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

06. அனுமதியின் பின் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியுரிமை சான்றிதழ்களை பெறவேண்டும். என்பதை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

07. சுகாதாரத்திற்கு ஒவ்வாத விடயங்கள், கடைகள், உணவகங்கள், கட்டுமானங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்வது கடமையும் பொறுப்புமாகும்.

08. பொதுமக்கள் தமது கிராமத்திற்கு தேவையான அபிவிருத்திகளை தாங்களே தீர்மாணித்து அவற்றை முன்னுரிமைப்படுத்தி அபிவிருத்திதிட்ட தயாரிப்புகளில் பங்குபெறல்.


09. நிர்மாண புணர்நிர்மாண வேலைகளின் தரம், கணியம் ஆகியன பேணப்படுகின்றது என்பதை கண்கானிக்கலாம்.


10. அடிக்கடி உள்ளூராட்சி சபைகளுக்கு சென்று சபையுடன் உள்ள உறவை வலுப்படுத்தி சிறந்த ஜனநாயகம் பண்புகளை சபையை உருவாக்க முயற்சி செய்யலாம்.

11. உள்ளூராட்சி மன்றங்களால் நிகழ்த்தப்படும் விழாக்கள், விழிப்புணர்வு கருத்தரங்குகள், விசேட வாரங்களில் பங்கு கொண்டு உங்கள் கடமையை நிறைவேற்றலாம்.

12. உள்ளூர் அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றை சபையுடன் இணைந்து வேலைத்திட்டங்களை மேற்கொள்ள பாலமாக அமைந்து பிரதேசத்தை வலுப்பெற செய்யலாம்.

மொத்தத்தில் பொதுமக்கள் உள்ளூராட்சி சபைகள் எவ்வளவு தூரம் நெருங்கிவருகின்றர்களோ அவ்வளவு சிறந்த ஆளுகை □ நல்லாட்சி மிளிரும் என்பதில் ஐயமில்லை




இறுதியாக உள்ளூராட்சி அமைப்புக்கள் சுயாதீனமாக ஓர் உள்ளூர் அரசு என்பதை சகலரும் உணர்ந்து கொள்ளவேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றிலும் நிர்வாக ஏட்டிலும் உள்ள அதிகார சபைகள் தமக்கென தனித்துவம்,கௌரவம், அதிகாரம், ஆட்சியின்றி ஓர் அமைப்பாக நல்லாட்சி விழுமியங்களை பேணுகின்ற அடிமட்டத்தலிருந்து மேல்நோக்கி நவீன மிக்க கருத்திற்கு ஆதாரமாக விளங்கும் ஓர் சபையாகும். பொதுமக்கள் சபை, சபை நிர்வாகம் ஆகிய மூன்று ஆதாரங்களும் சமநிலைபெற்று உழைப்பதன் மூலம் உள்ளூராட்சி ஓர் நல்லாட்சியாக வளரும் என்பதில் ஐயமில்லை

உசாத்துணை :- இலங்கை உள்ளூராட்சி முறைக்கு ....
சிறந்த உள்ளூராட்சி
உள்ளூராட்சி மாகாண அமைப்பு

# பாசப்பிணைப்பு (சிறுகதை)

ம.ஜெனிற்றரா
சென்யூட் லேன், இளவாலை

ஐந்து மணியாகி விட்டதை அலாரம் அடித்து அறிவித்தது.' தலைமாட்டில் இருந்த மணிக்கூடு ஆனாலும் ....... துயில் எழும்ப மனம் இன்றி மீண்டும் புரண்டு படுத்தான் அன்பு.

மனதில் விரக்தி, சோகம், இயலாமை என்ற எத்தனையோ உணர்வுகளின் தாக்கம் இருக்கும் போது எப்படித்தான் எழுந்து அன்றாட கடமைகளை ஆரம்பிக்க முடியும்? போர்வையை கழுத்து வரை இழுத்துப் போர்த்திக் கொண்டான்.

குசினியின் பக்கம் கட .... முடா .... என்ற சத்தம் செல்வி எழுந்து விட்டாள் என்பதை உணர்த்த மெதுவாக எழும்ப முயற்சித்தான் அன்பு

இயலாமை இதயத்தை வருத்தி எதையும் செய்ய முடியாததாய் இருந்தாலும் தனது இளைய தம்பி செல்வனும் ஆசைத் தங்கை செல்வியும் பாடசாலை செல்ல சாப்பாடு செய்ய வேண்டுமே என்ற அன்றாட கடமை உணர்வு உந்திக் தள்ள துள்ளி எழுந்து காலைக் கடன்களை முடித்தான்.

இருபத்தியாறு வயது நிரம்பிய அன்பு அழகானவன், சகோதரர்களில் உயிரையே வைத்து தாயாக தந்தையாக நின்று வழிநடத்துபவன். எந்தக் கெட்ட பழக்கமோ, கெட்ட சினேகிதமோ இல்லாதவன் ஊருக்குள்ளே மதிப்பும் மரியாதையும் மிகுந்தவன். தான் நடத்தும் சிறிய பெட்டிக் கடையில் ஞாயமான வியாபரத்தில் ஈடுபட்டு பெரியவர்களின் ஆசி பல பெறுபவன்.

மாபெரும் யாழ்ப்பாண இடம் பெயர்வில் மனைவியையும் நான்கு குழந்தைகளையும் அரியாலையில் விட்டு விட்டு வீட்டைப் பார்த்து வர சில்லாலைக்கு வந்த தந்தை மீண்டும் திரும்பி வரவில்லை. அப்போது அன்புக்கு 18 வயது A/L படித்து விட்டு நின்றவன் அப்படியே படிப்பை நிறுத்தி விட்டு குடும்பத்தைக் காக்கும் தலை மகனாக கிடைத்த வேலையை செய்து தாய்க்கும் சகோதரர்களுக்கும் ஒரு நேர உணவை வயிறு நிரம்ப கொடுக்க அயராது உழைத்தான்.

மீண்டும் திரும்பி சொந்த ஊர் வந்து தனது தம்பி அரசன், செல்வன், செல்வியின் படிப்பில் மிகுந்த அக்கறை காட்டி வளர்த்து ஆளாக்கினான்.


தனது மூத்த மகனின் பொறுப்புணர்ச்சியிலும் அன்பிலும் கரைந்து கணவனை இளந்து விட்ட கவலையைக் கூட மறந்து வாழ்ந்த பவழத்திற்கு வயிற்றில் அக்கடி ஒரு வலி அதைப் பெரிதாக நினைக்காது விட விதியின் விளையாட்டில் இரண்டு வருடத்தின் முன் இறைவனடி சேர்ந்தாள் பவழம். கதி கலங்கி போய் நின்ற குடும்பத்திற்கு அன்று முதல் அன்பு தாயாகவும் மாறினான்.

இக்கால நாகரீக உலகின் நாகரீகத்தில் அமிழ்ந்து பெற்றவர்களின் பணத்தையும் கௌரவத்தையும் கரைத்து அழித்து ஆடம்பரத்துக்குள் அமிழ்ந்து பல வழிகளிலும் அழிந்து நாசமாகி நாதி கெட்டு போய் நிற்கும் இளைய தலைமுறைக்குள் இவன் மட்டும் வித்தியாசமாய் .............

காலையில் காலை உணவு செய்து மூவரையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, தான் நடத்தும் பெட்டிக்கடைக்கு சைக்கிளில் ஓடிச்சென்று சாமான் எடுத்து வந்து வியாபாரத்தோடு மதிய சமயலையும் கவனித்து எல்லோரின் உடுப்புகளையும் கழுவிப் போட்டு, கனிவாய்". தன் உடன் பிறப்புக்களின் தேவைகளை எல்லாம் நிறைவேற்றி வைக்கும் அன்பு, தன் தம்பிகளின் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் தன் சுமைகளை மறந்து... சிரிப்பான்... மகிழ்ந்து போனான்.

கணித பிரிவில் தன் தம்பி அரசன் விசேட சித்தி பெற்று போரதனைப் பல்கலைக்கத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளான் என்பதை அறிந்து பூரிப்பில் மகிழ்ந்து போனவன் போரதனைக்கு அனுப்பும் நாள் நெருங்க அந்த இடத்தில் தம்பியை தனியே விடாதே அங்கபயம் தம்பி... என்று சிலர் அவன் யோசனையை இளறிவிட... "அங்கு போற தெண்டால் செலவுகளுக்கு கனக்க பணம் வேணுமே...." என்ன வேறு சிலரும் அவனைக் குளப்பி விட தூக்கம் இல்லாது இரவுகளைக் கழித்து வந்தான் அன்பு.

அந்த நேரம் பார்த்து அரசனைத் தேடி வந்த அவன் நண்பன் ஒருவன் "இனிமேல் கொம்பியூட்டர் இருந்தால் தான் மச்சான் உனக்கு படிக்க இலகுவாக இருக்கும். என்னவாம் அண்ண, வேண்டித் தருவாராமோ?" நக்கலாக கேட்க.... என்னடா இவன் சும்மாவே கவலைப்படும் அண்ணனுக்கு இது வேறு புதுக்கவலை எனநினைத்த



அரசன் "டேய்... என்னடா நீ....? என்று நண்பனை அடக்கி விட்டு வெளியே அழைத்துக் சென்று "றமேஸ் இனிமேல் அண்ணனுக்கு முன் இப்பிடி கதச்சுப் போடாதை பாவமடா அண்ணன் அப்பாட உழைப்பிலும் வெளிநாட்டுக் காசிலும் வாழுற உங்களுக்கு எங்க வேதனைகள் இயலாமைகள் பற்றி உணர்றது கொஞ்சம் கஸ்ரம் தான் ப்ளீஸ் இனிமேல் இப்பிடி கதச்சுப்போடாத போய் வா என்று நண்பனுக்கு பாசமுள்ள தம்பி என்பதை கதையில் காட்டி அனுப்பி விட்டு உள்ளே வந்தான். அரசன்.

பேராதனைக்கு அனுப்பவே பணம் பற்றாக் குறையோடு திண்டாடிக் கொண்டிருக்கும் அன்பு "தம்பி... றமேஸ்... சொன்னது... கொம்பியூட்டர் ,.... இல்லாட்டி படிக்க கஸ்ரமாடா... அ..? பரிதாபமாக கேட்ட அண்ணனை நிமிர்ந்து பார்த்தான். அரசன்

இளமைப் பருவத்திற்கே உரித்தான துடிப்பும், கறுப்பு என்றாலும் அழகும் முத்து முத்தான பற்களும் பளீரிடும்சிரிப்பும் அண்ணனின் ஓரக்கண் பார்வைக்காக எத்தனை பேர் ஏங்கிக் கொண்டு இருக்க பருவத்தின் ஆசைகளை எல்லாம் இருதயத்தின் ஓரத்தில் ஒதுக்கி விட்டு பிறக்கும் போதே பொறுப்புக்களை சுமக்க முடிவு செய்து பிறந்தது போல் எங்கள் அண்ணன் பாவம்.. ஒரு புது உடுப்பு எடுக்காது... தனக்கென்று தனிப்பட்ட விருப்பு இருப்பதாக காட்டிக்கொள்ளாது எப்படி இப்படி வாழ முடிகின்றது. அண்ணனால்... அண்ணனைப் பார்த்து பார்த்துக் பூரித்துப் போனான் அரசன்.

அந்த கள்ளம் கபடமில்லாத தம்பி என்னசொல்லப் போகிறானோ எனப்பயந்து அண்ணன் .... "என்னதம்பி அவன் சொன்னது உண்மைதானே..... நான் என்ர தலையை அடைவ வச்சு எண்டாலும்....? "அண்ண... என்ன நீ? அவன் விசரன் இவ்வளவு படிச்சுப் பாஸ்பண்ணின நான் இனி கம்பசுக்கு போய் படிக்கிறதா கஸ்ரம்...?" சிரித்தபடி கேட்டான் அரசன்.

"இல்லத்தம்பி... எனக்கு தெரியும் இஞ்சினியறிங் படிக்கிற தெண்டா எந்தப் பெரிய .படிப்பு... அதுக்கு கொம்பியூட்டர் ... கட்டாயம் தேவை நான் தான் இத தீர மறந்து போனன்" மீண்டும் கவலையோடு புலம்பினான். அன்பு.

"அண்ண.... கம்பசில லைபிறறி இருக்கும் அங்க நிறைய கொம்பியூட்டர் இருக்கும் அங்க வடிவாய் படிக்கலாம். நீ கவலைப்படாதை அண்ண தமையன் கவலைப்படுவதை தம்பியால் தாங்க முடியவில்லை உண்மையா? அங்க படிக்கலாமா? அப்பாடா இப்பதான் நின்மதியாக் கிடக்கு அப்ப போறத்துக்கு காசு றெடிபண்ணினாசரி என... ஆனாலும் ஒரு வருசம் பொறு நான் எப்பிடியும் என்ர தம்பிக்கு கொம்பியூட்டர் வாங்கித் தருவன். அண்ணன், இருக்கிறர் கவலைப்படாம இருந்து படிக்க வேணும்" என... சிறு பிள்ளையை சொக்கா வேண்டித்தறோன்

எனத் தேற்றும் தாய் போல அரசரனை அன்பு தேற்றுவதை அங்கே வந்த செல்வன் கண்டு சிரித்தான்.

அண்ண என்ன வேண்டித் தாராராம்…அ… அண்ண எனக் கொண்டு அவசரமா வேண்டித்தருவேணும் வேண்டித் தாறீங்களே…? அரசனைப் பார்த்து கண்ணனை சிமிட்டி விட்டு அன்புவிடம் கேட்டான் செல்வன். A/L முதலாம் வருடம் விஞ்ஞான பிரிவில் படிக்கும் அவன் ஓர் சாப்பாட்டு பிரியன் விதம் விதமாய் சாப்பிட பிடிக்கும் ஆனால் அண்ணனைக் கஸ்ரப்படுத்துவது பிடிக்காமல் ஐயோ… ஒரு நல்ல அண்ணி வந்தா சமைச்சு தருவவே எனப் புலம்பி அன்புவிடம் செல்ல அடி வாங்குவது நாளாந்தம் நடப்பது… எனவே செல்வன் என்ன கேட்கப் போகிறான் எனத்தெரிந்து அப்போது தான் குளித்து விட்டு வந்த செல்வியும் அரசனும் சிரிக்க ஆரம்பிக்க….. பொறுக்கமுடியாத அன்பு… "டேய் சாப்பாட்டு ராமா….. புட்டவிச்சு கருவாடு பொரிச்சுவச்சு இருக்கு வாங்கோ சாப்பிடுவம் என்றபடி எழுந்தான் அன்பு.

"அண்ண நழுவப் பார்க்கிறார் பிடிசெல்வன்" என்றாள் செல்வி. தம்பி நீ கம்பசாலவர செல்வனும் A/L பாஸ்ப்பண்ணிப் போடுவான் என்ற தம்பிமார இஞ்சினியரா டொக்டரா ஆக்கி என்ரதக்கச்சியையும் படிப்பிச்சு ஒரு… நல்ல… இடத்தில….

"அண்ணா…. ("பொய்க்கோபம் காட்டிய செல்வியை அணைத்து…)" நல்ல இடத்தில் வீடு கட்டிக்குடுப்பன் எண்டல்வோ சொல்ல வந்தனான் என்று அன்பு முடிக்க எல்லோரும் சிரித்தார்கள். இந்த சந்தோசங்களைக்காண அம்மா இல்லை அதுதான் என்ர கவலை…" என்ற அன்புவின் குரல் கரகரத்து ஒலிக்க சூழ்நிலை இறுக்கமானது.

அண்ண "தகப்பன்ற உழைப்பு தியாகம், தாயின்ர அரவணைப்பு, ஆசைகள் கனவுகளை உணராம இந்தக் காலத்தில் எத்தனையோ பிள்ளைகள் இருக்கலாம். ஆனா…. தந்தைக்கு மேல் இருந்து உழைக்கிற உன்ர வேர்வைக்கும்…. தாய்க்கு தாயா இருந்து எங்களை பார்த்துக் கொள்ளுற உன்ர பாசத்துக்கும் நிச்சயம் நாங்கள் பெரியாக்களாக படிச்சு முன்னேறி எங்கட ஆயுள்முழுக்க உனக்கு எந்தக் குறையும் இல்லாம பார்த்துக் கொள்ளுவம் இது நிட்சயம்" என்று அரசன் கூற அதை ஆமோதிப்பது போல் தீவிரமாக நின்றனர். செல்வியும் செல்வனும்….

அப் போதும் "எனக்கு" என்றவாறு வாங்கோ சாப்பிடுவம்" என்று எழுந்த அன்புவை "அப்ப நான் கேட்டது.. எதுக்கும் சின்னண்ணா நீ கம்பஸ்சால வா… பிறகு இவர் என்னசாட்டு சொல்லுறார் எண்டு பாப்பம்? என்ற அரசனை "டோய் வந்தனெண்டால் உதை விழும்… என்று கூறி அன்பு சிரிக்க அந்த அன்பான அண்ணனின் சொல்லுக்கு அமைந்து சமையலறை நோக்கி நடந்தனர் எனயவர்கள்.

யாவும் கற்பனை அல்ல

# விடியல்

ச. திவ்வியா
மாணவி
இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்



காலையானதும்
கோயிலின் காண்டாமணி ஓசையும்
சேவல்களின் கூவும் சத்தமும்
குயிலின் கூ கூ கூ ஓசையும்
காதில் ஒலிக்க மறக்கவில்லைல்
இவையனைத்தினதும் ஓசையினால்
என்னவோ
மலர்ந்து விடுகின்றன பூக்கள்
உதித்துவிடுகின்றான் சூரியன்
மறைந்துவிடுகின்றது கொட்டும் பனி
ஆனாலும்
ஏனோ தெரியவில்லை
விடியல் மறுக்கப்பட்டு
தூங்குகின்றன
நல்ல மனங்கள்

ஜெ. யதுசன்
மெய்கண்டான் மகாவித்தியாலயம்

# அழகு



வீழ்வதில் அழகு
நீரருவியாய் இருந்தால்
தலை தாழ்வதில் அழகு
நெற்கதிராய் இருந்தால்
தொடர் தோல்விகள் அழகு
அலைகடலாய் இருந்தால்
சிதறல்கள் அழகு
விண்மீன்களாய் இருந்தால்
எங்கும் அழகு எதிலும் அழகு
அழகாய் இருக்கும் எல்லாவற்றையும்
அழுக்காக்கி விடாதே மானிடா!!

# யா/இளாவலை மெய்கண்டான் மகா வித்தியால வரலாறு

திருமதி இ.யோகலிங்கம்
உபஅதிபர்
இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்

பாடசாலையின் பெயர் : யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
முகவரி : இளவாலை வடக்கு இளவாலை
அதிபர் : திரு.அ.இரங்கநாதன் SLPS 2 II
கிராம சேவையாளர் பிரிவு : J/221 இளவால வடக்கு
வகை : 1C
கோட்டம் : தெல்லிப்பழை
வலயம் : வலிகாமம்
தொகை மதிப்பு இலக்கம் : 09123
பரீட்சை இலக்கம் : 11096
பாடசாலை இலக்கம் : 1013006
தொலைபேசி இலக்கம் : 021-221-1945
மின்னஞ்சல் முகவரி : immv1922@gmail.com
ilavalaimeihandan@hotmail.com
மகுட வாசகம் : வாழக்கல்மின்
நோக்கக் கூற்று : சமநிலை ஆளுமையுள்ள நிறைவான பிரஜைகளை உருவாக்கல்
பணிக்கூற்று : வளரும் உலகின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய சமநிலை ஆளுமையுள்ள கல்வி, கலை, ஒழுக்ம் நிறைந்த நற்பிரஜைகளை உருவாக்கல்.

1922 அம்பலவர் வளவில் ஆரம்பம்
நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினம்
தலைமை ஆசிரியர் திரு.ச.சிதம்பரப்பிள்ளை

1926 சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டது
மாணவர் தொகை 150, ஆசிரியர் 05
28 பரப்புக்காணியில் 90X20 அடிக் கட்டடம் ஏழூரரின் மனைவியின் தாலியில் அமைக்கப்பட்ட நிரந்தரக்கட்டடம்
தலைமை ஆசிரியர் திரு.வே.கனகசபாபதி

1933 - 1941 தலைமை ஆசிரியர் திரு.வீ.கணபதிப்பிள்ளை

1935 கனிஸ்ட இடைநிலைப்பாடசாலையாக தரமுயர்வு

1937 தனிக்கிணறு அமைக்கப்பட்டது.

1939 சிரேஸ்ட பாடசாலை

1942 நெசவுப்பாடநெறி ஆரம்பம்

1942 - 1952 தலைமை ஆசிரியர் திரு.க.சுப்பிரமணியம்

தலைமை ஆசிரியர் திரு.பொ.பொன்னம்பலம்

தலைமை ஆசிரியர் திரு.சீ.சீனித்தம்பி

தலைமை ஆசிரியர் பண்டிதர் க.மயில்வாகனம்

1950 - 1970 வரை ஆண்டு தோறும் சஞ்சிகை வெளியீடு

1952 - 1966 தலைமை ஆசிரியர் திரு.ச.சுப்பையா

1955 100X20 அடி கொண்ட கனகசபாமண்டபம் அமைப்பு

1959 - 1973 அதிபர் திரு.வ.செல்லையா

1966 தலைமை ஆசிரியர் திரு.க.நவரத்தினம்

1973 ஒன்றிணைந்த முன்னோடிப் பாடசாலையாகத் தெரிவு

மலைமகள், அலைமகள் கலைமகள் என மூன்று இல்லங்கள் அமைத்து இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது.

ஸ்தாபகர் ஏழூரருக்கு நினைவு மலர் வெளியிடப்பட்டது.

1975 பஞ்சவடி இசை நாடகம் முதற்பரிசு

1973 - 1975 அதிபர் திரு.மு.சிவராசரத்தினம்

1976 இலங்கை முழுமையும் கல்விச்சுற்றுலா

மகுட வாசகம்:வாழக்கல்மின்

1976 ஆரம்பக்கல்வி முன்னோடி வேலைத்திட்டம்

1976, பாதுகை பெற்ற பரிசு அகில இலங்கை நாடகப் போடடியில் வெற்றியீட்டியமை

1977 கர்வபங்கம் அகில இலங்கை நாடகப் போடடியில் வெற்றியீட்டியமை

1978 பொன் விழாவும், பொன்மலர் வெளியீடும்

மாணவர் தொகை 366 ஆசிரியர் 14

1979 பெண்பிள்ளைகளுக்கு வெள்ளை நிறச் சட்டையும் மருன் நிறத்தில் மஞ்சள் கோடிட்ட ரையும் அறிமுகம்

1977 கனிஸ்ட பிரிவு கரப்பந்தாட்டம் மாவட்டச் சம்பியன்

1977 அகில இலங்கைச் சிறந்த நடிகன் விருது செல்வன் உ.சந்திரகுமாரன்

1979 பலாலி ஆசிரிய கலாசாலையால் நடாத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் செல்வன் சோ.சத்தியசீலன் முதலாம் இடம் பெற்றுக்கொண்டார்.

1979 19 வயதுப் பெண்கள் உயரம் பாய்தல் மாவட்ட மட்டத்தில் முதலிடம் செல்வி.வ.சகுந்தலா

1979 நூலகம் அமைப்பு

1980 மாசி 1 மகா வித்தியாலயமாக தரமுயர்வு

1981 அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் வெற்றி செல்வன் க.தருமு

1982 முதல் முறையாக க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டு செல்வி கந்தசாமி சாந்தினி பல்கலைக்கழகம் தெரிவானார்.

1985 ஞானாமிர்த மண்டபம் அமைப்பு.

1986 ஏழூர் அரங்கு அமைப்பு

1987 செல்வன் கு.புனிதகுமார் இவருடைய திறமையைக் கருத்தில் கொண்டு இவருக்கு இரட்டை வகுப்பேற்றம் வழங்கப்பட்டது

1988 விளையாட்டுமைதானம் (28 பரப்பு காணி) நிறுவுநரின் செல்வமகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் அவர்களின் அன்பளிப்பு

தாமரைத்தடாகமும் சரஸ்வதி சிலையும் திரு.சீ.இராசா குடும்பத்தின் அன்பளிப்பு

1991 காத்தவராயன் கூத்து மாகாண மட்ட முதற்பரிசு

மாணவர் தொகை 996 ஆசிரியர் 29

1992 யூன் 11 ல் இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இயங்கியது.

1992 ஆகஸ்டில் மீண்டும் இடம்பெயர்ந்து மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியது.

1993 செப்ரெம்பர் 1 இல் மானிப்பாய் மெமோறியல் வளாகத்தில் காலை நேரப் பாடசாலையாக இயங்கியது

1993 மாதா பிதா குரு தெய்வ வழிபாடு ஆரம்பம்

1995 அக்டோபர் 30 இடம்பெயர்ந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்த ஏழு 7 பாடசாலைகளுக்கு தலைமைப் பாடசாலையாக இயங்கியது.

1995 மெய்யொளி - 4 சஞ்சிகை வெளியீடு அனைத்துலக மகளிர் தினம்

1996 மீண்டும் மானிபபாயில் இயங்கியது

1997 பெப்ரவரி 2 ம் திகதி முதல் சொந்த இடத்தில் இயங்கியது.

1997 ஸ்தாபகர் ஏழூரர் சிலை அமைப்பு, நிறுவியவர் நூற்றாண்டு விழா நிகழ்வு

1998 பவளவிழா

1974 - 1998 சைவப்புலவர் அதிபர் திரு.சு.செல்லத்துரை

1999 கிருபாசக்தி மண்டபம் அமைப்பு

2001 பாண்ட் வாத்தியம் பெறப்பட்டது

2003 ஒலிபெருக்கி அன்பளிப்பு திருமதி கிருபாசக்தி தர்மதாசன்

2004 உலக உணவுத்திட்டம் அமுலாக்கம்

1998 - 2004 அதிபர் திரு.அ.பேரம்பலம்

2007 பல்லூடக அறை அமைப்பு

2008 கணனி அறை அமைப்பு

Photo copy இயந்திரம் பெறப்பட்டது

2009 நவீன நூலக அமைப்பு

செயற்பாட்டறை அமைப்பு

நிறுவுநரின் செல்வ மகளின் நிதி அனுசரணையுடன் புகழுறு மெய்கண்டானின் பழைய மாணவர்களின் விபரங்களை உள்ளடக்கி நிறுவுநரின் அறுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடுவூர்ப்பழுத்த நன்மரம் நூல் வெளியீடு

மாகாண மட்டத்தில் 19 வயதின் கீழ் ஆண்கள் கபடி அணி வெற்றி

சைவபரிபாலனசபைப் பரீட்சையில் செல்வி.பா.சோபனா தங்கப்பதக்கம் பெற்றார்.

தேசிய மட்டத்தில் தென்மோடிக் சிந்து நடைக்கூத்து வெற்றி

2009 மாகாண மட்டத்தில் கபடி அணி வெற்றி

சைவபரிபாலனசபைப் பரீட்சையில் செல்வி.பா.சோபனா தங்கப்பதக்கம் பெற்றார்.

2009 தேசிய மட்டத்தில் காத்தவராயன் சிந்து நடைக்கூத்து வெற்றி

2011 நிறுவுநரின் செல்வ மகளினால் தர்மசக்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது

ஆண்டு மலராக மெய்யொளி நூல் வெளியீடு ஆரம்பம். பழைய மாணவன் திருவாளர்.சி.கௌரிபாலன்(கனடா) அவர்கள் மெய்யொளி நூல் வெளியீட்டிற்கான ஒரு பங்கு நிதியினை வருடந்தோறும் அன்பளிப்புச செய்து வருகின்றார்.

Multimice அமைப்பு

2011, 2012 மாகாண மட்டத்தில் பெண் கபடி அணியினர் வெற்றியீட்டியுள்ளமை

2011, 2012 கரப்பந்து ஆண்கள் அணியினர் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியமை

2011 கராத்தே பெணகள் அணியினர் தேசிய மட்டத்தில் பங்குபற்றியமை

2005 – 2012 அதிபர் திரு.ச.சிவானந்தராசா

2013 நிறுவுநரின் செல்வ மகளினால் தர்மசக்தி நிதியம் I, II ஸ்தாபிக்ப்பட்டது

2013 கபடி பெண்கள் அணி, ஆண்கள் அணி மாகாண மட்ட்த்தில் வெற்றியீட்டியுள்ளமை

2014 மாணவர் தொகை 355 ஆசிரியர் தொகை 23

2014 வசந்தபுர வாழ் மக்களால் வசந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது

2014 உலக உணவுத்திட்டத்திற்கு என ரூபா நான்கு இலட்சம் நிலையான வைப்பிலிடப்பட்டது.

நாவலர் நற்பணி மன்றத்தினால் நாவலர் சிலை அமைப்பு

பின்புறச் சுற்றுமதில் அமைப்பு

விஞ்ஞான அறை ரூபா 122500.00 செலவில் புனரமைப்பு

2012 - இன்று வரை அதிபர் திரு.அ.இரங்கநாதன்

☙☙☙ **நேத்திரத்தின் அடுத்த வீச்சில்**
**இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி வரலாறு**

# நாட்டின் ஜனாதிபதி

மாணவன்
புனிதஹென்றியரசர் கல்லூரி.



ஒரு நாட்டிற்கு ஜனாதிபதி என்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். அந்த வகையில் நம் நாட்டில் ஜனாதிபதியானது 1970 ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஜெ.ஆர்.ஜெயவர்த்தன முதல் ஜனாதிபதியாக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார். இதன் படி இலங்கை குடியரசு ஓர் ஜனாதிபதி ஒருவரைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் அவரே அரசின் தலைவர் அரசாங்கத்தின் தலைவர் ஆட்சித்துறையில் தலைவரும் ஆவார்.

ஜனாதிபதி 6 வருடத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவார். இவர் வாக்கு முறை மூலம் தெரிந்தெடுக்கப்படுவார். எனினும் ஒருவர் இரு தடவை மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என அரசியல் யாப்புக் கூறுகின்றது. எனினும் 2010ம் ஆண்டு யாப்பின் படி 18 ம் திருத்தத்தின் இரு தடவை ஜனாதிபதியாக இருக்கின்ற ஒருவர் 3வது தடவையும் அப்பதவிக்குப் போட்டியிடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒருவர் எத்தனை தடவையும் போட்டியிடலாம்.

**ஜனாதிபதியாக தேர்தலில் போட்டியிடுவதற்கு அவருக்கு தேவையான தகமைகள் சில பின்வருமாறு.**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேர்தல் இடாப்பில் தன்னுடைய பெயரினைப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
- 30 வயதினைப் பூர்த்தி செய்து இருத்தல் வேண்டும் ழச முன்னர் எப்போதாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
- எந்தவித கிருமினல் குற்றச் சாட்டிலும் ஈடுபடாதவராக இருத்தல் வேண்டும்.
- அங்கிகரீக்கப்பட்ட அரசியல் கட்சியின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி சர்வஜன வாக்குரிமை மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுவர். அந்த வகையில் ஆரம்பத்தில் 21 வயதிற்கு மேற்பட்ட இருபாலரும் வாக்களிக்கலாம். பின் இன்றைய காலத்தில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

பாரளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் போது வாக்களிப்பு முக்கியமானதாகும். அந்த வகையில் வாக்களிப்பு 2 கட்டங்களாக நிகழ்த்தப்படும்.

1. சுயேட்சைக் குழுவிற்கான வாக்கு.
2. விடுப்புத் தேர்வு வாக்கு

இங்கு பட்டியலில் கட்சிக்கு இல்லாது சுயேட்சைக் குழுவிற்கு வாக்களிக்கின்ற அதேவேளை தான்விரும்பும் 3 வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும் படி வாக்காளர்கள் வேண்டப்படுவார். கட்சிக்கு அல்லது குழுவிற்கு மட்டுமே வாக்களித்து வேட்பாளருக்கு வாக்களிக்கா விடினும் அவ்வாக்கு செல்லுபடியான வாக்காக கருதப்படும் ஆனால் கட்சிக்கு வாக்களிக்காது விருப்பு இலக்கங்களுக்கு வாக்கு அளிப்பின் அது செல்லுபடியற்ற வாக்காக கருதப்படும்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர். பதவி ஏற்கும் முறை பிரதம நீதி அரசனின் முன்னிலையில் பதவிப்பிரமானத்தை எடுத்தல் வேண்டும். இவ்வாறு பிரமானத்தை எடுக்கும் போது முன்னைய பதவிகள் ஏதாவது வகித்திருப்பின் அவற்றை துறத்தல் வேண்டும். ஜனாதிபதி தேர்தல் முடிவு வெளியிடப்படும் வேளையில் ஜனாதிபதியாக வரக்கூடியவர் இறந்தால் ஆணையாளர் முடிவினை வெளிப்படுத்தாது புதிய வாக்கெடுப்பினை நடாத்தவேண்டும்.

நாட்டின் ஜனாதிபதிக்கு காணப்படும் அதிகாரங்களாவன சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள் காணப்பட வேண்டும். நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள் காணப்பட வேண்டும். நிர்வாகத் துறை தொடர்பான அதிகாரம் காணப்பட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி எல்லா அதிகாரங்களுக்கும் பெறுப்பாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதியின் பதவி வெற்றிடம் ஆகும். சந்தர்ப்பங்கள் சில உள்ளன. அவற்றுள் முக்கியமானவை பதவிக் காலத்தில் இறத்தல், பதவியினை இராஜினமா செய்தல், பதவியில் இருந்து நீக்கப்படல் இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தை இழத்தல் போன்ற காரணங்களால் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும். இவ்வாறு வெற்றிடமானால் பிரதமர் பதில் ஜனாதிபதியாக கடமையாற்றுவர்.

ஒரு ஜனாதிபதி பதவியை நீக்கும் முறையாவன ஒரு ஜனாதிபதிக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரனை பாரளுமன்றத்தின் முன்னால் நிறைவேற்றினால் அவரைப் பதவியில் இருந்து நீக்கலாம். அவற்றுள் உடல் வளம், பலவீனம், அதிகாரத்தை துப்பிரயோகம், தேசத்து துரோகக் குற்றம், இலஞ்ச ஊழல் குற்றம் யாப்பை வேண்டுமென்றே மாற்றிய குற்றம் என்பன பல காரணத்தால் ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்படுவார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி தனது பொறுப்பக்களையும் கடமைகளையும் ஒழுங்காக செய்து தன் பதவிக் காலத்தினை பூரணமாக நிறைவு செய்ய வேண்டும்.

# தமிழர் படகு சரித்திரம்

செ.வினோதன்
இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி.



படகு மக்கள் என்று சொன்னால் ஒரு காலத்தில் வியட்நாம் மக்களே நினைவுக்கு வந்தனர். வியட்நாம் மக்கள் நினைவு வருவதற்கு காரணம் வியட்நாம் போரில் 1975ம் ஆண்டு அமெரிக்கா தோற்கடிக்கப்பட்டதன் பிறகு ஆயிரக்கணக்கான வியட்நாமியர்கள். (பெரும்பாலனவர்கள் சீன வம்சாவாளிகள்) தமது சொந்த நாட்டை விட்டு வெளியேற நிர்பந்திக்கப்பட்டனர். பலவீனமான படகுகளில் பயணம் செய்த அவர்கள் ஆழ்கடலில் அனுபவித்த அவலங்கள் தொடர்பான விடயங்கள் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றன. அன்றைய வியட்நாமியர்களாக இன்றைய இலங்கை தமிழரின் படகு வழியான பயணம் அமைந்து இருக்கின்றது. இலங்கைத் தமிழிரின் படகு சரித்திரங்கள் எண்ணுக் கடங்காதவையாகவே உள்ளது.

1983 கறுப்பு ஜீலைக்கு பிறகு இலங்கை தமிழரின் படகு சரித்திரங்கள் தீவிரமடைந்துள்ளன. பாக்கு நீரிணையை கடந்து படகுகளில் தமிழகத்துக்கு அகதிகளாக செல்லும் மக்களின் அவலங்கள் விபரிக்க முடியாதவையாகும். சொந்த மண்ணில் உயிருக்கு பயந்து படகில் சென்று கடலில் மாண்டு போனவர்களின் எண்ணிக்கை சரிவர இன்னமும் கூற முடியாது உள்ளது. பழைய றோமானியர்களினால் இஸ்ரேலில் இருந்து விரட்டப்பட்டதன் பின்னர் உலகம் பூராவும் அலைந்து திரிந்த புராதன யுதர் போன்று இன்று இலங்கை தமிழர்கள் பல நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழர்கள் அதிகமாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்து வருகின்றனர். புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையாக 10 இலட்சத்துக்கும் மேலானோர் உள்ளனர் என்பதில் சந்தேகம் இல்லை. போர் நிலை முடிவடைந்த பொழுதிலும் தமிழரின் அகதி வாழ்க்கை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இன்றைய செய்தி ஊடகங்களை நோக்குவோமேயானால் தமிழரின் படகு சரித்திரங்களே காணப்படுகின்றது. தென் கிழக்காசிய நாடு ஒன்றில் இருந்து அவுஸ்ரேலியா நோக்கி சிறிய கப்பலில் சென்று கொண்டிருந்த சுமார் 260 இலங்கைத்

தமிழர்களை இந்தோனேசியாவில் படையினர் இடைமறித்து கைது செய்தனர். இவ்விடயம் பெரும் ஓர் சர்ச்சைக்கான விடயமாக காணப்பட்டது. இதன் மூலமே தான் இலங்கையின் தமிழர் படகு வழி சரித்திம் வெளிச்சத்துக்கு வந்தது என கூறுவதில் நியாயம் உண்டு.

மற்றும் கொலம்பிய கரையோரமாக இலங்கை தமிழர்கள் என்று நம்பப்படும் 76 பேருடன் வந்து கொண்டிருந்த படகினை கனடிய பொலிஸார் கைப்பற்றியிருப்பதாக செய்திகள் வெளியாயின. இச்சம்பவத்தினை நோக்குமிடத்து ஆசிரியர் எனக்கு கூறிய சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது. 1980 நடுப்பகுதியில் கனடிய நாட்டின் நியூஸ்லாந்து கரையோரமாக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 155 பேர் இரண்டு படகுகளில் நெருக்கியடித்து கொண்டு வந்து சேர்ந்த சம்பவம் ஞாபகம் வருகின்றது. மற்றும் அண்மைக்காலத்தில் பரபரப்பினை ஏற்படுத்திய ஒரு பயணத்தில் இலங்கை அகதிகள் 5 நாட்கள் கடலிலே தத்தளித்தனர். இவ்விடயம் உலகம் பூராகவும் பரபரப்பு செய்தியாக இருந்து. இலங்கையின் உள்நாட்டு போர் தீவிரமடைய இலங்கையின் உள்ளக விடயம் வெளி விடக்கூடாது. என்பதற்காக அன்பு கருணை பற்றி உபதேசம் செய்யும் விக்குமாரர்கள் இவர்களை கனடிய அரசாங்கம் ஏற்ககூடாது. அன்று கூறியிருந்தனர். இவ்வாராக தமிழரின் படகு பயணங்கள் காணப்படுகின்றது.

எனக்கு தெரிந்த ஒரு சொந்தக்காரர் தமிழகத்திற்கு செல்லும் போது தான் பட்ட கஷ்டங்களை விபரித்து இருந்தார். அவர் கூறுகையில் இவ் பயணத்திற்காக தனது வீடு, சொத்து, நகைகளை விற்று பயணம் செய்தாகவும் தன்னைப் போல பலர் அவ் படகில் இருந்ததாகவும் கூறி இருந்தார். நடுக்கடலினை அடைந்த போது காற்றின் தன்மை அதிகரிக்கவே சிலர் கடலினுள் வீழ்ந்ததாகவும் மற்றும் இதயநோய் காரணமாக அவதிப்பட்ட வரை நீரில் தள்ளி விட்டதாகவம் பல விதமான உணர்ச்சி பூர்வமான சம்பவங்கை கூறியிருந்தார். ஆனால் குறிப்பிட்ட எல்லையின் பின்னர் இந்திய படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு மீண்டும் இலங்கைக்கு தாங்கள் அனுப்பப்பட்டதாகவும் கூறி இருந்தார். இவ்வாறான அவலக் கதைகள் மற்றும் தமிழர் படகு சரித்திரங்களும் காணப்படுகின்றன. இதற்கான தீர்வுகளை அரசு காணப்போகின்றதா இதனையும் உலகமும் ஊடகமும் பார்த்து கொண்டிருக்கின்றன.



# தமிழ் காப்போம் (நாடகம்)

செமஸ்ரியன் றொபின்சன்
சென்யூட் இளவாலை

தமிழர்களாகிய நாம் எமக்கென்று தனித்துவமான கலாசார விழுமியங்களையும் பண்பாடுகளையும் கொண்டு வாழ்ந்து வருகின்றோம். எமது கலாசார விழுமியங்களை நாம் பின்பற்றியதன் மூலம் பிற இனத்தவர்களும் பிற நாட்டவர்களும் எம்மை இனத்துவ ரீதியில் அடையாளம் காணவும் எம்மைப் பெருமைப்படுத்தவும், செய்துள்ளோம்.




எம் தமிழ் மரபுகளை வளர்க்கவும், கட்டிக்காக்கவும், பல தமிழ் அறிஞர்கள் தமது எண்ணங்கள், சிந்தனைகள், படைப்புக்கள் செயற்பாடுகள் மூலம் பாடுபட்டு இருக்கிறார்கள்.

ஆனால் இன்று எமது தமிழ் கலாச்சார விழுமியங்கள் எங்கே செல்கின்றது? நவநாகரீகங்கள் எமது கலாச்சாரத்தில் புகுந்து எமது கலாச்சார விழுமியங்களையும் எமது பண்பாட்டு நடைமுறைகளையும் விழுங்கியும் தன் எண்ணப்பாட்டிற்கு எம் இளைய சமுதாயத்தினை வளைத்துப் போடுகின்றது. இதனால் எம் உறவுகள் தமிழ் வளர்க்க நேரமின்றி, பல்வேறு தேவையற்ற விடயங்களில் நேரத்தை செலவிட்டு வருகின்றார்கள் தமிழை வளர்ப்பதற்காக எமது மூதறிஞர்களால் எமக்குத் தரப்பட்ட காவியங்கள், காப்பியங்கள், இலக்கியங்கள், சிந்தனைகள் எல்லாம் இன்று எந்தளவிற்கு தமிழை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது? எழுத்துப் பிழைகளாலும், கருத்துப்பிழைகளாலும் எம் தமிழ் தலைவால் அறுத்துக் கொலை செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

| | | |
|---|---|---|
| 01. தலைப்பு | : | தமிழ் காப்பியம் |
| 02. வகை | : | நவீன நாடகம் |
| 03. எழுத்துநெறியாள்கை | : | செமஸ்ரி றொபின்சன் (சென்ஜீட் இளவாலை) |
| 04. மேடையேற்றம் | : | "தமிழ் காப்போம்;" என்ற இந்த நவீன நாடகமானது 20/09/2014 அன்று இளவாலைத் திருமறைக் கலாமன்றத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ் விழாவில் முதன் முதலாக மேடையேற்றப்பட்டது" |

05. எழுதுவதற்கான பிண்ணனி :

இந்த சூழ்நிலையில் தமிழர்களாகிய நாம் எம் தமிழ் கலாச்சாரத்தினைக் காத்து வளத்தெடுக்க வேண்டும். எம் தமிழிற்காக எம் மூதறிஞர்கள் கொடுத்த அரும் பொக்கி'ங்களை எமது சந்நதியினருக்குக் கற்று கொடுத்து பூட்டப்பட்டு, புதைக்கப்பட்டு, ஒழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டிருக்கும் எம் தமிழைமீட்டு "தமிழ் காப்போம்" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற பிண்ணியில் என்னால் இந்த நாடகம் எழுதப்பட்டு நெறியாழ்க்கை செய்யப்பட்டது.

**(பாத்திரங்கள் : உரைஞர் , வேதாளம் , ஆள் 1-5, வள்ளுவர், ஔவை, பாரதியார், தாய் ,பிள்ளை , நவீன பெண் , ஐயர் , மக்கள்.)**
**(மேடையில் திரை நீக்கம் செய்யப்பட வேண்டிய பெயர் பலகை, கற்கும்பியின் நடுவே முளைத்த செடி, நடுவில் ஒரு பெரிய முருங்கை மரம் அதில் ஒரு வேதாளம் இருத்தல்)**

- **வள்ளுவர் பெட்டியொன்றைத் திறக்க முயற்சித்தல்**
- **பாரதியார் நிலத்தை தோண்டி கொண்டிருத்தல்**
- **ஔாவைார் சாக்கு மூட்டை ஒன்றை அவிட்டுத் தேடுதல்**

காட்சி:- 1

பாடல்

காலம் எங்கே செல்லுது
கலியுகம் கண்களை மூடுது
காவியங்கள் காப்பியங்கள் எல்லாம்
காற்றோடு பறந்து தொலைந்து போகுது
மூதறிஞர் மொழிகலெல்லாம்
பாதி வழியில் பலியாகுது
யாரைச் செல்லி நோவது
யாரிடம் சொல்லி அழுவது

உரைஞர்:- மரபுகள் மங்கிப் போட்டுது, மாண்புகள் மாண்டு போட்டுது, கலாச்சாரம் கசங்கிப் போட்டுது, நீதித் தராசுகளில் அநீதிகள் நிறுக்கப்படுகிறது, அதர்மத்தின் அகண்ட வாயில் தர்மங்கள் தள்ளப்படுகின்றது, மூத்தோர்கள் ,மூதறிஞர்களால், கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்கள்! செத்துக் கொண்டிருக்கிறது. மனம் விம்மி வெடித்து வெந்தனனில் வேகுகின்றது. எம் முதுசத்தை நெஞ்சிலே சுமக்க வேண்டியதுகள் வெஞ்சினத்துடன் அக்கறையின்றி நித்திரை கொள்ளுதுகள்.

வேதாளம்:- (சிரித்தல்......) என்ர சிரிப்பு எப்படி இருக்கு... எனக்கு சிரிக்க மட்டுமில்ல நடிக்கவும் **(நடித்தல்)** தெரியும். நல்லா இருக்குதா?

என்ர நடிப்பு. ஏய் …ஏய்….நீ வெக்கப்படுறாய். ஆக்கள் பாக்கினம். நீ வெக்கப்படுறாய். எனக்கேன் வெட்கம் நான் ஆடுவன் (**ஆடுதல்**), ஓடுவன் (**ஓடுதல்**), குறும்புகள் செய்வேன் (**குறும்புசெய்தல்**) ஏனென்டா? என்ர கண்களுக்கு உங்கள நல்லா தெரியுது. ஆனா…… உங்கட கண்களுக்கு நான் தெரியவே மாட்டேன். ஏனென்டா… நான் இருக்கிறது இந்த இந்த முருக்க மரத்தில (**சிரித்தல, ஓடிப்போய் முருங்கை மரத்தில் ஏறுதல்**) நான் விரல அசைச்சா முறிப்பெடுப்பினம் (**விரல் அசைத்தல்**)

**ஆள் 1 :-** சி.டி. கள் எடுத்துக்காட்டுதல்

**ஆள் 2 :-** Hand Phone; எடுத்துக்காட்டுதல்

**ஆள் 3 :-** சாராயப் போத்தல் எடுத்துக்காட்டுதல்

**ஆள் 4 :-** பீடி, கோலிப் எடுத்துக்காட்டுதல்

**ஆள் 4 :-** எங்கட இன்பம் எங்கட இந்த இரண்டு விரல்களுக்கிடையில இருக்கு, குளிரென்டா, பனியென்டா, ஒன்டை எடுத்து வாயில வைச்சா சும்மா சுழுத்தா இருக்கும். குந்தி இருக்கேக்க ஒன்டப் பத்த வைச்சு வாயில பிடிச்சா கற்பணைகள், கவிதைகள், பல ஆயிரம் எண்ணங்கள் உதிக்கும்.

**ஆள் 3 :-** இது எங்கள் அமிர்த பாணம். எடுத்தா இன்பம். திறந்தா ஆனந்தம். அடிச்சா பேரின்பம்.

**ஆள் 2 :-** உலகம் உள்ளங்கையில டைச் பண்ணினா கண்ணைக் குளிர வைக்கும். உடம்பிற்கு உட்சாகம் தரும். எனக்கு இப்ப ஏதோ செய்யுது.

**ஆள் :-1** என்னில 1000 சுப்பஸ்ரார், 800 உலக நாயகன், 500 இளைய தளபதி, 300 தலை… அது…தெரியுதா? கன்சிகா, நயன்தாரா, சிம்ரன், ஜோதிகா எல்லாரும் என்ர கனவுக் கண்ணிகள். பழம் பெரும் நடிகர் நடிகைகள் புதுபெரும் நடிகர் நடிகைகள் …. ஓங்கி அடிச்சா ஒன்டரைதொன் வெயிற்றடா பாக்கிறியா… பாக்கிறியா… பாக்கிறியா… இவயள் எல்லாரும் எங்கட பொழுதைப் போக்கிற தெய்வங்கள்.

**வேதாளம் :-** (சிரித்தல்………………)
(ஆட்கள் விலகிச் செல்லுதல்)

காட்சி :- 2

**வள்ளுவர் :-** அகர முகர எழுத்தெல்லாம்
ஆதிபகவான் முதற்கே உலகு

மலர் மிசை ஏகினான் மானடி சேர்ந்தான்
நிலமிசை நீடு வாழ்வார்

ஔவை:- ஆத்தி சூடி அமர்ந்த தேவனை ஏற்றி ஏற்றி தொழுவோம் நாமே சூது விரும்பேல், செய்வன திருந்தச் செய், சேரிடம் அறிந்து சேர் சை என திரியேல்

பாரதியார்:- முத்தியென்றொரு நிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையும் முனரும் முனர்வமைத்தாய்
பக்தி என்றொரு நிலை வகுத்தாய் - எங்கள்
பரமா ... பரமா..... பரமா

வள்ளுவர்:- தனக்குவமை இல்லாதான் தான் சேர்ந்தான் கல்லால்
மனக்கவலை மாற்ற அரிது

ஔவை:- மொழிவது மறுக்கின் அழிவது கருமம

பாரதி:- வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை அவை பேருக்கு ஒரு நிறமாகும்
சாம்பல் நித்தொரு குட்டி கருஞ் சாந்து நிறத்தொரு குட்டி
பாம்பின் நிறத்தொரு குட்டி வெள்ளைப் பாலின் நிறத்தொரு குட்டி

காட்சி:-3

தாய்:- பிள்ளை செல்லம், குட்டி, எங்கையப்பா நிக்கிறாய் ஓடி வான ஓடி வான பாடம் சொல்லித்தர

பிள்ளை:- வாறனம்மா **(புத்தகத்துடன் ஓடி வருதல்)**

தாய்:- அ .., ஆ..

ஆள்:-1 ஆச்சி மசாலா வழங்கும் "சொந்த பந்தம்"

மக்கள் 01 : தொடங்கிற்று ............ (ஆட்கள் பின்னால் ஓடி வருதல்)

தாய்:- இ....................

ஆள் :-2 உங்கள் பற்களை சுத்தமாகவும், வடிவாகவும், உறுதியாகவும், வைத்திருக்கும் சிக்னல் வழங்கும் "வள்ளி"

மக்கள் 02 : அம்மா சொதியை இறக்கிட்டு ஓடிவானை பாட்டுக் கட்டம் முடிஞ்சுதனை (ஆட்கள் பின்னால் ஓடிவருதல்)

தாய்:- பிள்ளை கவனியடா இஞ்ச பார் புட்டு அவிக்க வேண்டும்.
ஈ...............

ஆள்:- 3 விபில் சோப் வழங்கும் "தென்றல்"

மக்கள் 03 : ராசாத்தி செபமாலையை நிப்பாட்டிட்டு வாடி நாடகம் தொடங்கிற்று (ஆட்கள் பின்னால் ஓடிவருதல்)

(தாய் நாடகம் பார்த்தல் பிள்ளையும் சேர்ந்து பார்த்தல்)

வள்ளுவர்:- என் எதிர் கால சந்ததிக்காய் என் எண்ணத்தில் உதித்த அனைத்தையும் இரவு பகல் பாராது எழுத்துக்களாய் வடித்தேன். இன்று அவற்றை நானே தேடுகின்றேன்.

காட்சி:-4

(ஒரு பெண்ணை பல்லக்கில் 4 பேர் துக்கி வருதல்)

(நவீன பெண் கண்ணாடியில் முகத்தை பார்த்தல், அலங்கரித்தல்)

**நவீன பெண்:-** எங்கள ஆயிரம் கண்கள் பார்க்குது அப்ப நாங்கள் எங்கள வடிவா அலங்கரிக் வேனும் சரி தானே?....

எங்கட நடை உடை எல்லாம் ஸ்ரைலா இருந்தால்த்தான் நாலு பேர பின்னால இழுபட வைக்கலாம் சரி தானே?......

ஒரு குடை, ஒரு கான் போன், எங்கட வடிவுக்கு அணிகலங்கள் சரி தானே?...

நாங்கள் குத்தாட்டம் ஒன்டு போட்டா எங்கட அங்க அசைவு பார்க்க ஆயிரம் பேர் ஓடி வருவினம் சரி தானே?....

**(பல்லக்குடன் தூக்கிச் செல்லுதல்)**

பாரதி:- உன் விடுதலைக்காய் கவி படித்தேன். எம் பெண்ணினம் எப்படி இருக்க வேண்டும் என்றும் கூடஎழுதியுரைத்தேன். நான் கற்பனையில் கண்ட புதுமைப் பெண்ணைத் தேடுகின்றேன்.

காட்சி :- 5

**(திறப்பு விழா ஆய்த்தம்)**

ஒருவர்:- எங்கலால் புதிதாக நிர்மானிக்கப்பட்ட எமது பெருமைகளை, எமது தனித்துவத்தை, எமது தொண்மைகளை எடுத்து விளக்கும் இப் புதிய கட்டிடத் தொகுதியானது எமது பெரும் தலமை அவர்களால் இப்பொது சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படுகின்றது.

(தழிழ் பிழையுடன் பெயர் பலகை தெரிதல் "காளாசார நிளயம்"

விருந்தினர்கள் சிலர் மேள தாளத்துடன் அமைத்து வருப்படுதல்

விருந்தினர் திரையை நீக்குதல் சுற்றிப் பார்த்தல் ஈ, போதல்

ஔவை:- அரச சபைகளிலும் ஆய்வரங்குகளிலும் அர்த்தமுள்ள தமிழ் கொடுத்தேன் செத்துக் கொண்டிருக்கும் எங்கள் செந்தமிழைத் தேடுகின்றேன்.

உரைஞர்:- எங்கே செல்லுது எங்கட பண்பாட்டு விழுமியங்கள் பல்லக்கில் தூக்கப்பட வேண்டியவர்கள் எங்கே? எம் இனத்திற்காக இவர்களால் வழங்கப்பட்ட வேதங்கள், கவிதைகள், அறிவுரைகள், ஆலோசனைகள், வழி நடத்தல்கள் எங்கே? ....... எங்கையப்பா நேரம் எங்கட ஆக்களுக்கு தமிழ் வளர்க்க். சீரியல், சினிமா எல்லாம் எங்கட நேரத்த விழுங்கிக் கக்குது தமிழ் தலை வால் அறுத்துக் கொலை செய்யப்படுகுது. எங்கள் விழுமியங்கள் சுறன்டப்பட்டு குழு மோதல்..... (காட்சி இடம்பெறல்) , வாள் வெட்டு.....(காட்சி இடம்பெறல் , மை அடித்தல்... (காட்சி இடம்பெறல் , கான் போன்கள், வாகணங்கள் (காட்சி இடம்பெறல் என்டு புதிய கலாச்சாரம் எங்களுக்குள் புகுந்திட்டுது.

வேதாளம்:- **(சிரித்தல்)** என்ர குறும்புகள் குசும்புகள் ஐயோ எத்தனை எத்தனை என்ர திரு விளையாடல்கள் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகுது. ஆனால் சிலருக்கு எரியுது. என்ர சிரிப்பில மயங்குதுகள், என்ர நடிப்பில கவருதுகள், என்ர மடியில் படுக்க தவிக்குதுகள **(சைகை காட்டி ஆக்களை இழுத்தல்)** எப்புடி என்ர மடியில படுக்க தவிக்குதுகள் **(சிரித்தல்)** உங்கட கண்களுக்கு நான் தெரியவே மாட்டன் **(சிரித்தல்)**

உரைஞர்:- எங்கட எண்ணங்களை சிதைத்து எரிகிற நெருப்புக்குள் தள்ளுற இந்த வேதாளத்திற்கு முதலில முடிவு கட்ட வேனும் (உரைஞர் வெளியேறுதல்)

ஔவை:- மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவு என்டு நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தர்மத்தை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.

வள்ளுவர்:- மனத்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்
இனத்தூய்மை துவா வரும்

பாரதி:- எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்
பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பணியே போல
நன்னிய நின்முன்னிங்கு
நசிந்திடல் வேண்டுமன்னாய்

காட்சி:- 6

(ஐயர் ஒருவர் மேடைக்கு வருதல்)
ஓம் ...... ஓம் ......
ஓம் திரியாய நமக
ஓம் சங்காய நமக

உரைஞர்:- (அர்ச்சனை தட்டுடன் வருதல்) வேதம் நிலைக்க வேண்டும், பேதம் ஒளிய வேண்டும், சிதைந்து போயுள்ள செந்தமிழ் சீர் பெற்று ஓங்க வேண்டும் அதற்கு இப் போ ஓர் அர்ச்சனை செய்ய வேண்டும்.

ஐயர்:- ஓம் வேதாய நமக
ஓம் தீயாய நமக
ஓம் தமிழாய நமக
(வேதாளம் மெல்ல மெல்ல கிழே விழுந்து அழிதல்)(கிழே இருப்பவர்கள் திடமாக எழுந்து நிற்றல்)

வள்ளுவர்:- ஓ.. என் இனமே உனக்காக எம் தமிழ் நலனிற்காக தமிழ் வளர்வதற்காக அன்று இரவு பகல் என்று நான் உழைத்தேன். வாழ்க்கைக்கான பல விழுமியங்களை கற்றுக் கொடுத்தேன் அவற்றைத் தொலைத்து நீ இன்று என்ன செய்கிறாய்?

பாரதியார்:- என் எண்ணங்களால் நான் விதைத்துவிட்ட எம் இனத்தின் கலாச்சாரம் காக்கும் தமிழ் பெண்கள் எங்கே? என் எண்ணப்படைப்புக்களால் தமிழ் வளர வேண்டும் என்று என்னையே தியாகம் செய்தேன். இன்று நீ என்ன செய்கிறாய்?

ஔவை:- பற்பல நூல்களைப் படைத்து பல ஆயிரம் படிப்பினை போதித்து என் தமிழ் வளர உழைத்தேனே கொலை செய்யப்படும் எம் தமிழை காக்க, மீட்க இன்று நீ என்ன செய்கிறாய்


உரைஞர்:- புறப்படு தயக்கப்படாதே உன்னைச் சுற்றி ஆயிரம் இடர்கள் தடை போடுது. பார் இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் தன் வேர் பரப்பி தனக்கான ஓர் வழியினைத் தேடி தலை நிமிர்ந்து நிற்கும் இந்த செடியைப் பார் (மேடையில் இருக்கும் செடியைக் காட்டுதல்) ஒரு செடியே இடர் தாண்டி தலை நிமிர்ந்து நிற்குது என்டால் நீ எவ்வளவு மேலானவன். புறப்படு பூட்ப்பட்டிருக்கும், புதைக்கப்பட்டிருக்கும், ஒழிக்கப்பட்டிருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக சிதைக்கப்பட்டு பிரிக்கப்ட்டிருக்கும் எம் தமிழை வளர்த்தெடுப்போம்.
(சிலர் வள்ளுவருடன் இணைந்து பெட்டியை திறத்தல், அதற்குள் 'த ' எழுத்து இருத்தல்

சிலர் பாரதியாருடன் இணைந்து தோண்டுதல் அதற்குள் 'மி' எழுத்து இருத்தல்
சிலர் இணைந்து ஔவையுடன் தோடுதல் அதற்குள் 'ழ்' இருத்தல்.
எல்லோரும் இணைந்து "தமிழ்" என்ற சொல்லை உருவாக்குதல்.)

(எல்லோரும் உறை விலையில் நிற்றல்)

உரைஞர்:- சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - எந்தன்
சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்
ஓடையிலே என் சாம்பல் ஓடும் போதும்
ஏன் தமிழ் சல சலத்து ஓட வேண்டும்

நன்றி



# பரிசுப்புதிர்

பொங்கல் விழாவில் பெறுமதி வாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ள இப்புதிர் போட்டியில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்.

போட்டி விதிமுறை :-

1. ஒவ்வொரு நிரல், நிரைகளிலும் 1 தொடக்கம் 9 வரையான இலக்கங்கள் இருக்க வேண்டும்.
2. 9 சிறிய சதுரங்களை கொண்ட ஒவ்வொரு பெரிய சதுரங்களினுள்ளும் 1தொடக்கம் 9வரையான அனைத்து இலக்கமும் இடவேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | | 1 | | 7 |
| | | | | 5 | 6 | 9 | | |
| | | 5 | | | | | | |
| | 2 | | | 6 | | | | 3 |
| 5 | | | 1 | | 4 | | | 8 |
| 3 | | | | 8 | | | 7 | |
| | | | | | | 8 | | |
| | | 1 | 2 | 4 | | | | |
| 4 | | 9 | | | 8 | | | |


இந்த புதிரை பூர்த்தி செய்து எதிர்வரும் 10.01.2015இற்கு முதல் அனுப்பி வையுங்கள். வெற்றியாளர்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "தைப்பொங்கல் விழாவன்று" (15.01.2015) பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :- கலைமகள் படிப்பகம்
நாவலடிச்சந்தி,
பிரதான வீதி,
இளவாலை.

(உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் குறிப்பிடவும்.)

# நிரோ வெதுப்பகம்

வீட்டு தேவைகளுக்கும், மற்றும் விற்பனைக்குமான
பாண், பணிஸ் வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் தரமானதுமாக
பெற்று கொள்ளலாம்



கல்லூரி வீதி,
இளவாலை.

# லிங்கம் ஸ்ரோர்ஸ்
# LINGAM STORES

சகலவிதமான பலசரக்குப் பொருட்கள், மினசாரப் பொருட்கள்,
கட்டிடப் பொருட்கள் சைக்கிள உதிரிபாகங்கள்,
அழகுசாதனப் பொருட்கள், பாடசாலை கற்றல் உபகரணங்கள்
போன்றவற்றை ஒரே கூரையிக் கீழ்
பொற்றுகொள்ள நாட வேண்டிய ஒரே இடம்

பிரதான வீதி, இளவாலை

நகரசபை,பிரதேச சபை சட்ட விதிகளுக்கு அமைவாக சிறந்த முறையில் சகல விபரங்களுடனும் நுட்பமாக கட்டட வரைபடம் வரைந்து கொடுக்கப்படும்.

**பொன்ராசா மதியழகன்**
**உத்தரவு பெற்ற படவரைஞர்**
**(வலிவடக்கு பிரதேச சபை ,வலி தென்மேற்கு பிரதேச சபை)**
**மயிலங்கூடல் இளவாலை**
**தொ. இல: 0779788730**

# கென்றீசியன் அறிவகம்

Photocopy
printing
Laminating
Binding
Typing

Phone call
School instruments
Stationary
Browsing
Mobile reloads and cards
DVD/CD



கல்லூரி வீதி இளவாலை
தொ.இல : 0212211985
0772487673


P53

# இளவாலையின் பதிவுகளில் இருந்து....

- சமீபமாக இடம்பெற்ற நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பு



இளவாலை எழுச்சியகத்தில் இடம்பெற்ற சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும்.



இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் பாலன் பிறப்பு.



இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற நாவலர் சிலை திறப்பு விழாவின் போது.....



புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெற்ற ஒளி விழாவின் போது...



புனித வளனார் ஆண்கள் விடுதியில் லீலீ மலர் 2 என்னும் புத்தகம் 30.11.2014 அன்று நடைபெற்ற ஒளிவிழாவில் வெளியிடப்பட்டது.



இளவாலை திருமறை கலாமன்றத்தின் நத்தார் போட்டி 2014



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்